தமிழகம்

மலர் - 5

டிசம்பர் - 1931

JL
O31m N27
N31.5
116421

REGD. NO. M. 2705 TAMILAGAM 21st DEC. 1931

# தமிழகம்



பிரஜோற்பத்தி ௵ மலர் 5. உள்நாடு விலை 4 அணா.
மார்கழி ௴ வெளிநாடு விலை 6 அணா.

SOLE DISTRIBUTORS
FOR
SOUTHERN INDIA




**C. KRISHNASWAMI NAIDU**
2 105, ARMENIAN STREET
**MADRAS**



## "தமிழகம்" கிடைக்குமிடங்கள்.

ரயில்வே ஸ்டேஷனிலுள்ள ஹிக்கின்பாதம்ஸ் & சுதேசமித்திரன் புஸ்தகசாலைகள்.

எம். சிதம்பர தேசிகர்,
சிவன் கோவில் தெருவு, காரைக்குடி.
எஸ். வாமதேவ சாஸ்திரி,
திருவண்ணாமலை.
கே. சுப்பையா பண்டாரம்,
கோட்டார்.
என். வி. ஆர். நடேசன்,
கோட்டையூர்.
நவீனகதா புத்தகசாலை,
ரெங்கோன்.
கே. வி. நாராயண அய்யர்,
திண்டுக்கல்.
எம். காசிநாதன்,
தேவக்கோட்டை.
ஓ. கே. மோகிதீன் சாகிப்,
கொளம்பு.
வி. அப்பாவு செட்டி அண்டு சன்ஸ்,
புத்தக வியாபாரிகள், பெங்களூர்.
M. N. முத்து குமாரசாமி பாவலர்,
திருப்பாபுலியூர்.
N. L. ஐயர், தஞ்சாவூர்.
இண்டோ மலையன் டிபோ,
பினங்கு.
M. A. கிருஷ்ணசாமி பிள்ளை,
மதுரை.
ஈஸ்வரம் பிள்ளை, தென்காசி.
K. சீனிவாசன்,
தெப்பகுளம், திருச்சி.
ச. ம. சேகாதர் சாஹிப்,
சோலியா தெரு, பினங்கு.
கி. ரங்கநாயக்கலு, சிதம்பரம்.
எ. வி. கன்னைய நாயுடு, ஆரணி.
தர்மலிங்கம் பிள்ளை, திருவாரூர்.
நாருயணசாமி, திருப்பத்தூர்.
ஷேக் உசேன், காரைக்கால்.
சரவண ஐயர், திருச்செந்தூர்.
கோவிந்தசாமி, பாபநாசம்.
சாரங்கபாணி, கும்பகோணம்.
பரமசிவம் பிள்ளை,
திருநெல்வேலி.
குமாரசாமி பிள்ளை,
கோவில்பட்டி.
கோவிந்தராஜு முதலியார்,
வேலூர்.
எ. எஸ். வெங்கிட ராமன்,
தூத்துக்குடி.
பாலகிருஷ்ண ஐயர்,
சேலம்.
பழனிகுமார பிள்ளை,
விருதுநகர்.
லிங்கப்ப கௌண்டர்,
பொள்ளாச்சி.
சபாபதி பிள்ளை, புதுக்கோட்டை.
சிதம்பரம், ராமநாதபுரம்.
ராஜா பழனியப்ப முதலியார்,
சேர்மாதேவி.
ஞானப்பிரகாசம்,
உதகமண்டலம்.
பார்த்தசாரதி நாயுடு,
செங்கோட்டை.
கிருஷ்ணசாமி,
மன்னார்குடி.
கோவிந்தசாமி,
நாகப்பட்டணம்.
நாச்சி முத்து, திருப்பூர்.
பூவலிங்கம் பிள்ளை,
ஸ்ரீ வைகுண்டம்.
வெங்கிடாசலம் பிள்ளை, ஈரோடு.
சக்கரபாணி, திருக்கோயிலூர்.
சுப்பிரமணிய பிள்ளை,
திருத்துறை பூண்டி.
முத்துசாமி, சாத்தூர்.
தங்கவேலு முதலியார்,
காட்பாடி.
விஸ்வநாத சேர்வை,
திருப்பத்தூர் (ராமநாதபுரம்).
என். என். மருதப்பா,
மருதக்குடி.
கே. வி. ராஜம் அண்டு கம்பெனி,
உத்தமபாளையம்.
சௌந்தரராஜுலு நாயுடு,
பொன்மலை.
பழனியாண்டி மூப்பன்,
பாலக்காடு.
தியாகராஜ பிள்ளை,
கொரடாச்சேரி
ஆத்மநாதன்,
குற்றாலம்.

மற்ற விடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

"தமிழகம்" ஆபீஸ் 1, ராமசாமி தெரு, ஜீ. டி. சென்னை.

460

# தமிழகம்

நேர்த்தியான படங்களுடன் கூடிய
ஓர் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை

மலர் 5 மார்கழிமீ பிரஜோத்பத்திஸு

ஆசிரியர்:
எ. கே. சந்திரசேகரன்

ஆபீஸ்: 1, ராமசாமி தெருவு, ஜீ. டி. சென்னை.

166421
031 N27
N31

# "தமிழகம்."

| உள் நாடு சந்தா. | ரூ. | அ. | பை. | வெளி நாடு சந்தா. | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| தனி பிரதி | 0 | 4 | 0 | தனி பிரதி | 0 | 6 | 0 |
| 6 மாதம் | 1 | 8 | 0 | 1 வருஷம் | 4 | 0 | 0 |
| 1 வருஷம் | 2 | 8 | 0 | ஜீவிய சந்தா | 40 | 0 | 0 |
| ஜீவிய சந்தா | 30 | 0 | 0 | | | | |

## விளம்பர விகிதம்.

| | | | | |
|---|---|---|---|---|
| முழு பக்கம் ஒரு தடவைக்கு | ரூ. | 20 | 0 | 0 |
| அரை பக்கம் ,, | ,, | 12 | 0 | 0 |
| கால் பக்கம் ,, | ,, | 7 | 0 | 0 |
| மூன்று வர்ணத்தில் கடைசீ பக்கம் | ,, | 50 | 0 | 0 |
| ,, உள் பக்கம் | ,, | 40 | 0 | 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

மானேஜர் :—

**தமிழகம்,**
1 ராமசாமி தெரு, ஜி. டி., சென்னை.

# தமிழகம்

—:o:—

## அட்டவணை

—:o:—


| விஷயம் | | பக்கம் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|---|---|
| இந்தியாவின் விதி | ... | 1 | ரேடியோ சங்கீதம் | ... | 25 |
| மின் வெட்டு | ... | 3 | விகடன் | ... | 31 |
| மகாத்மாவின் தரிசனம் | ... | 9 | சிறுவர்—சிறுமியர் | ... | 33 |
| உலகச் செய்திகள் | ... | 10 | வைத்தியம் | ... | 36 |
| சிங்கமும், சண்டெலியும் | ... | 11 | தாய்மொழிப் பயிற்சி | ... | 39 |
| பிரபல வியாபாரி | ... | 13 | மாமிசமலை | ... | 42 |
| ஆசிரியர் பகுதி | ... | 14 | விஞ்ஞான விசித்திரங்கள் | ... | 45 |
| விவசாயம் | ... | 17 | நிர்வாண இயக்கம் | ... | 47 |
| மனைவி மணாளன் மன்னிப்பு | ... | 19 | காதலின் கதி | ... | 49 |
| சாமுத்திரிகா லக்ஷணம் | ... | 21 | சரோஜனி நாடகம் | ... | 53 |


Edited & Published by A. K. Chandrasekaran, 1, Ramaswamy St., G.T. Madras
& Printed at Lodhra Press, Egmore, Madras.


*Run a Keen eye over*

**THESE TWO ANNOUNCEMENTS**

PRESCRIPTION SERVICE

*An up to date Service built upon*

An expert organiser is available for those who like their orders to be executed quickly and efficiently. Splendid quality and reasonable prices coupled with prompt delivery make this service foremost in the line.

**THEY MEAN A LOT TO YOU.**

*Then why not give us a Trial.*



**K. RATNA & CO.**
OPTICIANS,
305, ESPLANADE,
**MADRAS.**

THE NEW RATNA PENS

*Judge for yourself.*

There is a Ratna Pen to suit each pocket. Whether you choose Black, Tan or mottled coloured pen you will have a pen of which you can be proud.

All pens are tested at various stages by the manufacturers. Get a Ratna Pen, compare the price with any other pen and judge for yourself.



குழந்தைகள் விளையாட்டு—'ரயில் வண்டி'

Blocks Prepared by M. C. Appaswamy Chetti & Co.




# இந்தியாவின் விதி?

—:o:—

லண்டன் மகாநாடு கூடி முடிந்துவிட்டது. அம் மகாநாட்டுக்குச் சென்றிருந்த மகாத்மா காந்தியும் லண்டனை விட்டு பாரிஸ், ஜெனிவா, இத்தாலி முதலிய விடங்களில் யாத்திரை செய்து விட்டு இந்தியாவுக்கு புறப்பட்டு விட்டார். ஆனால் இந்தியாவின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய லண்டன் மகா நாட்டின் முடிவு என்ன வென்பதை கவனிப்போம்.

◆ ◆ ◆

லண்டன் மகா நாட்டில் இந்தியாவுக்கு சுயராஜ்யம் வந்து விடுமென எவரும் எதிர் பார்க்கவில்லை. மகாத்மா காந்தியும் இதை எதிர் பார்த்து லண்டன் செல்லவில்லை. இதை மகாத்மாவும், மகா நாட்டின் முடிவில் பச்சையாகவே கூறிவிட்டார். லண்டன் மகா நாட்டுக்குச் சென்றிருந்த மற்ற பிரதிநிதிகளில் பலர் ஏமாற்றமடைந்தனர். இந்திய சுயராஜ்ய சம்மந்தமாக பிரிட்டிஷாரின் நோக்க மென்னவென்பதைத் திட்டமாகக் கூறிவிட வேண்டுமென்று மகாத்மா காந்தி ஆதிமுதல் வற்புறுத்தி வந்தார். இது வரையில் பிரிட்டிஷார் அதை மூடு மந்திரமாகவே வைத்து வந்தார்கள். லண்டன் மகா நாட்டில், மைனாரிடி கட்சியைக் கிளப்பி விட்டு சீர்குலைத்தனர். அதன் பின் லண்டன் மகாநாடு வெற்றி பெறுவதற்கு மைனாரிடிகளின் தகராறே அடிப்படையான காரண மென்ற பாவத்தையும், பழியையும் இந்தியப் பிரதிநிதிகள் பேரில் சுமத்திவிட்டார்கள். மகா நாட்டுக்குச் சென்றிருந்த ஒரு சிலர், வெள்ளையரின் சூழ்ச்சியில் சிக்கிக் கொண்டது நமது துர் அதிர்ஷ்டமே! கங்கணம் கட்டிக்கொண்டிருந்த கன்சர்வேடிவ் கக்ஷியார்களின் தந்திரத்தினால் லண்டன் மகாநாடு முறிந்து விட்டது.

◆ ◆ ◆

இறுதியாக லண்டன் மகாநாட்டின் முடிவில் பிரிட்டிஷ் பிரதமமந்திரி ஸ்ரீ. ராம்சே மக்டனல்ட், பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பாக ஒரு நீண்ட அறிக்கையை வாசித்து முடித்தார். அறிக்கை விளக்கெண்ணை தான்! பட்டும் படாமலும், குறிப்பிட்டு ஒன்றையும் கூறாமலும் மழுப்பிவிட்டார். இந்தியாவுக்கு ஐக்கிய சர்க்கார் ஆட்சியே கொடுக்கவேண்டு மென்பது சர்க்காரின் நோக்க மென்றும் அதற்கு மைனாரிடிகள் தகராறும் சமஸ்தானங்கள் தகராறுமே முட்டுக் கட்

டையாக நிற்பதாகவும் மழுப்பினார். இந்திய சட்டசபையில் பொறுப்பாட்சி கொடாமல் மாகாண சுயாட்சியை உடனே கொடுத்து இன்னும் 3 வருஷங்களுக்கு ஐக்கிய சர்க்கார் ஆட்சியை நிர்ணயிப்பதென்பது பிரிட்டிஷாரின் பேராவலென வீசினார். நிதி, ராணுவம், அந்நிய நாட்டு சம்பந்தங்கள், இந்திய சர்க்கார் கடன்கள் முதலியனவற்றைப் பற்றி ஆராய்வதற்கு மூன்று புதிய கமிட்டிகள் இந்தியாவிலும், இங்கிலாந்திலும், ஒரே சமயத்தில் வேலைசெய்து ஒரு திட்டத்தைத் தயாரிக்குமெனவும், அதற்கிடையில் இந்தியர்கள் மூச்சு விடக்கூடாதெனவும் கூறிவிட்டார். சிந்து மாகாணத்தை, பம்பாய் மாகாணத்திலிருந்து பிரித்து தனி மாகாணமாக ஏற்படுத்திவிட வேண்டுமெனவும், எல்லைப்புற மாகாணமாகிய பெஷாவார் மாகாணத்தை தனிமையாக ஒரு கவர்னர் நிர்வாகத்துக்கு விட்டுவிட பிரிட்டிஷ் சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்களெனவும் வெகு ஸ்பஷ்டமாக அறிக்கையை படித்து முடித்தார். இவைகளே அறிக்கையில் கண்ட முக்கிய அம்சங்கள். இந்தியாவின் விதியையும் இவ்வறிக்கையில் அடக்கி மூன்றாவது மகாநாடு கூட்ட ஏற்பாடு செய்து விட்டார்.

◆ ◆ ◆

ஐக்கிய சர்க்கார் ஆட்சியை சதா கனவு கண்டு கொண்டிருந்த மிதவாதிகள் இந்த "பொன் மானை" கண்டு மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடினார்; பிரிட்டிஷாரையும் வாயார வாழ்த்தினார்கள். ஆனால் மகாத்மா காந்தி திட்டமாக ஒரு அபிப்பிராயத்தையும் வெளியிடாமல் சுருங்கக் கூறி விளங்க வைத்தார். முதன் மந்திரி அறிக்கை பிரிந்து போகும் வழியாக யிருக்கிறதென்றார். நிதி, ராணுவம், வெளி நாட்டு சம்பந்தங்களில் உரிமையில்லாத எந்த ஆட்சியையும் காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லையென பசுமரத்தாணி போல் பிரிட்டிஷாரின் மனதில் பதியவைத்து விட்டார். இந்த அறிக்கையைக் கண்டதும் வெள்ளையரும் ஏமாற்றமடைந்தனரெனக் கூறலாம். மகாத்மா இந்தியா சேர்ந்த பின்னரே காங்கிரஸுடன் கலந்து ஆலோசித்து ஒரு அபிப்பிராயத்தைத் திட்டமாகத் தெரிவிப்பார். இனிமேல் எந்த விதமான நடவடிக்கைகள் காங்கிரஸ் மேற்கொள்ளு மென்பது தெரியவரும். மீண்டும் சட்டமறுப்பு ஆரம்பமாகுமோவென அஞ்சவேண்டி யிருக்கிறது. சட்டமறுப்பு ஒரு வேளை ஆரம்பமானால் இந்தியாவின் நிலைமை எவ்விதமாக முடியுமென்பதைப் பற்றி நாம் திட்டமாக ஒன்றும் ஜோசியம் கூறமுடியாது.

◆ ◆ ◆

பிறித்தாளும் தந்திரத்தில் கை தேர்ந்த பிரிட்டிஷாரின் நோக்கத்தை இங்கு அதிகமாக விஸ்தரிக்க வேண்டியதில்லை. முஸ்லிம்களைத் தட்டிக் கொடுத்து இந்தியாவை ஆட்டி வைக்கவே புதிய இரு முஸ்லிம் மாகாணங்களை சிருஷ்டித் திருக்கிறார்கள். சிந்துவிலும், பெஷாவாரிலும் முஸ்லிம்களே பெரும் பான்மையாய் இருக்கிறார்களென்பதை மறந்துவிடக் கூடாது. லண்டன் மகாநாடு இன்னமும் 3 குட்டிக் கமிட்டிகளைப் பெற்றெடுத் திருக்கிறது. ஏற்கனவே 35 லக்ஷம் ரூபாயை லண்டன் மகாநாட்டுப் பூதம் விழுங்கிவிட்டது. இக் குட்டிக் கமிட்டிகள் இன்னமும் எத்தனை லக்ஷத்துக்கு உலைவைக்க இருக்கின்றனவோ நாம் அறியோம். மேலும் இக் குட்டிக் கமிட்டிகளைக் கொண்டு இன்னமும் காலம் கடத்திக் கொண்டு போக வேண்டுமென்பதே பிரிட்டிஷாரின் அந்தரங்க நோக்கமென்பதை இங்கு எடுத்துக் காட்ட வேண்டியதுமில்லை. இந்திய தலைவிதியை நிர்ணயிக்கப் புறப்பட்ட லண்டன் மகாநாட்டின் கதி இந்நிலைமையில் வந்து முடிந்திருக்கிறது நம் துர் அதிர்ஷ்டமேயாகும்.




**குட்டு வெளிப்பட்டது:**—லண்டன் மகாநாட்டில் பிரதம மந்திரி வெளியிட்ட அறிக்கையின் குட்டு, அது பிரிட்டிஷ் பார்லிமெண்டில் விவாதத்திற்கு வந்தபோது வெளிப்பட்டது. முதன் மந்திரி மாக்டனால்டு மனதில் அடக்கி வைத்த விஷத்தை அதில் கக்கிவிட்டார். இந்தியாவுக்கு சுயேச்சைகொடுக்க வேண்டுமென்பது பிரிட்டிஷாரின் நோக்கமல்ல வென்பதைக் கூறி விட்டார். குடியேற்ற நாடுகளுக்குரிய சுதந்திரம் இந்தியாவுக்குக் கிடையா தென்றும் அது சம்பந்தமாக பார்லிமெண்டில் விவாதத்திற்கு வந்த "வெஸ்ட் மினிஸ்டர் சட்டம்" இந்தியாவை சாராதென்றும் தன்னை மறந்து கூறி விட்டார். அன்றி இந்தியா சுயேச்சையை விரும்பவில்லை யென்றும் வாய்கூசாமல் கூறினார். ஸ்ரீ மாக்டனால்டு கூறியதின் அர்த்தத்தை அவரே அறிவாரா? வென்று கேட்கிறோம். விடிய விடிய ராமாயணங் கேட்டு, விடிந்த பின் சீதைக்கு மாப்பிள்ளை யார்" என்று கேட்ட முட்டாளின் கதையாகவே இருக்கிறது.

**வெள்ளை "பபூன்":**—நாடகங்களுக்கு ஒரு பபூன் எப்பொழுதும் அவசிய மென்பதை நண்பர்கள் அறிவார்கள். அதேபோல் அரசியல் நாடகங்களுக்கும் சில பபூன்கள் தோன்றி நடிப்பது வழக்கம். பிரிட்டிஷ் அரசியல் நாடகங்களுக்கு ஸ்ரீ சர்ச்சில் ஒரு பபூனாக இருக்கிறார். பபூன்கள் பேசுவது நகைப்பைக் கொடுக்குமே யொழிய அதில் சாரமிருப்பது அரிது. பபூன் ஆக்டுக்குப் பொதுவாக நல்ல உளறு வாயர்களே பொறுத்த முடையவர்கள். பிரிட்டிஷாருக்குப் பபூனாக உளறுவாய் சர்ச்சில் அகப்பட்டிருக்கிறார். இவருக்கு இந்தியா வென்றால் எட்டிக்காய்தான். இந்தியா சம்பந்தமாகப் பிரிட்டிஷ் பார்லி மெண்டிலும் சரி, அல்லது வெளியிலேனுஞ்சரி, வாயில் வந்தபடி கண்டவாறு உளறிக் கொட்டுவதே வழக்கம். இதேபோல் பார்லி மெண்டில் இந்தியா சம்பந்தமாக முதன் மந்திரி வெளியிட்ட அறிக்கை விவாதத்திற்கு வந்தபோது அதற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து சர்க்காரைக் கண்டிக்கப் புறப்பட்டார். அவர் கோஷ்டியைச் சேர்ந்த "கிறுக்கு"க் கொண்ட சர் கிரடாக் ஒத்து ஊதினார். பிரிட்டிஷ் மந்திரிகளின் அங்கீகாரம் பெற்ற பின்பே முதன் மந்திரி தமது 'ஓலிய' அறிக்கையை வெளியிட்டாரென்பது இப்பிரகஸ்பதிகளின் மூளையில் படாமற் போனது விந்தையாகவே இருக்கிறது.

**ராணுவ அமுல்:**—இந்தியா விடுதலையில் அளவு கடந்த ஆர்வமுள்ள சில இந்தியர் பலாத்காரத்தி லிறங்கி, வெள்ளையரைப் பழிவாங்கக் கங்கணம்கட்டி இருக்கிறார்கள். இது அறிவற்ற செயலேயாகும். பலாத் காரத்தால் இந்திய விடுதலை தடைப்படுமே யொழிய அதனால் அணுவளவு நன்மையும் ஏற்படப் போவதில்லை யென்பது நிச்சயம். இவ்வித பலாத்காரச் செயலை இந்தியர் எக்காலத்திலும் ஆதரித்தது கிடையவே கிடையாது. வங்காளத்தில் பலாத்காரம் தலை தூக்கி நிற்பதாக அதை அடக்க இந்திய வைசிராய் ஒரு புதிய அவசரச் சட்டத்தை உருவாக்கி விட்டிருக்கிறார். ராணுவச் சட்டத்திலும் கடுமையான இந்த அவசரச் சட்டத்தால் இந்தியாவே கிடுகிடுத்து விட்ட தெனலாம்.

ஒருவெள்ளையரைக் கொல்ல ஒரு இந்தியர் சதி செய்வதாக சந்தேகித்தாலும் போதும், உடனே போலீசார் அவரைக் கைது செய்து சிறையிலடைக்கலாம். இது மட்டுமா! அவ்விதம் சந்தேகப்பட்டவர்களுக்குத் தூக்குத் தண்டனையும் விதிக்கலாமாம்! இவ்வித பயங்கரச்சட்டம் உலகின் எந்தத்தேசத்திலாவது இருக்குமென்று நாம் நம்பவில்லை. இதைக்கண்டிக்கப் புறப்படாத இந்தியருமில்லை. இதுசம்பந்தமாக மகாத்மாகாந்தி மனம் வருந்தி இந்த அடக்கு முறையே இந்தியாவில் சட்டமறுப்பை மீண்டும் ஆரம்பிக்கக் காரணமாயிருக்கலாமென்று கூறினார். லண்டனில் இது சம்பந்தமாக அவர் இந்திய மந்திரியையும் கண்டு பேசினாரெனத்தெரிகிறது. ஆனால் பிரிட்டிஷ் தேவதைகளின் கிருபைக்கண் இன்னமும் வங்காளத்தின் மீது திரும்பியபாடில்லை. வங்க மக்கள் அஹிம்சா வழி நின்று ஆர்வத்துடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். பலாத்காரத்தைப் பயங்கர ஆட்சியால் அடக்க முடியாதென்பதை வைசிராய் இன்னமும் உணராதிருப்பது மிகவும் வருந்தத்தக்கது.

**வரி மறுப்பு:**—சென்ற சட்ட மறுப்புக்குப்பின் ஐக்ய மண்டல விவசாயிகளுக்கு ஏற்பட்ட துயரம் இன்னமும் ஒழிந்தபாடில்லை. காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் கண்ட நிபந்தனைகளை உதறித் தள்ளி ஐக்கியமண்டல அதிகாரிகள் விவசாயிகளிடமிருந்து தங்கள் மனம்போன போக்கில் வரி வசூல் செய்யத் தலைப்பட்டார்கள். விவசாயிகள் துயரம் அதிகரித்துக் கொண்டே வந்தது. இது சம்பந்தமாக காங்கிரசிற்கும் ஐக்ய மண்டல அதிகாரிகளுக்கும் சென்ற ஒரு வருடமாகக் கடிதப்போக்கு வரத்து இருந்து வந்தது. சமரசம் செய்ய காங்கிரஸ் வாதிகள் எவ்வளவோ முயன்றும் அதிகாரத் தேவதைகள் அதற்கு இசைந்து வந்தபாடில்லை. இறுதியாக சமரசம் முறிந்தது. ஐக்ய மண்டல விவசாயிகள் மீண்டும் வரிமறுப்பு ஆரம்பிக்க மாகாண காங்கிரஸ் கமிட்டி அனுமதியைக் கேட்டனர். அவர்கள் தீர்க்க ஆலோசித்து நான்கு ஜில்லாக்களில் வரி மறுப்பை ஆரம்பிக்க அனுமதி கொடுத்திருக்கிறார்களெனத் தெரிகிறது. இதேபோல் பர்டோலியில் விவசாயிகளின் துயரங்களும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. அங்கு சர்க்காரும் காங்கிரசும் ஒன்று பட்டு நியமித்த விசாரணைக் கோர்ட்டும் ஏதேச்சதிகாரம் செலுத்தி வந்ததால் காங்கிரஸ் அத்துடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. அங்கும் சீக்கிரத்தில் வரிமறுப்பு ஆரம்பிக்க அறிகுறிகள் தோன்றுகின்றன. பிஹாரில் காங்கிரஸ் செந்தொண்டர்கள் மறியல் வேலைகளைத் தீவிரமாக நடத்திச் செல்லத் தீர்மானித்திருக்கிறார்கள். இதை அடக்க வைசிராய் பல அவசரச் சட்டங்களை உண்டு பண்ண அதி தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறாரெனத் தந்திகள் பறந்து கொண்டிருக்கின்றன. இந்தியாவில் பகிஷ்காரமும் வரிமறுப்பும் வேரூன்றாதபடி கிள்ளி எறிய இந்திய சர்க்கார் தகுந்த முறைகளைக் கைக் கொள்ளுவார்களென இந்திய மந்திரி பார்லிமெண்டில் சமீபத்தில் தான் கூறினார். மகாத்மா காந்தி இந்தியா திரும்பி சட்ட மறுப்பை ஆரம்பிக்கு முன் சர்க்கார் தயாராக அணைகட்டிக் கொள்ள யோசனை செய்திருக்கிறார்கள் போலும்! யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே! இந்த அவசரச்சட்டங்களெல்லாம், வரப்போகும் அடக்கு முறையின் முன்னறி குறிகளென்றே கருத வேண்டியிருக்கிறது.

**ஐரோப்பா போக்கு!:**—யுத்தக் கொடுமையைப்பற்றி இங்கு புராணம் வரையவேண்டியதில்லை. சென்ற மகாயுத்தத்தில் உலகமே திண்டாடியதும் கோடிக்கணக்கான பொருளும் கோடிக்கணக்கான உயிர்களும் பாழான விஷயத்தை நண்பர்கள் மறந்திருக்க மாட்டார்கள். நாடுகளைக் கட்டியாளவேண்டுமென்ற வெள்ளையரின் பாழும் பேராசையே இந்த யுத்தங்களுக்குக் காரணமென்பதை எவரும் மறுக்க முடியாது. மகாயுத்தத்திற்குப்பின் மேனாட்டினருக்கு சிறிது புத்திவந்தது. உடனே இனிமேல் யுத்தங்களை ஒழித்துவிட வேண்டுமெனத் தீர்மானித்தனர். அதற்காக சர்வதேச சங்கமொன்றை ஸ்தாபித்தார்கள். மேனாட்டு வல்லரசுகளெல்லாம் இதில் சேர்ந்து கொண்டு யுத்தத்தை ஒழிக்க



ஒரு முறையைக்கண்டு பிடித்தார்கள். வல்லரசுகளெல்லாம் யுத்தத்திற்குக் காரணமாயிருக்கும் ஆயுத தளவாடங்களைக்குறைக்க வேண்டுமென வாஷிங்டன் முதல் லண்டன் வரை மகாநாடுகள் கூட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றினர். ஆனால் பாழும் பேராசை யாரை விட்டது. வெளிக்கு ஆயுதங்களைக் குறைக்க வேண்டுமெனக் கூறிக்கொண்டு அந்தரங்கத்தில் கொடிய விஷப் புகைகளையும் நவீன பீரங்கிகளையும் புதிய யுத்தக் கப்பல்களையும் பெருக்கி வந்தார்கள். ஒரு நாட்டின்மீது மற்றொன்றுக்கு நம்பிக்கை இல்லாமலிருப்பதே இதற்குக் காரணமாகும். யுத்தத்திற்கு முன்னிருந்ததை விட, ஐரோப்பிய நாடுகள் ஒன்றொன்றும் ஆயுதங்களை அதிகரித்துக் கொண்டு, இன்னமும் ஆயுதங்களை ஒழிக்கும் வெறும் பேச்சே பேசிவருவது கபடநாடகமாகவே இருக்கிறது. ஆனால் பிரான்ஸ் ஒன்றுமட்டும் ஆயுதங்களைக் குறைக்கப் பகிரங்கமாக மறுத்து விட்டது. ஜெர்மனி எந்த நிமிஷத்திலும் தன்மீது படையெடுத்து வரக்கூடுமென்றும் ஆதலால் பிரான்ஸ் எப்பொழுதும் தயாராக இருக்க வேண்டுமெனவும் அது காரணங் கூறுகிறது. இனிமேல் ஒரு யுத்தம் ஏற்படுமேயானால் ஐரோப்பிய வல்லரசுக்கள் தனக்குப் பக்கபலமாக இருப்பதாய் வாக்குறுதி கொடுத்து ஒப்பந்தஞ் செய்து கொண்டாலொழிய பிரான்ஸ் ஆயுதங்களைக் குறைக்க முற்படாதெனப் பட்டவர்த்தனமாய்க் கூறி சர்வதேச சங்கத்திற்கும் ஒரு அறிக்கை அனுப்பிவிட்டது. சர்வதேச சங்கத்தின் பாடு பெரும் திண்டாட்டத்தில் வந்து முடிந்திருக்கிறது. இதற்கு ஐரோப்பா வல்லரசுகள் என்ன செய்யப்போகின்றன? கபடவேஷம் எத்தனை காலத்துக்கு நீடித்திருக்கும்? சர்வதேச சங்கம் இது சம்பந்தமாக என்ன முடிவு செய்யப் போகிறதென்பதைப் பார்ப்போம்.

**சீன-ஜப்பான் யுத்தம்:**—சிலகாலமாக சீரழிந்து உருக்குலைந்து சமீபத்தில் தான் தலை தூக்கிய சீனாவிற்குப் புதிய சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. சீனாவுடன் ஜப்பான் யுத்தம் தொடுத்து யுத்தம் வெகு மும்முரமாக நடந்து வருவதாகத் தெரிகிறது. சீனா ஒரு பெரிய தேசம். ஜப்பான் சில தீவுகளேயாகும். சீனாமீது ஜப்பான் யுத்தம் தொடுத்திருப்பது அதன் ராணுவத் திமிரே யாகும் என்பதற்குச் சந்தேகமில்லை. இந்த யுத்தத்திற்கு சீனாவின் ஒரு பகுதியாகிய மஞ்சூரியாப் பிரதேசமேயாகும். மஞ்சூரியா நல்ல செழிப்பான பூமி. அங்கு சுரங்கங்கள் ஏராளம். விசேஷமாக நிலக்கரி சுரங்கங்களும், மண் எண்ணைக் கிணறுகளும் அதிகம். ஆகவே நெடுங்காலமாக மஞ்சூரியாவின் மீது ஜப்பான் கண்ணோட்டமிருந்து வந்தது. இந்நோக்கத்துடன் அங்கு ஏராளமான ஜப்பானியரைக்குடியேற்றி பெரும் பொருள் செலவிட்டு அத்துடன் பெருவாரியாக வியாபாரப் போக்கு வரத்து வைத்துக் கொண்டிருந்தது. மஞ்சூரியா நிலக்கரியும், மண்ணெண்ணெய், பெட்ரோலும் ஜப்பானுக்கு இல்லையென்றால் ஜப்பான்கதி அதோகதி தான். சீனா ஜப்பான் யுத்தத்தின் அந்தரங்கம் இதுவே யாகும். ஜப்பான் இதை மனதில் கொண்டு, அற்பக் காரியத்திற்காக அதாவது ஒரு ஜப்பான் ஜெனரலை, சில சீனக்கொள்ளைக் கூட்டத்தார் கொலை செய்ததைக் காரணமாகக் கொண்டு யுத்தம் தொடுத்து விட்டது. உலக யுத்தங்களை ஒழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் சர்வதேச சங்கம் அந்த யுத்தத்தை நிறுத்தப் பெரும்பாடு பட்டது. ஆனால் அதன் ஜம்பம் ஜப்பானிடம் பலிக்கவில்லை. சர்வ தேச சங்கத்தின் யோக்யதை இந்நிலைமையிலிருக்கிறது. சீன-ஜப்பான் யுத்தம் எக்கதிக்குள்ளாகுமோ தெரியவில்லை. சீனாவை அந்தரங்கமாக ருஷ்யர் தட்டிக் கொடுக்கிறார்கள். ஜப்பானையும் பிரிட்டனையும் பழைய ஒப்பந்தம் பிணைத்திருக்கிறது. இந்நிலைமையில் சீன ஜப்பான் யுத்தம் என்ன கதிக்குள்ளாகிறதோ தெரியவில்லை. இதுவே ஒரு உலக யுத்தமாக மாறி விடுமோ வென்று ஐயுற வேண்டியிருக்கிறது.

**யார் சூழ்ச்சி?:**—உலக முஸ்லிம்களின் மகாநாடொன்று எகிப்தில் எருசலேம் நகரில் கூடியிருக்கிறது. இம்மகா நாடு எக்காரணத்தையொட்டி தற்போது கூடி இருக்கிறதென்ற மர்மம் இன்னமும் தெரியவில்லை. முஸ்லிம் நாடு

களை ஒன்று படுத்தக் கூடியிருக்குமே யானுல் அதைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிரேம். ஆனுல் எகிப்திலுள்ள சில முக்கிய முஸ்லிம் மன்னர்கள் இம்மகா நாட்டில் சம்பந்தப்படாமல் விலகி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு மன்னர் இதைக் கண்டிக்கப் புறப்பட்டிருப்பதும் கவனிக்கத் தக்கது. அவர் மறைபொருளாகப் பிரிட்டனைக் குறிப்பிட்டிருப்பதையும் மறந்து விடக் கூடாது. கீழ் நாடுகளிலுள்ள முஸ்லிம் நாடுகளைத் தட்டிக் கொடுத்து நயவஞ்சகமாக வசப்படுத்தப் பிரிட்டன் அந்தரங்கத்தில் சூழ்ச்சி செய்வதாகவே அறிய வேண்டி இருக்கிறது. இதற்கு சில முஸ்லிம் அலிகளும் 'இமாம்' களும் துணையாயிருப்பது தான் விந்தையாக விருக்கிறது. உலக முஸ்லிம்கள் இதில் கவனஞ் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளுகிரேம்.

**பழைய மந்திரி புதிய ஜோசியம்:**—இங்கிலாந்தின் முதன் மந்திரியாயிருந்த 'பழையகிழச்சிங்கம்' ஸ்ரீ லாயட் ஜியார்ஜ் சென்ற ஆறுமாத காலமாக சுகவீனமா யிருந்தது நேயர்களுக்கு ஞாபக மிருக்கலாம். அவரை இலங்கை அல்லது ஆஸ்திரேலியா யாத்திரை போகும்படி டாக்டர்கள் ஆலோசனை கூறியதின் பேரில் அவர் சமீபத்தில் இலங்கைக்குப் புறப்பட்டுச் சென்ருர். போகிறவழியில் பம்பாயில் இறங்கினுர். பம்பாய் கார்ப்பொரேஷன் அங்கத்தினர் அவரை வரவேற்று உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தனர். அப்பொழுது அவர் பேசியதில் குறிப்பிட்ட சில விஷயங்களை நேயர்கள் அறியவேண்டியது அவசியமாகும். லண்டன் மகாநாடு ஒரு முடிவுக்கு வராது போனுலும் முறியாதிருந்தது ஒரு வகையில் நிம்மதியானதே யென்ருர். அடுத்தபடியில் இரண்டாவது மகாநாடு ஒரு முடிவுக்கு வராதுபோனுலும் மூன்ருவது மகாநாடு வெற்றி பெறக் கூடுமென ஒரு பழமொழியையும் எடுத்தோதினுர். இந்தியாவின் விடுதலை இந்தியர் கைகளிலேயே இருக்கிறது,பிரிட்டனை நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை என்பது இரண்டாவது மகா நாட்டிலிருந்து வெட்ட வெளிச்சமாயிற்று. பழைய மந்திரியின் புதிய ஜோசியம் பலிக்குமா வென்பது பெரும் சந்தேகமாகவே இருக்கிறது.

---

நமது "தமிழக" மாதப்பத்திரிகையின் சீரும், சிறப்பும் கண்டு, மிகுந்த உற்சாகத்துடன் சென்னை சட்ட சபை இரண்டாவது மந்திரியும், தொண்ட மண்டல வேளாள குல திலகமாகிய கனம் P. T. ராஜன் அவர்கள் போஷகராகயிருக்க ஒப்புக்கொண்டது நமக்கு அளவிலா ஆனந்த மளிக்கின்றது. ஆகவே அவருடைய போட்டோ படத்தை வர்ணப் படமாக அச்சிட ஏற்பாடு செய்துள்ளோம். கனம் மந்திரி அவர்கள் நமது பத்திரிகையை வாழ்த்தியது போல் அவரும் சீரும் சிறப்புடன் செல்வச் சிரஞ்சீவியாக வழவேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கின்ருேம்.

**குறிப்பு:**—இந்தப் படம் பிரசுரமான பின் படம் ஒன்று 2 அணு வீதம் விற்கப்படும்.


# தங்கபசு பால்

தாய்ப் பாலுக்குச் சமானமானது.

இன்றே கொடுத்துப் பாருங்கள்.




தவமிருந்து பெற்ற புதல்வர்களை அருமையாக வளர்ப்பது நமது பிரசித்திபெற்ற

## தங்க பசு பால்

என்பது பொது ஜனவாக்கு. எதிர்கால வாழ்வில் தங்கள் குழந்தைகள் கீர்த்தியுடன் புகழ்பெற்று விளங்கவேண்டுமென்பதை ஞாபகத்தில் வையுங்கள். அதனுல் பிள்ளைகளைப் பெற்ற பெருமையை அடைவீர்கள்.

3-டின் விலை ரூபா. 1—0—0

எஜெண்ட்:—**F. X. PEREIRA & SONS,**
*33, Mookernallamuthu St., G. T. MADRAS.*

கிடைக்கும் இடங்கள்:—**S. T. Paldano,** *Vepery, Madras.*
**Saliah Saib,** *China Bazar.*

இன்னும் மற்ற இடங்களிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளை கண்டு ஏமாருதீர்கள்.**




அமிர்தாஞ்சனம் டிபோ, மதருஸ், பம்பாய்.

நம்பிக்கையான சவரம், பொன், அசல்
வெள்ளி சாமான்கள் கிடைக்குமிடம்.

பி. வாசீஸ்வர அய்யர் கம்பெனி,
(குருக்கள் கடை)
பொன், வெள்ளி நகை வியாபாரம்,
194, சைனாபஜார் ரோட், சென்னை.




கேஸரியின்
டெண்டல் கிரீம்.
(பற் பசை)
விலை அணா. 8
கேஸரி குடீரம்,
எழும்பூர், சென்னை.

அசல் வைரங்கள் குறைந்த விலையில்
கிடைக்கும்.

டைமண்டு இம்போர்ட் கம்பெனி,
247, சைனாபஜார் ரோட்,
சென்னை.

இராஜ ரசம்.
அஜீர்ணம், பேதி, காலரா, வயிற்று வலி,
காசம், இருமல் முதலிய வியாதி
களுக்குச் சிறந்தது.
விலை ரூ. 1—8—0,
எம். எஸ். மெடிகல் ஹால்,
159, பிராட்வே, சென்னை.

நாணயமுள்ள நகை வியாபாரிகள்

வி. சுப்பிரமணி ஐயர்,
2 & 3, குப்பு முத்து தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை.

காசி பட்டாடை
சுதேசத்துவங்களை
ஆதரியுங்கள்
புதிய கேட்லாக் இனாம்!
கே.எஸ். முத்தையா கம்பெனி
சில்க் அவுஸ், காசி.

பெயர் பெற்ற நகை வியாபாரிகள்

உம்மிடி ராமய்ய செட்டி,
குருசாமி செட்டி கம்பெனி,
25, சைனாபஜார் ரோட்,
சென்னை.

மங்கையின் முத்தம்.
அழகுபெற முத்தமிடும் ஆயிரம் முறைகள் மிகத் தெள்ளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. அழகிய ஆப்டோன் படங்கள் பல அலங்கரிக்கப் பெற்றது. காதற் சுகமெய்தப் பெரிதும் உதவும் உத்தம நூல். சாதா பதிப்பு ரூ. 2.
உயர்ந்த கிளேஸ் பதிப்பு ரூ. 3.
ஸ்ரீ ரங்கா அண்டு கம்பெனி,
5, ராமசாமி தெரு, சென்னை.

வைரங்களுடன் போட்டி
"டால்லோ"
டைமண்டு நகைகள்

P. கோபால்சாமி நாயுடு & சன்ஸ்.,
பறங்கிமலை போஸ்ட்,
சென்னை.

TO LET.
Rs. 2. Per Insertion.
*Apply To :—*
MANAGER,
TAMILAGAM,
G. T., MADRAS.



# மகாத்மாவின் தரிசனம்.

மகாத்மா காந்தியின் தரிசனமென்றால் குழந்தைகள் முதல் விருத்தர்கள் ஈறாக பேராவலோடு ஓடுகிறார்கள். பெரிய பெரிய உத்தியோகஸ்தரும், பணக்காரர்களுங்கூட அந்த மகானின் தரிசனத்துக்காக விழைகின்றார்கள். இதன் காரணம் என்ன? இத்தனை வசீகரண சக்தி மகாத்மா காந்தியினிடத்தில் என்ன இருக்கின்றது?

மகாத்மா காந்தியும் ஒருமனிதர்தான், மற்றோரைவிட அவர் மிக மெலிந்ததேகி. அழகிலும் மிகவும் குறைந்தவர். எனினும் அப்படிப் பட்ட ஒல்லிய தேகியைத்தான் கண்ணால் காண்பதற்காக பல கோடி மக்களும் பேராவல் கொள்ளுகின்றார்கள்.

மகாத்மா காந்தி மேனாட்டுக்குச் சென்றார். அங்கு அவரை அன்னிய வர்க்கத்தினராகிய ஆங்கிலேயர் மிகமிக மரியாதையோடு இனிது வரவேற்றனர். லண்டன்மாநகரின் கிழவர், குமாரர், குழந்தைகள் ஆகிய அனைவரும் ஓடோடியும் வந்து மகாத்மா காந்தியின் வண்டி செல்லும் வழியில் குறுக்கிட்டு கூடி நின்று காந்திஜீயின் தரிசனம் பெற்று மகிழ்ந்தனர். ஏழைகள் மகாத்மா காந்திஜீயை தங்கள் தந்தையைப் போல் பாவித்தனர். எளிய தொழிலாளர் கூட்டத்தினர் ஏகமாகவந்து காந்திஜீயை வேண்டித் தங்கள் குறைகளைத் தீர்க்கும்படி பெரிதும் பிரார்த்தித்துக் கொண்டார்கள். இப்படியெல்லாம் மகாத்மா காந்தியை உலகத்தோர் போற்றிப் புகழ்ந்து, கொண்டாடுவதற் குரிய விசேஷ வசீகர சக்தி அவரிடத்தில் என்னதானிருக்கிறதென்பதைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

மகாத்மா காந்தியினிடத்தில் மாயமில்லை, மந்திரமில்லை, ஜாலமில்லை, தந்திரமில்லை, மெஸ்மெரிஸமில்லை, ஹிப்னாடிஸமில்லை. ஆனால், பணமும், பெருமையும் அதிகமிருக்குமோவென்று பார்ப்போமானால், காந்திஜீ மிக மிக ஏழை. அவர் எவ்விதப் பொருளையும் தமது பூஸ்திதியாகக் கொள்வதில்லை. பெருமையென்பதோ அவரிடத்தில் சிறிதுங் கிடையாது. ஒரு சின்னஞ் சிறு ஏழைக் குழந்தை யுடனும் அவர் விளையாடி மகிழ்வார்.

மகாத்மா காந்தியை மேன்மைதங்கிய வைஸிராயவர்களே கண்டு தாழ்மையான முறையில் சமரஸம் செய்துகொண்டனரென்றால், மகாத்மா காந்தியின் மகாத்மியத்தைச் சொல்லவும் வேண்டுமோ? மகாத்மா காந்தி யார்? அவர் எப்படிப் பட்டவர்? எத்தகைய உடையணிந்தவர்? உலகமெல்லாம் அவரைப் போற்றுதற்குக் காரணமென்ன? உலக மக்களெல்லாம் அம்மகானைத் தரிசிக்க பேராவல் பூண்டு காத்திருப்பதின் விசேஷ மென்ன?

மகாத்மா காந்தியிடம் சிறந்த குணங்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் தூய உள்ளம் என்பதொன்று. ஸ்படிகம்போன்ற மனத்துடையவர். எவர் மீதும் கபடங் கொள்ள மாட்டார். எவர்மீதும் அழுக்காறு அடையமாட்டார். ஒரு சிறிதும் மமதை கொள்ள மாட்டார். நண்பனாயிருப்பினும், விரோதியா யிருப்பினும், யாவருடனும் மனத்தூய்மை யோடு வாய்மை பிற

பூாது உறவாடுவார். எஞ்ஞான்றும் பிறர் மீது அன்பே பாராட்டுவார்.

மகாத்மா காந்தியிடமுள்ள மற்ருேர் குணம் "பரோபகாரம்". பரநலம் என்பதும் பரோபகாரம் என்பதும் ஒன்றே. சுயநலம் சிறிதும் கொள்ளாமல் பிறர்க்கே நலஞ் செய்வதில் இது காலே உலகில் மகாத்மாகாந்தியே சிரேஷ்டமானவராய் விளங்குகின்ருர்.

மகாத்மா காந்தியிடம் தெய்வபக்தி மிக மிக அதிகம். ஆனல், மௌடீகமுள்ள வைதீகர்களைப் போலு மிருக்க மாட்டார். மனம்போனபடி ஆசாரத்தை உதறித்தள்ளும் நவீன நாகரீக வாலிபக் கோஷ்டியினரைப் போலு மிருக்க மாட்டார். ஆனல் உலக விவகாரங்களை நன்குணர்ந்து, நன்காராய்ந்து, நன்கு பழகி, நன்கு ஈடுபட்டிருந்துங்கூட தெய்வ பக்தியை நழுவவிடாத உத்தமோத்தமரா யிருப்பார் மகாத்மா காந்தி.

மகாத்மா காந்தியின் மற்ருேர் சற் குணம் "எளியவாழ்க்கை". காந்திஜீயின் உடை மிகமிக ஏழைகள் அணிவதுபோன்ற இரு வெள்ளைத் துண்டுகளே யாம். சில சமயங்களில், ஒரே ஆடையுடனேயே காந்திஜீ காணப்படுவார். இவ்வாறே அனுஷ்டானத்திலும் மகாத்மாஜீ ஏழைகளைப் போன்றே நடந்து கொள்வார். சாதாரண உணவு, மிக எளிய ஆகாரம். ஆனல் மகாத்மாகாந்தி என்றும் பரோபகாரமே ஆபிருதய பூஷணமாய்க்கொண்டு திகழுவார்.

காந்திஜீ உலகத்தினர் யாவராலும் மிகமிகப் போற்றுவதற்குரிய சிரேஷ்ட குணம் அவர்பால் காணப்படுவது பரிசுத்தமனம், நல்லனுஷ்டானம், பரோபகாரம், பொது ஜன சேவை, எளியவாழ்கை முதலியனவாகும். மகாத்மா காந்தியை இவ்வாறு வாயாரப் போற்றுவதை விட அவரது அனுஷ்டானங்களைப் பின் பற்றி நடப்பதே நம்மவர் ஒவ்வொருவரின் கடமையாகும். காந்திஜீயைப் பின்பற்றுவோர் சர்வ சமயத்திலும் சிறந்தவராவர். சுபம்! சுபம்!! சுபம்!!!

---

# உலகச் செய்திகள்.

———:O:———

லண்டன் நகரத்தில், ஒருவருஷத்தில் 3,000,000 நாய் களுக்கு லயிசென்ஸ் கொடுக்கிருர்களாம்.

---

உலகத்தில் 10 லட்சம் ஜனங்களுக்கு மேற்கொண்ட நகரங்கள் 40 இருக்கின்றனவாம்.

---

அமெரிக்கா தேசத்தவர்கள் ஒரு வருஷத்தில் 140, 000,000 பவுன் துணிகளை, சலவை செய்வதற்காகச் செலவழிக்கின்ருர்களாம்.

---

பிரான்ஸ் தேசத்தில் வயது வந்தவர்களின் 3-ல் 1-பங்கு அதாவது 13, 000,000, பிரமசாரிகளாக யிருக்கிருர்களாம்.

---

பிரைடன் நகரவாசி ஒருவர் பழய புட்டிகளைச் சேகரித்து விற்று சுமார் 300 பவுன் வரை 3 வருஷத்திற்குள் பிரிட்டிஷ் வேதசங்கத்திற்கு உதவி யிருக்கிருராம்.

---

பிரான்ஸ் தேசத்தில் விவாகமானவர்களில் ஒவ்வொரு நூற்றுக்கும், 23 பங்குக்குக் குடும்பமில்லாமலும், 25 பங்கு ஒரே, ஒரு குழந்தையுடனும், 22 பங்கு 2 குழந்தைகளுடனும், 3 பங்குக்கு குறைந்தவர்கள் 7 குழந்தைகளுடன் வசிக்கிருர்கள்.

---

96 டன் கனமும், 76 அடி உயர முள்ள மிகப்பெரிய கர்டர் ஒன்று லண்டனுக்குக் கொண்டுவந்தார்கள். உலகத்திலேயே இதை விட பெரிய கர்டர் இல்லே யென்று தெரிகிறது.

---

மோட்டார் வண்டி ஓட்டும் டிரைவர்கள், விவாகமானதற்குறிய சர்டிபிகேட் காண்பித்த பிறகு லயிசென்ஸ் கொடுக்க வேண்டு மென்று புதிய சட்டம் துருக்கியில் ஏற்படுத்தப் போகிருர்களாம். இதனல் அவர்களுக்குக் குடும்ப பாரம் ஏற்பட்டால் ஜாக்ரதையாக வண்டியை ஓட்டுவார்களாம்.

---

# சிங்கமும் சுண்டெலியும்.

———:O:———

ஒரு காலத்தில் ஒரு காட்டில் ஒரு சிங்க மிருந்தது. அது அக் காட்டிலுள்ள மான் இனங்களையும் மற்றும் மாசற்ற மிருகங்களையும் கொன்று தின்று கொழுத்து, அந்நாட்டில் ஏதேச்சதிகாரம் செலுத்தி வந்தது. இதை எதிர்ப்பாருமில்லே. இது அக்காட்டைவிட்டு ஒழிந்தபாடுமில்லே. அக்காட்டிலுள்ள கபடற்ற மிருகங்களோ அஞ்சி நடு நடுங்கித் தெய்வமே துணை என்று பாவத்தையும் பழியையும் அவர் மீது போட்டு கவலேயுடன் காலங் கழித்து வந்தது.

ஒருநாள் இந்த சிங்கம் வயிறு நிறைய ஆகாரம் உட்கொண்டு ஒருபெரிய மரநிழலில் சொகுசாகப் படுத்துறங்கியது. அதற்கு என்ன குறை! தீனிக்குக் குறையா, அன்று மற்றும் சுகபோகங்களுக்குக்குறையா! ஒன்றுமில்லே. தன்னை மறந்து கவலேயற்று நிம்மதியாக நித்திரை செய்தது. இந்நேரத்தில் அந்த மரத்தடியில் ஜீவித்து வந்த ஒரு எலி தன் வளையை விட்டு வெளியே வந்தது. எலி சிறிய பிராணியேயாயினும் அதற்கு அச்சமென்பது தெரியாது. ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்தறியாததால், மற்ற மிருகங்களையும் தன்னைப்போலவே கபடற்ற மிருகமென நினைத்துக் கொண்டது. தன்வளேயினருகில் படுத்து, அயர்ந்து நித்திரை செய்த சிங்கம் அவ்வளவு கொடிய மிருக மென்பது அதற்குத் தெரியாது. ஆதலால் சிங்கம் நம்மை ஒன்றுஞ் செய்யாதெனக் கருதி சிங்கத்தின் மேல் ஏறி அதிக சந்தோஷமாக விளேயாடியது. சிங்கம் பெரிய மிருகமாதலால் அதின் மேல் ஓடியாடிய எலி அதற்கு ஒரு கொசு உட்கார்ந்திருப்பது போலிருந்தது. அன்றியும் அளவுகடந்து தின்று கொழுத்த மயக்கத்தில் அதற்கு அந்த எலி ஓடியாடியதை உணர முடியவில்லே. எலி உல்லாசமாக விளேயாடிய உற்சாகத்தில் தன்னை மறந்து சிங்கத்தின் முகத்திலும் ஏறி விளேயாட ஆரம்பித்தது. முகத்தின் மீது சிறு துரும்பு பட்டாலும் உணர்ச்சி வந்து விடுமல்லவா! அது போல் சிங்கத்திற்கும் உணர்ச்சி தட்டியது. தன்னை மிருக ராஜன் என்றுங்கூடக் கவனியாமல் ஒரு அற்ப எலி தன் மீது ஓடியாடி விளேயாடியது சிங்கத்திற்குப் பொறுக்க வில்லே. உடனே சீறிக் கர்ஜித்தெழுந்தது. கோபத்தினல் தரையை ஓங்கி அறைந்து, மற்ருெரு கையால் இந்த எலியைப் பிடித்து நசுக்க முயற்சித்தது.

சிங்கராஜன் கோபம் எலிக்கு என்ன தெரியும் அப்பொழுதும் அது பயப்படவில்லே சிங்கத்தை நோக்கிப் பயமின்றிப் பார்த்தது.

சிங்கம்:—அற்ப எலியே! நான் யார் என்று தெரியுமா?

எலி:—ஆம் நீ ஒரு சிங்கம் என்னைப்போன்ற ஒரு பிராணி.

சிங்கம்:—அன்பனே! நான் மிருகங்களின் அரசனல்லவா?

எலி:—இருக்கலாம் அதற்கென்ன? எனினும் என்போன்ற மிருகந்தானே!

சிங்கம்:—அப்படியா! எனக்குள்ள கௌரவத்தையும், பலத்தையும் நீ அறிவாயோ!

எலி:-அறிவேன்! உனக்கு அபாரசக்தி இருக்கலாம். ஆனல் எனக்கும் உன்னல் முடியாத காரியங்களைச் சாதிக்கக்கூடிய சக்தி உண்டென்பது தெரியாதோ!

சிங்கம்:—(கோபத்துடன்) அற்பப்பிராணியே நீயாரிடத்தில் வாதாடுகிருய் என்பதை உணர்ந்துபேசு. நான் நினைத்தால் உன்னை இந்த நிமிஷமே என் கூறிய நகத்தால் கிழித்து சின்ன பின்னப்படுத்தி விடுவேன் தெரியுமா? பத்திரம்.

எலி:—இது பெரிய காரியமா? நான் என் உயிருக்குப் பயந்தா ஜீவிக்கிறேன், இல்லவே இல்லை; இன்றைக் கிருக்கும் இந்த உயிர், நாளைக்கு மாயமாகப் போய்விடும். என்னைக் கொல்வது பெரிய காரியமல்ல அன்றி அது உனக்கும் பெரிய கௌரவமாகி விடாது. கேவலம்! ஒரு சிங்கம் ஒரு எலியை அடித்துக் கொன்றதாம் என்ற கெட்ட பெயர்தான் உனக்குவரும்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட சிங்கத்துக்கு வெட்கம் வந்தது. கோபத்தால் ஒரு புறம் மீசை துடிக்க, வெட்கத்தால் தலைசாய்ந்தது. ஆயினும் எலியைவிடவில்லை. "உன்னைக் கொல்வது பாவம் என்று விடுகிறேன், இனி மேலாவது என்னை நெருங்கி வராமல் உயிர் தப்பிப்போ" என்றது.

எலி:—நான் உயிர் பிழைப்பது பெரியகாரியமல்ல; ஆனல் நான் சிறிய எலியே என்று மதித்து விடாதே; என்னல் உனக்கு உபகாரம் ஆகவேண்டிய காலம்வரும்; அப்பொழுது நான் உனக்கு அந்த உதவியைச் செய்ய சித்தமாயிருப்பேன் என்று சொல்லி அச்சமின்றி தன் வளைக்குச் சென்றது.

சில தினங்கள் கழிந்தன. சிங்கம் வழக்கம் போல் மிருகங்களைக் கொல்லுவதும் வயிறுரப் புசிப்பதுமாகவே இருந்தது. இம்மிருகத்தின் அட்டகாசங்கள் காட்டோடு நிற்கவில்லை. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக் கடைசியாக மனிதரையும் எதிர்த்துக் கடிக்க ஆரம்பித்தது. உடனே இந்த சிங்கத்தை ஒழிக்க முற்பட்டார்கள். அதற்காகக் கயிற்றல் ஒருபொறி செய்து அதை சிங்கம் வழக்கமாக வரும் இடத்தில் கொண்டுபோய் வைத்தார்கள். சிங்கம் இரைதேடியபின் தான் என்ற மமதையில் கண் மூக்குத் தெரியாமல் வந்த போது மேற்கூறிய பொறியில் அகப்பட்டுக் கொண்டது. தப்புவதற்குத் தன்னலானவரையில் பார்த்தது முடியவில்லை. தன் முழு பலத்தையும் உபயோகித்துக் கயிற்றை அறுத்துக் கொள்ளப் பார்த்தது. அது எவ்வளவுக்கு முயன்றதோ அவ்வளவுக்குக் கயிறு இன்னமும் அதிகமாகப் பிணைக்க ஆரம்பித்தது. தப்புவதற்கோ மார்க்கமில்லை. கயிற்றின் பிணைப்பால் வேதனை பொறுக்க முடியாமல், அக்காடும் அதிரும்படி கத்தினது. உதவிக்கு யாரையும் காணேம். சிங்கம் தனது இறுதிகாலம் வந்து விட்டதோ எனக்கலங்கியது. இந்நேரத்தில் சிங்கத்தின் பரிதாபமான குரலைக் கேட்ட எலி மெதுவாக வளையைவிட்டு வெளியில் வந்தது சிங்கத்தின் நிலைமையைக் கண்டு ஓடோடியும்சென்று, சிங்கத்தைப்பிணைத்திருந்த கயிறுகளைத் தன் கூறிய பற்களால்வெட்டியது. சிறிது நேரத்தில் சகல கயிறுகளையும் வெட்டித்தள்ளி சிங்கத்தை விடுவித்தது. அப்பொழுதுதான் சிங்கத்துக்கு சிறிய எலியின் அபார சக்தி விளங்கியது. தான் அலட்சியமாய் எண்ணிய எலியின் சக்தியைக் கண்டு பிரமித்தது. இறுதியில் தன் உயிரை அந்த எலியே காப்பாற்ற நேர்ந்தது அப்பொழுதுதான் அதன் புத்தியில் பட்டது எனினும் மிருகராஜனல்லவா அற்ப எலிக்கு நன்றிபாராட்டுவதாவது.

சிங்கம்:—நல்லது எலியே நான் உயிரை ஒரு முறை காப்பாற்றினேன். இப்பொழுது நீ எனக்கு உதவிக்கு வந்தாய்!

எலி:—அது பெரிய காரியமல்ல, இதைப் போல் எவ்வளவு பெரிய காரியத்தையும் என்னல் சாதிக்க முடியும். நீ முன்பு என்னை அலட்சியமாய்க் கருதினய் இப்பொழுது என்னல் உயிர் பெற்றிருக்கிருய் என்பது கவனத்திலிருக்கட்டும். இனிமேலாவது புத்தியாய் நடந்து கொள்; நியாயமான வழியைத் தெரிந்து கொள். இன்றேல் இனிமேலும் உனக்கு ஆபத்துதான். இறுதியாக எச்சரிக்கை செய்கிறேன்.

எலி சிங்கத்தின் நன்றியற்ற தனத்தைக்கண்டு வெறுப்புற்று அவ்விடத்தைவிட்டு உடனே தன் இருப்பிடம் புறப்பட்டு வந்து சேர்ந்தது.

---

பொதுக் கூட்டங்களில் பெண்கள் பேசுவது நியாயமாக தோன்றுகிறதா?

மற்றவன்:—ஆம் அதற்கு என்ன ஆக்ஷேபனை உண்மையாக கூட்டம் சேரவேண்டு மானல்

---

என பெண்சாதி மிகவும் அபாயமான நிலையிலிருக்கிறளா?

டாக்டர்:—பிரதிதினம் மூன்று முறை வருகிறேனே.



# பிரபல வியாபாரி.

தனிப்பட்ட நபர்களின் வியாபாரம் ஒன்று அல்லது இரண்டு தலை முறை நீடித்திருக்கவேண்டு மானல் அதற்குத் தக்கபடி வியாபார முறைமை, சக்தி நாணயம், ஒழுக்கம், சத்தியம், தயாள சிந்தை முதலியன நிறைந்திருக்கவேண்டும். இக்குணங்கள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற ஸ்ரீமான்



ஸ்ரீமான் கோபாலசாமி நாயுடு.

P. முனிசாமி நாயுடு என்பவர் நூற்றைம்பது வருஷங்களுக்கு முன்னல் ஆபரணகற்கள் வியாபாரம் செய்யத் தொடங்கினர் அவ்வியாபாரம் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகவளர்ந்து வருகிறது அவ்வியாபாரத்தை அவருடைய குமாரர் ஸ்ரீமான் P. கண்ணைய நாயுடு தன் குமாரர் ஸ்ரீமான் கோபால் சாமி நாயுடு உதவி கொண்டு தற் சமயம் நடத்தி வருகிறர்கள். ஸ்ரீமான். P. கோபால்சாமி நாயுடு அவர்களின்வியாபாரத்தின் நாணயத்தையும்தர்ம நியாயமான நடத்தையும் எழுதவேண்டுமானல் இப்பத்திரிகை பூராவும்போதாது என்பது நிச்சயம். தற்காலம் உலகமெல்லாம் வியாபாரமந்தம் ஏற்பட்டுத் திண்டாடினலும்நமது ஆப்த நண்பரின் வியாபாரம் சிறப்பாகவே நடை பெறுகின்றது. இவரது மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும் தங்க நகைகளுக்கு எக்காலத்திலும் மதிப்பு குறைவது கிடையாது. இதனல் இவர்கள் வியாபாரம் தலை முறைகளாகச் செழித்து விளங்குவதுபோல் இவர்களிடம் நகைகள் வாங்கும் நண்பர்களும் தலை முறைக்கணக்காக வாங்கி திருப்தி யடைகிறர்களென்பதே இவர்களது நேர்மை யான வியாபார முறைக்கு போதுமான அத்தாக்ஷியாகும் சென்ற சில வருஷங்களாக பல நண்பர்களின் வேண்டுகோளுக் கிணங்கி அசல் வைர வியாபாரம் செய்து வருகிறர்கள். இனிமேல் இவர்களுடன், வைரம், புஷ்பராகம், முதலிய வியாபாரிகள் போட்டி போட முடியாதபடி குறைந்த விலையில் சிறந்த வைரங்கள் கொடுத்து ஜனங்களின் மனதைக் கவர்ந்துவிட்டார்கள். இவர்களுக்கு வியாபாரம் மென்மேலும் பெருகி தீர்க்காயுசும் ஐஸ்வரியமும் கொடுத்து வருமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றும்.

---

"மதுராந்தகி"

ஒரு அற்புதமான தமிழ் நாவல். இதுவரை இம்மாதிரியான நாவல் எவரும் வாசித்திரார், தென் இந்துதேச சரித்திர சம்பந்தமானதுடன் இதிலடங்கிய ஒவ்வொரு ஆச்சரியமான சம்பவங்களும் தற்கால படக்காட்சி (சினிமா) தனிலெல்லாம் உயர்வான தென்று படிப்பவர் அறிவார். விலை அணு 5. தபால் செலவு இனம்.

வி. பி. கிடையாது.

நமது பத்திரிக்கை ஏஜண்டுகளிடமும், கிடைக்கும்.

தமிழகம் புஸ்தகசாலை,

1, ராமசாமி தெரு, ஜி. டி. சென்னை.




## பள்ளிக்கூட மாணவர்களின் தேகாரோக்கியம்.

(ஸ்ரீமான். கீ. பி. சேஷாத்திரி அய்யங்கார் எழுதியது.)

———:o:———

**த**ற்காலம் பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு மெடிகல் பீஸ் (medical fees) என்றால் விவரித்துச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. அவர்களது பெற்றோர்களுக்கு அதைக் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் மட்டும் உண்டு. அதுவும் பணத்தைச் செலுத்த வேண்டிய அவசிய மிருப்பதனாலே அந்த எண்ணமாவது சிலருக்கு ஏற்படுகின்றது. இத்தகையப் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் எவ்வளவு சிரத்தை கொண்டிருக்கின்றார்கள் என்பதை நாம் விவரித்துச் சொல்ல வேண்டியதே யில்லை.

இந்த மெடிகல் பீஸ் என்பது வருஷத்தில் இரண்டு முறை ஒவ்வொரு மாணவனின்றும் வாங்கப்படுகின்றது. இந்தச் சுங்கம் லாங்டேர்ம் அதாவது ஜூலை மாதத்திய சம்பளத்துடன் ஒருமுறையும் ஷார்ட்டேர்ம் அதாவது ஜனவரி மாதச் சம்பளத்துடன் மற்றொரு முறையும் சேர்த்து வாங்கப்பட்டு வருகின்றது. இம்மாதிரி வருஷத்தில் இரண்டு மாதங்களில் அதிக பணத்தைச் சம்பளமாகக் கட்டும் போது மாணவர்கள் அழமாட்டாத குறையாகவும் கட்டித் தொலைக்க வேண்டுமே என்ற கட்டாயத்தின் பேரிலும் கட்டி வருகின்றார்கள். மாணவர்களுக்கே இவ்வித மனப்பான்மை யிருந்தால் பணத்தைக் கொடுக்கும் பெற்றோர்களின் மனப்பான்மையை நாம் எவ்விதம் விவரிக்கக் கூடும்? அத்தகைய மெடிகல் பீஸ் வரும் ஜனவரி மாதத்தில் ஒவ்வொரு பள்ளிக்கூட மாணவனும் கட்டவேண்டி வருகிறது. இந்தச்சமயத்தில் இவ்விதமான கட்டுரை வெளி வருகின்றது ஒவ்வொரு மாணவனுக்கும் பெற்றோர்க்கும் ஒரு விதமான சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்படுகிறது. முன் சொன்ன விதம் மெடிகல் பீஸ்; அதாவது வைத்திய உதவிச்சம்பளம் ஒவ்வொரு மாணவனிடமிருந்து வசூலிக்கப்படுகின்றது. பள்ளியில் வாசிக்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள். அத்தகைய நோய்களினால் அவஸ்தைபுறும் மாணவர்களை வைத்தியர் பரிசோதித்து இன்ன வியாதியால் பிடிக்கப் பட்டிருக்கின்றான், ஆகவே அதற்குப் பரிகாரம் இன்னது செய்ய வேண்டுமென்று பதிவு செய்து மாணவனின் பெற்றோர்க்குத் தெரிவித்து விடுவது வைத்தியரின் வேலையாக இருந்து வருகின்றது. அம்மாதிரி அந்நோய்களுக்குப்பரிகாரம் தேடினார்களா வென்பதையும் மீண்டும் வற்புறுத்து கின்றார்களா என்பதையும் அந்த வைத்தியாவது மற்றும் பள்ளிக்கூட அதிகாரிகளாவது கவனிக்கின்றார்களா என்பது தான் கேள்வி. அக்கேள்விக்குப் பதிலை எதிர்பார்ப்பதும் கூடாதகாரியமே யாகும். ஒவ்வொரு சமயத்தில் மாணவர்கள் இது விஷயமாகக் கேள்வி கேட்பதையும் அதற்குப்பதில் உபாத்தியாயர்களும் கூட சொல்லுவதற்கு முடியாமல் தவிப்பதையும் நாம் நேரில் கண்டிருக்கின்றோம். இத்தியாதி சந்தர்ப்பங்களில் பள்ளிக்கூட அதிகாரிகளாவது அப்படித் தவிக்கும் ஆசிரியர்களுக்கு விஷயங்களை விபரமாகக் கூறித் தகுந்த முஸ்தீப்புகளுடன் இருக்கச் செய்கின்றார்களோ என்றால் அதுவும் கிடையாது ஐயோ! என்ன செய்வார் உபாத்தியாயர்; பாவம்.

வைத்திய பரிசோதனை (Medical Inspection) என்ற முறை மிக்க நன்மை யானது. இருதரத்தாருக்கும் அதாவது மாணவர்களுக்கும், பள்ளிக்கூடத்திற்கும் பெருத்த நன்மையை யளிக்கக் கூடியது தான். தொத்து நோய் வயப்பட்டிருக்கும் மாணவர்களைக் கண்டறிந்து பள்ளிக்கூடத்தினின்றும் நீக்கி விடவும், மற்றும் பரவச் செய்யாமல் பரிகாரம் தேடவும் இந்த வைத்தியப் பரிசோதனை உபகாரமாக இருக்கும் என்பதில் சற்றும் சந்தேகமேயில்லை. ஆனால், அப்பரிசோதனை நடை பெறும் முறையில் ஒவ்வொருவரும் குறை கூறி வருகின்றார்கள். பெற்றோர்கள் தாங்கள் கொடுக்கும் சொற்பவைத்திய சுங்கத்தினாலே தங்களது குழந்தைகட்கு மருந்தும் உதவி, நோயைக் குணப்படுத்தினால் போதும் என்று சந்தோஷப்படுவார்கள். மாணவர்களும் தங்களது பெற்றோர்களின் மனம் குளிர்ந்தால் தங்களது மனமும் குளிர்ந்து மகிழும் என்ற எண்ணத்தைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

தம்பிடியில் கலியாணம்; அதிலே கொஞ்சம் பாண வேடிக்கை என்பதைப்போல கொடுப்பது சொற்பக்காசு, வருஷத்துக்கு கீழ் வகுப்புக்கு எட்டணா, மேல்வகுப்புக்கு ரூபா ஒன்று இந்தத்தொகைக்கு நோயுற்ற காலத்து மருந்தும் மாணவர்களுக்கு உதவ வேண்டும் என்றால் பள்ளிக்கூட அதிகாரிகளால் முடியுமா; முடியவே முடியாது. பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன் நடத்தப்படும் பள்ளிக் கூடங்களில் உபாத்தியாயர்களது சம்பளத்துக்குக்கூட கஷ்டப்படும் பள்ளிக்கூட அதிகாரிகள் ஆஸ்பத்திரி வைத்து மருந்துதவுவது எங்ஙனம் சாத்தியமாகும்? வைத்திய பரீக்ஷையில் தேர்ச்சி பெற்று அனுபவமுள்ள வைத்தியர்களைக் கொண்டு மாணவர்களைப் பரிசோதனை செய்து உண்மையான நோயை அறிந்து அவ்வளவாவது வெளியிட்டு அதற்குப் பரிகாரங்களைத் தேடவோ மற்று ஆஸ்பத்திரி வைத்தியர்களுக்குச் சிபாரிசு செய்தோ பள்ளிக்கூட வைத்தியர்கள் நன்மை செய்து வருவதை நாம் போற்றிப் புகழாமல் இருக்கவும் கூடுமோ?

இந்தியாவில், பள்ளிக்கூட வைத்தியப் பரிசோதனை கொஞ்சகாலமாகவே விருத்தியடைந்து அதிகாரிகளினுடையவும் பெற்றோர்களினுடையவும் கவனத்தைக்கவர்ந்து வருகின்றது. இன்னும் நல்ல தேர்ச்சி பெற்ற வைத்தியர்களைக் கொண்டு பின்னும் நுட்பமாகப் பரிசோதனை செய்ய ஏற்பாடுகளும் நடை முறையில் பிரயத்தனத்தில் இருந்து வருவதாகவும் தெரிய வருகின்றது. இம்முறை முற்றிலும் வெற்றி பெறுவதற்குப் பள்ளிக்கூட அதிகாரிகளும் வைத்தியப் பரிசோதகர்களும் மாணவர்களின் பெற்றோர்களும் ஆகிய இம்மூவர்களின் கூட்டுறவு தான் மிக்க அவசியமாகும். இதன் வெற்றிக்கு இன்றியமையாத கூட்டுறவு ஏதோ சிற்சில காரணங்களால் கிடைக்காததனால் ஒருவித முடிவையும் பெற முடியாமல் இருப்பது மிக்க வருந்தத்தக்க விஷயமேயாம். நிலவரம் இவ்வண்ணம் இருக்க நமது மாகாண கல்வி இலாகா அதிகாரி (Director of Public Instruction) 1929-30 வருஷத்திய ரிப்போர்ட்டில் இந்த வைத்தியப் பரிசோதனை சம்பந்தமான விஷயத்தை வெளியிட்டுத் தமது அபிப்பிராயத்தையும் தெரிவித்துள்ளார். வைத்தியப் பரிசோதனையில் வெளியிட்ட நோய்களுக்குத் தகுந்த சௌகரியங்களைத்

தேடிக் கொடுக்காததும், பெற்றோர்கள் நோயின் விஷயத்தை நன்கு உணராமையும் உடனே பரிகாரந் தேட முயலாமையும்; பள்ளிக்கூட அதிகாரிகள் அதைக்குறித்து வற்புறுத்தா திருந்ததையும் இவைபோன்றவைகளினால் இவ்வியக்கம் முன்னேற்றமடைந்து அபிவிருத்தி யடைவதற்குப் பெரிய முட்டுக் கட்டைகளாய் இருக்கின்றன என்றும் வெளியிட்டுள்ளார். இன்னும், இந்த வைத்தியப் பரிசோதனை இயக்கம் நல்ல பலனைக் கொடுக்காம லிருப்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அதாவது நல்ல தேர்ந்த வைத்திய பரிசோதக மத்தியசபை இல்லாமையே. இப்பொழுதுள்ள பள்ளிக்கூடத்து வைத்தியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியான வைத்தியப் பரிசைஷகள் தேறியவர்கள் அவர்களுடைய பரீசைஷகளைப் போலவே அவர்கள் கைக்கொண்ட பரிகார முறைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. இவைகளை யெல்லாம் மேற்பார்வைபார்க்கவும் தணிக்கை செய்யவும் தகுந்த பெரிய வைத்தியர்கள் இது சமயம் இராததும் இவ்வியக்கம்முன்னேறுவதற்குப் பெரிய தடையாகவு மிருக்கின்றது. இந்தியாவின் சிற்சில மாகாணங்களில் இந்த இயக்கத்தை விருத்திக்குக் கொண்டுவர வேண்டிய பிரயத்தனங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. உதாரணமாக ஐக்கியமாகாணங்களில் 1928, 1929 இவ்வருஷங்களில் பள்ளிக்கூட அதிகாரிகளும் வைத்தியர்களும் இன்னும் மற்றவர்களும் சேர்ந்த ஒரு கான்பரன்ஸ் நடைபெற்றது.

ஒவ்வொரு வருஷத்திய கான்பரென்ஸிலும் இது சம்பந்தமாக ஒவ்வொரு அதிகாரியின் கூட்டுறவையும் நாடி உழைக்கவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேறின. அந்தக் கான்பரன்ஸ்களின் முடிவு படியே நடந்து சற்று அபிவிருத்தியையும் அடைந்ததாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவில் மற்று முள்ள மாகாணங்களில் இந்த வைத்திய பரிசோதனை இயக்க நடை முறையையும் இங்கிலாந்திலுள்ள பள்ளிக்கூட வைத்திய ஊழியத்தின் நடை முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசத்தையே எடுத்துக் காட்ட வேண்டுமே யல்லாது வேறொன்றும் சொல்வதற்கில்லை.

———

அதிருஷ்டக் குழந்தை:—கெக்ஸ் கெமெட் என்னும் பட்டிணத்தில் சமீபத்தி லெடுத்த கணக்குப்படி, 79 999 பேர்களிருந்தார்கள். அந்நகரத்தார் எல்லோருங்கூடி 80, 000 ஆகப் பிறக்கும் குழந்தைக்குப் பரிசுகள் கொடுப்பதாகத் தீர்மானித்தார்கள். சில நாட்கள் அப்பட்டணத்தில் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. எல்லோரும் புதிய குழந்தை எப்போது பிறந்து, தம் ஜனத்தொகையை 80000 ஆக்கப் போகிற தென்று ஆவலுடன் எதிர் பார்த்திருந்தார்கள். அக்குழந்தை மிகவும் ஏழையாயிருந்த ஒரு தொழிலாளிக்குப் பிறந்தது. ஊரார் அனைவரும் சேர்ந்து கொடுத்த பரிசுகளால் அவன் பணக்காரனாகி விட்டானாம்.

———


**உத்தம ஆசிரியர்**

உபாத்தியாயர்கட்கு உத்தம தோழனைப் போலவும் மாணவர்கட்கு ஆசிரியரைப்போலவும் விளங்கும் **உத்தமமான நூல்.** விலை அணா 12 இதில் ஆசிரியரின் வாழ்வும் வேலையும், ஆசிரியரின் உரிமையும், கடமையும், ஆசிரியர் ஒரு தொழிலாளி, மாணவர்களின் லக்ஷணம், குழந்தைகளின் மனோதத்துவம், கிண்டர் கார்டன் தேகாப்பியாசம், கல்வி கற்பிக்கும் முறைகள், போதனா சாதனங்கள், பாடக் குறிப்புக்கள், ஐம்பொறிகளின் பயிற்சி, தெரிந்ததினின்று தெரியாததைக் கற்பித்தல் ஆகிய சிறந்த விஷயங்கள் மிகத் தெளிவாயும் விரிவாயும் விவரிக்கப்பட்டுள்ளன. டிரெயினிங் ஸ்கூல் ஆசிரியர்கள் இதன் பயனைக் குறித்துப் புகழ்ந்துரைகள் பல அனுப்பியிருக்கின்றனர்.

வேண்டுவோர்:

**கல்பதரு பிரசுராலயம்,**

ராமசாமி தெரு, ஜீ. டி., சென்னை.





### சப்பாத்திக் கள்ளியை எருவாக்கும் விதம்.

———:o———

**ச**ப்பாத்திக் கள்ளி வெளியில் முட்களுடனும், உள்ளே ரசமுடனும், மிருதுவான நூல் போன்ற வஸ்துவுடனும் உள்ள தென்பது எல்லோரும் அறிந்த விஷயம். புதிதாக வெட்டிய சப்பாத்திக் கள்ளியில் 100க்கு 90 அல்லது 95 பாகம் தண்ணீர் இருக்கும். அது அழுகினால் ஒருவித புளிப்புள்ள ரசம் வெளிவரும். இந்த சப்பாத்திக் கள்ளியை மீண்டும் அழுகும்படி செய்தால் அது இரண்டு வாரத்திற்குள் அழுகிப்போய் அந்தப் புளிப்பான ரசமானது வெளி வந்து அதை முழுக்கிவிடும். அப்படியே விட்டுவிட்டால் ஒரு வருடமானாலுங்கூட சப்பாத்திக்கள்ளி சரியாய் அழுகாமலும் அதனால் அந்த முட்கள் மழுங்காமலும் இருக்கும். ஆகையால் அதை செவ்வையாய் அழுகச் செய்வதற்கு அதிலுள்ள அதிகமான ஈரத்தில் போதுமானதைத் தவிர மிஞ்சியதை வேறு விதமாக உபயோகிக்க வேண்டும். அதிலுள்ள அதிக புளிப்பு ரசத்தின் தன்மை யழிய வேண்டும். அப்படிச் செய்வதற்கு அழுகக் கூடியதும், ஈரமில்லாத உபயோகமற்ற வஸ்துக்களை அந்தக் கள்ளியுடன் கலக்க வேண்டும். சாதாரணமாக வைக்கோல், அரிலாள், உலர்ந்த புல், அல்லது இலைகள் முதலியவைகளை உபயோகிக்கலாம். இவைகள் ஒன்றும் அகப்படாவிட்டால், உலர்ந்த மண்ணை கலப்பதற்குப் போதுமானது.

2. அந்த சப்பாத்தி நன்றாய் அழுக வேண்டுமானால், மிகவும் நுட்பமாயுள்ள கிருமிகளுக்கு வேண்டிய "நைட் ரோஜன்" "பாஸ்பேட்" முதலியவைகளும், நடுநிலைமையில் இருக்க வேண்டும். ஏனென்றால், கிருமிகள் தான் அவைகளைச் செம்மையாய் அழுகச் செய்கின்றன. ஆதலால் நல்ல எலும்புத் தூளாவது, அல்லது திருச்சி பாஸ்பேட்டாவது அதனுடன் சேர்க்க வேண்டிய தவசியம். கிருமிகள் இருக்கின்றன வென்று நிச்சயமாய்க் கொள்வதற்கும், அதற்கு வேண்டிய "நைட் ரோஜன்" உண்டாவதற்கும் கொஞ்சம் மாட்டெரு சேர்க்க வேண்டும்.

3. சப்பாத்திக் கள்ளியை எருவாக்குவதற்கு ஒரு குழியை வெட்டி, அதில் போட்டுச் செய்வதே நலம். அந்த குழியானது நீளம் எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அகலம் மட்டும் ஆறு அடிக்குமேற் படாமல் இருக்க வேண்டும். ஏனெனில், தண்ணீர் விடுவதற்கும் எருவைப் புரட்டிக் கொடுப்பதற்கும் 6 அடிக்கு மேலிருந்தால் கடினமாய் இருக்கும். குழி தோண்டுவ தென்றால் சுற்றியுள்ள இடங்களை விடக் கொஞ்சம் உயர்ந்த இடத்திலேயே தோண்ட வேண்டும். மேலும் அந்தக் குழி மூன்று அடி ஆழத்திற்கு மேல் இருக்கக் கூடாது. ஏனென்றால், மழை காலங்களில் தண்ணீர் அதிகமாக

ஊற்ற முண்டாகி நீர் ததும்பிக் கொண்டேயிருக்கும்.

4. சப்பாத்திக் கள்ளியைக், குழியில் 6 அங்குல முதல் ஒரு அடி வரையில் பருமனுள்ள அடுக்காகப் போட வேண்டும். அதன் மேல் அதே பருமனுக்கு வைக்கோல் அல்லது களைப்புல் போன்றவைகளைப் பரப்ப வேண்டும். உலர்ந்த மண்ணை உபயோகித்தால் சப்பாத்திக் கள்ளியை நன்முய் மூடுவதற்குப் போதுமான அளவு அதன் மேல் 3 அல்லது 5 பவுன் வரையிலும் எலும்புத் தூளைத் தூவ வேண்டும். எலும்புத்தூள் கிருமிகளுக்கு வேண்டிய "பாஸ்பேட்" கொடுப்பதற்காகவே தூவப்படுகிறது. எலும்புத்தூள் கிடைக்கா விட்டால் குளத்து மண்ணோ, அல்லது ஆற்று மண்ணோ, அல்லது மீன் கழுவையோ உபபோகிக்கலாம். அதன் மேல் 15 பவுன் முதல் 20 பவுன் வரையில் மாட்டெருவைக் கொஞ்சம் தண்ணீர் தெளித்துப் பிசின் போலாக்கித் தெளிக்க வேண்டும். முதல் அடுக்கு மேற்சொன்னபடி ஆன பிறகு, திரும்பவும் முன் சொல்லியது போல சப்பாத்திக் கள்ளியைப் போட்டு, அதன் மேல் உலர்ந்த இலைகள் புல் முதலியவைகளைப் போட வேண்டும். பிறகு எலும்புத் தூளும் மாட்டெருவும் அதன் மேல் தூவ வேண்டும். இதே மாதிரி குழியின் மட்டத்திற்கு மேல் 3 அடி அல்லது 4 அடி வரையில் போட்டு குழியை நிரப்பவேண்டும். கடைசி அழுக்கின் மேல் 4 முதல் 6 அங்குலம் வரையில் பருமனுக்கு மண் போடவேண்டும். அப்படிப் போடும் மண்ணானது பக்கங்களையும் மேல் பக்கங்களையும் நன்முய் மூட வேண்டும். மேல் பக்கங்களையும் 2 அல்லது 3 அங்குல பருமனுக்கு மண்ணைப் பூசினுல் மிகவும் நலம். இரண்டு வாரத்திற்குள் எல்லாம் குழியின் மட்டத்திற்கு அமுங்கி விடும். அழுகும் வஸ்துக்களை சூரிய வெப்பத்திலிருந்தும் மழையிலிருந்தும் காப்பாற்ற, அந்தக் குழியின் மேல் கூறையினுல் ஒரு பந்தல் போடவேண்டும். அல்லது மண்ணைத் தூவி, மண்ணைப் பூசி விடலாம்.

5. சீக்கிரம் சப்பாத்திகள்ளி அழுகுவதும், எருவாக மாறுவதும் கிருமிகளுக்குக் கிடைக்கும் ஆகாரத்தைப் பொருத்தது. எரு அதி சீக்கிரம் கிடைக்க வேண்டுமென்ற அவசரமில்லாவிடில், ஒன்றும் செய்யாமலிருந்தால் கூட ஒரு வருடத்தில் எல்லா முட்களும் மழுங்கி வயல்களுக்கு உடனே உபயோகிக்கக் கூடும் தன்மையால் எரு கிடைக்கும். எரு வெகு சீக்கிரம் வேண்டுமென்முல் அடிக்கடி குழியைக் கிளறிக் கொடுத்துக் கொண்டும், போதுமான ஈரக்கசிவு இருக்கிறதாவென்று பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டும்.

6. குழி தோண்டிய இரண்டு வாரத்திற்குப் பின்னும், ஒவ்வொரு மாதக் கடைசியிலும் கூடியமட்டும் எரு வஸ்துக்களைத் துடுப்புக் கொண்டு கிளறிக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செய்து கொண்டு வந்தால் 5 அல்லது 6 மாதங்களிலேயே சப்பாத்தி முட்களெல்லாம் மழுங்கி எரு தயாராகிவிடும். அப்படிச் செய்யாவிட்டால் சில பக்கங்களில் அழுகியும், சில பக்கங்களில் அழுகாமலும் முட்களுடனுமிருக்கும். மேலும் கிளறிக் கொடுக்கும் போதெல்லாம் போதுமான ஈரமிருக்கிறதா வென்று பார்க்க வேண்டும். ஈரம் போதாவிடில் தண்ணீரை சமமாகத் தெளிக்க வேண்டும். ரொம்பவும் ஈரமாகவோ அல்லது மிகவும் உலர்ந்தோ இருந்தால் அழுகுதல் நின்றே அல்லது குறைந்தோ போய்விடும்.

---

அகம்பாவ குணமுள்ள எஜமானி:—வேலைக்காரியைப் பார்த்து அடி நான் அடிக்கடி பேச மாட்டேன்! நான் இப்படிக் கையை அசைத்தால் நீ "வா" என்று அர்த்தம். என்ன மனதிலாச்சா?

குறும்புக்குணமுள்ள வேலைக்காரி:—தெரிஞ்சுது அம்மா! நானும் சும்மா பேசறவளில்லே. இப்படித் தலையை ஆட்டினேன்னு நான் "வர முடியாது"ன்னு அர்த்தம். தெரிஞ்சுதா, அம்மா!



# "மனைவி மணாளன் மன்னிப்பு."

(ஆரியூர். வ. பதுமநாப பிள்ளை பாடியது.)

—:o:—

"ஈதென்ன மதி! இதுவரை பலவும்
ஓதியும் கேட்டும் உணர்ந்தன வெல்லாம்
எங்கொளிந்தனவோ? எங்கணும் பெரிய
துங்கமாகச் சொலப்படும் பெயர்தான்!
புகல்வன ஞான போதனைகள் தாம்!
அகத்தில் அநீதிக் (கு) அஞ்சுவதே இலே!
எனை விடுத்திரவில் இழிந்த நாரியரின்
மனையை அடுத்து மகிழ்வோ டிருத்தல்
உண்மை இன்பம் உறுவிப்பதாமோ?
வண்மைக் கேற்ற வழியிது ஆமோ?
குடியுங் கூத்தியும் குடியைக் கொடிய
மிடியினி லாழ்த்தி விடுவனவன்றே?
அழகிய குடும்பம் அலங்கோலமாக
தழல் சான்முகத் தாம் கைப்பிடித்த
என் கண்ணீரை எண்ணி நடத்தல்
என் (று)"—என மனைவி ஏங்கி நிற்கினுல்!

◆ ◆ ◆

கணவர்க்கு இல்லாள் காலம் முற்றுந்தான்
குணநல மதனுல் கொடுப்பள் மன்னிப்பே!
பல துயருந் தன் பங்காய் ஏற்று
குல விளக்காகி குடும்பக் கவலையை
தானே தாங்கி, தன் கணவன் சுகம்
தானே கொள்ள சமைத்து படைத்து
இன்பொ(டு) உண்பித்து எக்கவலையுந்தன்
அன்பர்க்(கு) எய்தாவாறு நடப்பளே!
"அவர் மகிழ்ந்திருப்பின் அதுவே போதும்!
உவமையில் களிப்பெனக்(கு)
[உறுவிக்கும் அஃதே!"—
என இருப்பள் அவள்! எத்தனையோ சினம்
மனத்தில் வையாது மன்னித்துளாளே!
எத்தனை அடிகள்! இயம்பு சொல்லம்புகள்
எத்தனை! அவரால் எய்திய இடத்தும்
நெஞ்சில் கொண்டு நில்லாதவரொடும்
அஞ்சுகம் என்ன அளவளாவுவளாய்
இன்புறத் தழுவி இருப்பள் பன்முறையே!
அன்பொடு தன் நகை அனைத்தும் அளித்து
வெற்றுட லாகியும் வெறுத்திலள் கணவனை!
கற்பினுக்(கு) அணியாய், கணவனை அணியாய்
கருதி உள்ளம் களிப்புற்றிருந்தாள்!
வருத்தம் எதையும் மகிழ்ந்தேற்றிருந்தாள்!
'கணவனே இறை ;பொற் களஞ்சியம் அவனே'
குணவதி அத்திறக் கொள்கையை உடையள்
சீறித் தனக்குச் சினம் எழுந்திடினும்,
மீறி ஐயோ வெகுண்டோம் எனவே
எண்ணி இரங்கி இன் முகத்துடனே
உண்ண அழைக்கும் உள்ளன்(பு) உரைக்கப்
படுமோ? பிழைகள் பலசெயும் ஆடவர்
பிடிசோறளிக்கப் பெறுவரோ, மனைவி
மன்னிப்பிலதேல்! மாண்புயர் கற்பின்
உன்னத மகளிரை உள்ள நாள் மட்டும்
கண்ணீர் சொரிந்து கலங்கிக் கதறப்
பண்ணிய கணவர், பத்தினி மாள
எவருங் காப்பவர் இன்றி தமக்குக்
கவலை மிகுந்திட கண்யம் இழந்து
நடு வீதி நின்று நால்வர் சிரிக்கப்
படுபவராய் மிகப் பரிபவப்படுதல்
இன்றும் எத்தனையோ இடங்களில் நேரும்
வன்றுயர் மிக்க வாதனை யன்றே!

◆ ◆ ◆

இனி, மணாளன் ஈயும் மன்னிப்புகள்
தனிச்சிறப்பினவாய் சாரும் பலவே!
எத்தனை ஏச்சு! எத்தனை பேச்சு
எத்தனை சிடுசிடுப்பு! எத்தனை சண்டை!
பகர் ஒருமொழிக்குப் பலமொழி பதிலோ?
அகமுடையான் உரை அவற்றைக் கேட்டுச்
'சிவனே' என்று செல்ல வொண்ணுதோ?

தவறு மன்னிக்கும் தன்மை நன்றன்றோ !
உடனே எதிர்த்து நின்(று) உரையாடுவதைக்
கடமையாய் அவளும் கருதினள் கொல்லோ !
புத்திகள் பலவும் பகட்டியும் அவள் தன்
சித்தம் சிறிதும் சீர் திருந்திலளே !
கொண்டவன் மீது கொண்ட சினத்தால்
அண்டும் மக்களையும் அடிக்கின்றனளே
உற்ற மாமியுடன் ஓயாச் சண்டை !
"குற்றம் இழைத்தேன் ; கொதித்தருளாதீர் !
என்றும் அவ்வண்ணம் இனி நடவேன் "—என
அன்பொடு மாமியின் அடியில் வணங்கின்,
அன்றே இல்லில் அமைதி நிலவிடு
மன்றோ! அதை அவள் அகங் கொளல் என்றோ?
வரவோ சிறிது ; வருபவர் தொகையோ
பெருகிடுகின்றது ! பேசு குடித்தனச்
செட்டோ இல்லை ; சீர்பெறல் எவ்விதம் ?
'வெட்டெனப் பேசும் வீண்மொழியாளே !
உன் கதி என் பின் உறுவ(து) எவ்விதமோ ?"
என்று கணவன் இரங்கி நிற்பானேல்,
'எத்தனை விதவைகள் இன்று பிழைக்கிலர்,
செத்து விட்டாரோ செப்பும் அன்னவரே !
பேசும் அவர்போல் பிழைக்கேனோ யான்,
நேச மிகுதியோ நீர் இரங்குவதே !'—
என்பள் பட்டி ; இது என்ன மூட
வன்மொழி ! அவள் சிறு மதி அவ்வளவே !
எது திருந்துதல் இனி அவள் ? செய்யும்
தீது தனக்கெதிர் தீது தகாது !
அவட்குக் கதி நமை அன்றி வேறில்லை !
அவளை என்றுமே அன்பொடு மன்னித்(து)
இவ்வாழ்க்கையினை இனி நடத்துதலே
செவ்வியதென்று தேர்வதே முறையாம் !
ஆயிரம் கொடியவள் ஆயினும், பெற்ற
சேய்களுக்(கு) அவளே செல்வத் தாயாம் ;
வனைய எவரும் இயைவரோ அவள்போல் !
பானலம் மாறாப் பாலகர் தம்மைச்
செப்பும் அவளிடம் சீராட்டிடவே
ஒப்புவித்(து) ஓய்ந்து உற்றிடும் த்ருப்திபோல்,
மற்றவரிடத்து மகிழ்வொடு விடுத்து
உற்றிட ஒண்ணுமோ ஓதும் திருப்தியே
ஆதலின், அன்பொ(டு) அவளை மன்னிக்கும்
காதலர் சுவர் கணக்கில் மன்னிப்பே !

◆ ◆ ◆

மனைவி கணவனின் மட்டில் பிழைகளை
நினைவில் கொள்ள நேரா(து) அவனை
மன்னித்திடவும், மனைவி புரிந்த
இனியல் பில்லா எண்ணில் செயல்களை
கணவன் மன்னிக்கக் கருணை உற்றிடவும்,
மணமகன்—அவனின் மனைவி இருவரும்
ஒருவரை ஒருவர் உவந்து மன்னித்தல்
பெருமையொ டில்லறம் பேணு நன்முறையாம்.
இச்சூட்சுமத்தை எவரும் உணர்ந்து
பொய்ச் சூதொழித்துப் புவியினில் வாழ்க !
'மன்னித்தல்' என்பது வானவர் குணமாம் :
இன்னியல் புடைய இல்லறம் நடாத்த
ஆட்டி வைக்கும் ஆண்டவன் ஒன்றாய்க்
கூட்டி வைக்க குலவும் சதிபதி,
ஒருவர்க் கொருவர் உயர் மன்னிப்பைத்
தருதலே மாட்சி தனை பெறுவிப்பதாம் !
பிறரை மன்னிக்கும் பெற்றி பெற்றிலமேல்,
இறைவன் மன்னிப்பை எய்தல் எவ்விதமே ?
மன்னித்த வாறே வாழ்வு நடாத்தி,
மன்னுங் குடும்ப மானம் வெளியில்
செல்லாவண்ணம் செவ்விதில் அடக்கி,
எல்லார்க்கும் இன்பம் ஈந்து, இப்புவியில்
பெருமை மிக்கவராய்ப் பேரன்புடையராய்
இருமை நலமும் இனிதெய்துவீரே !

---

மறுபடியும் விலையைக் குறைத்து விற்கிறோம் !
கீர்த்தி பெற்ற
**ருக்மணி குக்கர்**
சமையல் அடுக்கு செப்டெம்பர் 1-ந் தேதி முதல் 1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய எழு அளவுகளும் முறையே ரூ. 10-8, 14, 18, 23, 29, 35, 41 ஆகக் குறைத்து விற்கின்றோம்.
**ருக்மணி குக்கர் கம்பெனி**, இராயபுரம் (1) சென்னைப்பட்டணம்.
விபர புத்தகம் இனும்.

# *சாமுத்திரிகா லக்ஷணம்.

## 1. புருஷரின் பாதாதிகேசம்.

கேபியெல் அவர்கள் எழுதியது.

*(உரிமை ஆசிரியருக்கு உரியது.)

—:O:—

**சாமுத்திரிகா லக்ஷணம்** என்பவது ஒருவனையோ, அல்லது ஒருத்தியையோ அவர்களது அங்கங்களையும் அவயவங்களையும் பார்த்த க்ஷணத்திலேயே, அவரவர்களின் குணங்களையும் ஆற்றல்களையும் முன்னமேயே அறிந்து கொள்ளச் செய்யும் அருமையான சக்தி பெற்ற சாஸ்திரமாகும். நமது முன்னோர்கள் இந்த சாமுத்திரிகா லக்ஷணத்தை நன்றாக அறிந்திருந்தார்கள். அந்தச் சாஸ்திரத்தின்படியே விவாகங்களும் செய்து மனமொருமித்த சதிபதிகளாய் வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அத்தகைய பெருமையும் அருமையும் வாய்ந்த சாமுத்திரிகா லக்ஷணத்தை விவரித்துக் கூறுவாம் :—

பாதத்தை அடியாகக் கொண்டு சிரசை முடியாகக் கொண்டு ஒவ்வொரு அவயவத்தின் ரீதியையும் அவைகளைப் பெற்றிருப்பதனாலாய பலா பலன்களையும், நன்மை தீமைகளையும் கரதலாமலகம் போல் விளங்க வைத்தலால் இக்கட்டுரைக்குப் 'பாதாதிகேசம்' என்று பெயரிடப்பட்டுள்ளதைக் கவனிக்கவும். சிருஷ்டியில் புருஷனே ஏற்றமடைந்திருப்பது பற்றி முதலில் புருஷனது சாமுத்திரிகத்தை விவரித்து அதன்பின் ஸ்திரீகளின் அங்க அமைப்புகளைப் பற்றிக் கூறலாம்.

**எவருக்கு உள்ளங்கால் சிவப்பாகி வியர்**வையற்றும் மிருதுவாக இருக்கின்றதோ, அவர்கள் ஐஸ்வர்யவான்களாயும் புண்ணிய காரியங்களைச் செய்வதோடு தீரர்களாகவும் புத்திமான்களாகவும் இருப்பார்கள். உள்ளங்கால் தாமரைமலர் நிறத்துடனிருந்தால் ராஜ்யப் பிராப்தியும், கீர்த்தியும், உண்டாகும். பாதம் விசாலமாய் முறம்போல் அகன்றிருந்தால் சுகமென்பது கொஞ்சமுமில்லாமல் தரித்திரத்துடன் இருப்பார்கள். நீண்டிருந்தால் தேச சஞ்சாரியாக விருப்பார்கள்.

**கால் நகங்கள்** மாமிசம் மாதிரி சிவப்பு வர்ணமாயிருந்தால் ராஜ்யாதிகாரியாகவும்; தாமிர லோகத்தைப்போல் சிவந்த வர்ணமாக வாவது வெண் தாமரைப்பூ வர்ணமாகவாவது இருந்தால் ஐஸ்வரியம்; கொஞ்சம் சிவப்பு வர்ணமாயிருந்தால் பூஸ்திதிகள் ஏற்படும். சற்று வெண்மையாக விருந்தால் சகஜமான ஸ்திதி உண்டாகும். கருத்த வர்ணமாயிருந்தால் ரோகபீடை பச்சை நிறமாகவிருந்தால் துராசார முடைய பாபி. கால் நகங்கள் விசாலமா யிருந்தால் ஐஸ்வரியம், முனைகள் சூலத்தைப்போல் கூர்மையாயிருந்தாலும், வளைந்திருந்தாலும் தரித்திரமனுபவிப்பார்கள். கால் நகங்கள் சொத்தை அல்லது புழுத்திருந்தால் சதா துக்கிகள்

**கால் விரல்கள்** சிவப்பா யிருந்து நடுவில் சந்தில்லாமல் ஒன்றொடொன்று சேர்ந்து அழகாக அமைந்தால் ராஜ்ய லாபம். அவை ஒன்றோடொன்று சேராமல் இடம் விட்டிருந்தால் சாமானியமான ஜீவியாகவும், ஸ்திரியாகவு மிருக்கும். கால் விரல்கள் கிழிந்த மாதிரி மெல்லியதாக விருந்தால் தரித்திரம். கால் பெருவிரலைக் காட்டிலும் அடுத்த விரல் நீண்டிருந்தால் பல ஸ்திரீகள் சம்போகம் ஏற்படும். கால் சுண்டு விரல் மிருதுவாயிருந்தால் பிரசித்தி. நீண்டிருந்தால் ஐஸ்வரியம்; கோணலாக அல்லது மேல் திருப்பியாவது இருந்தால் துக்கம்.

**புறங் கால்** ஆமையின் ஓட்டைப் போல் இருந்து சற்று உஷ்ணமாயிருந்தால் ராஜ்ய பரிபாலனம், அல்லது உலக பூஜ்யதையையாவது வெகு சாமர்த்தியமாக தனம் பிராப்தியாவது சம்பவிக்கும்.

**கணுக்கால்** எலும்புகள் தெரியாமலிருந்தால் ராஜ்ய லாபம். அவைகள் சமமாக விருந்தால் சகல ஐஸ்வரியங்கள் சேரும்.

**குதிக்கால்** புஷ்பச் செண்டுபோல் மிருதுவாயும் அழகாயும் இருந்தால் ராஜ்யாதிகாரமாவது, அல்லது கியாதி மிக்க சம்பத்தாவது உண்டாகும்.

**கண்டைக்கால்** சிறுத்து உருண்டையா யிருந்து, உரோமங்கள் மூடிக்கொண்டு அழகாயிருந்தால் பூபதிக் கிணையாவான். யானை தும்பிக்கை போலிருந்தால் ஐஸ்வரியம்; நாய் நரிகளுக் கிருப்பதைப் போலிருந்தால் தரித்திரம்; குட்டையாயிருந்தால் சுபப்பிராப்தி.

**முழங்கால்** பெரியதாய் இரண்டும் வித்தியாசமில்லாமல் மாமிசம் மூடிக் கொண்டிருந்தால் ராஜ்யாதிபத்யம் உண்டாகும். பெரியதாய் மாமிசமில்லாமலிருந்தால் பூரண ஆயுள் உண்டாகும்; சிறியவைகளா யிருந்தால் உலக பூஜ்யதை உண்டாகும்; விசாலமாயிருந்தால் தரித்திரம்; குழிகள் விழுந்திருந்தால் ஸ்திரீ மாய்கைகளுக் குட்பட்டு கஷ்டங்கள் அனுபவிக்க நேரிடும்.

**தொடைகள்** யானை துதிக்கை போலிருந்தால் ராஜ்ய பரிபாலனம்; பெரியதாகவும் உயரமாகவும் உருண்டையாயிருந்து உரோமங்களில்லாமலு மிருந்தால் விசேஷ ஐஸ்வர்யம், ரோமங்கள் நிறைந்து சன்னமாயிருந்தால் தரித்திரம்.

**ஆண்குறி** சிறியதாக விருந்தால் ஐசுவரியம்; பெரியதாக விருந்தால் சந்தானமிராது. மெல்லியதாக விருந்து குட்டையாயு மிருந்தால் ராஜ்ய பரிபாலனம். அகலமாயும் நீண்டு மிருந்தால் தரித்திரம். ஆண்குறியின் இடது பாரிசம் சாய்வாக இருந்தால் கெட்ட எண்ணம் தரித்திரம் இவை உண்டாகும். அதிகமாக நீண்டிருந்தால் துக்கமும் தரித்திரமும் உண்டாகும். நேராக விருந்தால் சந்தான சேஷமம்; கீழுக்குச் சாய்ந்தால் விஷேச பாக்கிய மிராது. மிருதுவாக இருந்தால் நீர் வியாதிகளுண்டாம். பீடை நரம்புகள் மூடியிருந்தால் குறைவான சந்தானம். நுனியில் கீற்றிருந்தால் ஐஸ்வரியமுடைய ஸ்திரீகளுடைய சம்போகம் கிடைக்கும். ஆண் குறி சிவப்பாயிருந்தால் ஐஸ்வரியம்; வெண்மையாயிருந்தால் தரித்திரம்.

**விருஷணங்கள்** இரண்டும் வித்தியாசமின்றி சமமா யிருந்தால் பூபதி; இரண்டும் ஒரே விதமாய் இல்லாமல் வித்தியாசமிருந்தால் சோரத்துவம்; அவை மேலுக்கு ஒட்டிக் கொண்டிருந்தால் சொற்ப ஆயுள். கீழுக்கு நழுவியிருந்தால் பூரண ஆயுள் ஒன்று மேலே யிருந்து மற்றொன்று கீழிருந்தால் மேக ரோகம் உண்டாகும். கோணலா யிருந்தால் ஈனஸ்திதி. பஞ்சைப்போல் மென்மையாயிருந்தால் சந்தானம் இராது. **ஒரே ஒரு விரை யிருந்தால் நீர்கண்டம்.**



**இரண்டு விரைகளும் இல்லாம லிருந்தால் சந்தானமே இராது.**

மூத்திரமானது இரண்டு மூன்று தாரையாகத் தாட்டியாகவும் இடப்புறமிருந்து வலப்புறம் விழுந்தால் அரசர்க் கிணையான சம்பத்துடையவராவார். சொட்டு சொட்டாக நீர்தெளித்த விதமாகத் துளித்துளியாக விழுந்தால் தரித்திரம். ஒரே தாரையாக சன்னமாக விழுந்தால் புத்தியும் ரூபமும் உடைய சந்தானங்கள் உண்டாகும். பெருத்த தாரையாகவும் வெகு வேகமாகவும் வந்தால் ஐஸ்வரியம். அதிக இரைச்சலோடு வந்தால் சர்வ சௌக்கியம். இரைச்சலில்லாமல் வந்தால் தரித்திரம். துவாரம் காய்ந்திருந்தாலும் தரித்திரமே உண்டாகும்.

(தொடரும்.)





ஸ்ப்ளிவரால்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

காஸ்ட் ராலக்ஸ்
மூலிகை சேர்ந்த
சிற்றுமணக் கெண்ணெய்

ஜ்வரேக்
எவ்வித ஜ்வரங்களுக்கும்

# நஞ்சன்கூடு பல்பொடி

சோல் ஏஜெண்டுகள்:- யுனைடெட் சன்லைட், பந்தர் தெரு, மதராஸ்



## ரோல்டுகோல்டன் தங்க ஆபரணங்கள்.

தக்க லாபம்! குறைந்த விலை!!



ரூபாய் 500 மதிப்புள்ள 280 கெஜ்ஜையுள்ள தங்க எலக்ட்ரோ வங்கி ஒட்டியாணம் நெ. 1. விலை ரூ. 3-8-0. நெ. 2. ரூ. 2-12-0. 65 காசுள்ள பிரஞ்சு காசுமாலை ரூ. 3-0-0. ரூ. 2000 மதிப்புள்ள இமிடேஷன் டைமன் அட்டிகை ரூ. 4-12-0. 1 ஜதை 7-கல் கம்மல் அணா 10. 1 ஜதை வலையல் அணா 10. 2 வருஷம் உத்திரவாதம். நாடகத்திற்கு வேண்டிய புதிய சீன்களும், டிரஸ்களும், டோப்பாக்களும், விலைக்கும், வாடகைக்கும் தயாராய் இருக்கிறது. ஒரு முறை பரீக்ஷியுங்கள். அரை அணா ஸ்டாம்பு அனுப்பியவர்களுக்கு கேட்லாக் அனுப்பப்படும்.

கே. நாதமுனி அண்டு சன்ஸ், 168, சைனபஜார், மதராஸ்.

## என்றும் தங்களுக்கு ஊழியம் செய்தலே நமது கடமை

சுதேச பொருட்களை ஆதரித்தல் பொது மான சம்மதம்

**ஸ்ரீமதிகளுக்கோர் உறுதிமொழி**

நாகரீக சேலைகள் பல ரகங்களில் ரம்யமான வர்ணங்களில் எப்பொழுதும் எம்மிடம் ஏராளமாக உள்ளன.

வெகு மரியாதையுடன் உங்களை வரவேற்று வேண்டியதை திருப்தியுடன் உங்களுக்கு கொடுத்தனுப்ப காத்துக்கொண்டிருக்கிறோம்.

# S. R. பாலுசாமி ஐயர் & சன்ஸ்.,

பிரதம, மதுரை, காசி ஜவுளி வியாபாரம்,

**நாம் கையாண்டுவரும் சில தினுசுகள்.**

காஞ்சி, பெனாரிஸ் முதலிய பட்டு சரிகை சேலைகள்; பெங்களூர், பிலேச்சர் சில்க் சேலைகள்; தர்மாவரம் காஞ்சிபுரம், சொந்த தரியில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு சேலைகள்; மதுரை, டக்கா நூல் சேலைகள்; துப்பட்டா, அங்கவஸ்திரம் முதலியன. சேலம், பெத்தாபுரம் பட்டு வேஷ்டிகள்; ஜரிகை தலைகுட்டைகள், நவீன நாகரீக ரவிக்கைத் துண்டுகள்; ஜம்பர்கள், சால்வைகள், சேலம் வேஷ்டிகள் முதலிய நம் நாட்டிலேயே நெசவு செய்யப்படும் ரகங்கள்.

அநேக வருஷங்களாக சுதேச பொருட்களையே கையாண்டுவரும் எம்போன்றவர்களை ஆதரிப்பதற்கு இதுவே ஏற்ற சமயம். அதிலும் நாமோ இதுவரையில் உயர்ந்த சரக்குகளையே எப்பொழுதும் கை வசத்தில் நிறுத்தி, சாயத்திற்கும் நெடுநாளுழைப்பிற்கும் பல்லாண்டுகளாக உத்திரவாதம் கொடுத்து வந்திருப்பதால் எமக்கு பேரும் புகழும் ஏற்பட்டுள்ளது. ஆகையால் சுதேசப் பொருட்களை ஆதரவு செய்யவேண்டுமென்ற தீவிர உறுதி கொண்ட அனைவரும் எமது சரக்குகளையும் உறுதிமொழிகளையும் ஓர் முறை பரிசிலனை செய்யுமாறு வேண்டுகின்றோம்.

இந்திய கிருஸ்தவர்களால் நாம் மிகவும் கொண்டாடப்பட்டுள்ளோம்.

ஸ்தாபிதம் 1901. டெலிபோன் 3506.

83, நயினியப்ப நாயக்கன் தெருவு பார்க் டவுன், சென்னை.


166421




## ரேடியோ சங்கீதம்.

"கமலாநாதன்" பி.ஏ. எழுதியது.

(காபிரைட்)

—:o:—

"4½ மணிக்கு வருகிறேனென்று சொல்லிச் சென்ற நாகராஜன் இன்னும் வரக்காணோமே. அரைமணிநேரம் பொறுத்துப் பார்க்கிறேன்." என்று சொல்லிக் கொண்டே "தமிழகத்தை"க் கையில் எடுத்தேன். சாய்வு நாற்காலியில் சாய்ந்தேன். "நாணய நடமாட்டம்" எனும் கட்டுரையை வாசிக்க ஆரம்பித்தேன். ஆனால் என் ஞாபக முழுவதும் வேறு இடத்தில்! சற்று நேரம் கழிந்தது. அடுத்த வீட்டுக் கடிகாரம் ஐந்துமணி அடித்தது. சட்டென என் 'ரிஸ்ட் வாட்ச்'சையும் பார்த்துக்கொண்டு துள்ளி எழுந்தேன். "இனித்தாமதிக்க முடியாது, இன்று ஒரு நாளு மில்லாமல் திருவல்லிக்கேணி ரேடியோவில் ஸ்பெஷலாகப் பாடுவதற்குப் பெங்களூர் நாகரத்தினம் வந்திருக்கிறார். நாகராஜன் வந்தால் டிராமில் ஏறிப் போகலாம். அவன் வரவில்லையே! சரி, நான் மட்டுமாவது பீச் ரோடு வழியாக வேகமாய் நடந்து செல்வோம்" என்று நினைத்துக் கொண்டே வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

ஹைகோர்ட்டைத் தாண்டி கோட்டையை அடைந்தேன். அங்கு "ஸவுத் சீ கேட்" (South sea gate) டையும் தாண்டிக் 200 கஜம் தெற்கே போயிருப்பேன். "ஐயோ" என்ற குரல் கீழ் பக்கத்தில் உள்ள மணல் மேட்டிற்கு அப்புறமிருந்து கிளம்பிற்று. எனக்கு மயிர்க் கூச்செறிந்தது. எனக்கு முன்னால் காலேஜ் மாணவர்கள் அறுவர் உல்லாசமாய் கை கோர்த்துக் கொண்டுபோய்க் கொண்டிருந்தனர். அவர்களும் திகைத்து நின்றனர்.

மறு நிமிடம் கீழ்த்திசையாய் நோக்கி அவ்வறுவரும் நானும் ஓடினோம் மணலில் வேகமாய் ஓடமுடியவில்லை. ஆயினும் ஆத்திரம் எங்களைத் தள்ளிக் கொண்டு சென்றது. மணற்குன்றைத்தாண்டி அப்புறமடைந்தோம். அப்பா! இப்பொழுது நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறதே! ஒரு சிபாய் அந்நேரத்தில் தன்னந் தனியே அவ்வழிச் சென்ற அழகியதோர் சிறுமியைக் கட்டித் தூக்கிக்கொண்டு வந்து அம்மறைவிடத்தில் வைத்துப் பலாத்காரம் செய்ய ஆரம்பித்துக் கொண்டிருந்தான். பதினாறு வயதுகூட நிரம்பியிராது. அவ்வெழில் நங்கைக்கு அவள் வாயைச்சுற்றி அப்பொழுதே துணியை இறுகக்கட்டிக் கொண்டிருந்தான் அப்பாதகன் பேயிடத்திலகப் பட்ட பிள்ளையைப் போல் தவிக்கிறாள் மங்கை. அதைக்கண்ட எங்களது ரத்தம் கொதிக்க ஆரம்பித்தது உடனே ஒரே சமயத்தில் அனைவரும்கூடி அவன்

மீது பாய்ந்தோம். பேர்வழி பெரும் முரடன்தான். ஆயினும் நாங்கள் எண்ணிக்கைக்காவது எழுபேரல்லவா? எங்கள் கைத்திறனெல்லாம் காட்டினோம். அவனும், பெண்ணின்மீதுள்ள கைப்பிடியை விடாது சற்றுச் சமாளித்துப் பார்த்தான். எங்களில் ஒருவரது மூக்கு அவன் விட்ட குத்தில் உடைந்து விட்டது இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் அச்சிறுமியைக் காக்கும் எண்ணம் எங்கள் மனத்திலோங்கி நிற்க அவனைத் தைரியமாய்ப் பின்னும் எதிர்த்தோம். இவ்வாறாகக் கொஞ்ச நேரம் சண்டை நடக்கும்போது, சிப்பாய் சற்று அஜாக்கிரதையாய் நின்றான். உடனே நான் அப்பெண்ணை ஒரே தூக்காக் தூக்கிக்கொண்டு அப்புறம் சென்று விட்டேன். அவசரமாக அவள் வாய்க்கட்டை அவிழ்த்தேன். சற்று மயக்கமாயிருந்த அவள் முகத்தில் சிறிது கடல் ஜலத்தைத் தெளித்து என் கைக்குட்டையால் விசிறினேன். சிறிது நேரத்தில் சிப்பாயைத் துரத்திவிட்டு அம்மாணவர்களும் வந்து சேர்ந்தனர். சற்றுப் பிந்தியிருந்தால் நங்கையின் மாசற்ற கற்பிற்கு அப்பாதகனால் பங்கம் விளைந்திருக்கு மென்பது திண்ணம். நாங்கள் எழுபேர்களும் அவளை மெல்ல ஹைகோர்ட் வரை நடத்திச்சென்று ஒரு ரிக்ஷாவில் அவளை ஏற்றி வண்ணாரப்பேட்டையிலுள்ள அவள் வீட்டிற்கு அனுப்புவித்தோம்.

“அடடா! ரேடியோ வீணாய்ப் போகிறதே $5\frac{3}{4}$ மணி ஆய் விட்டதே என்று தென் திசை நோக்கி விரைந் தோடினேன். “அது என்ன சார், அங்கு கூட்டம் கடற்கரை யோரத்தில்” என்று கேட்டுக் கொண்டே ஒருவன் தலை தெறிக்க என்னைக்கடந்து “செனட் ஹௌஸ்” ஸுக்கு முன்னுள்ள கடற்கரைக்கு ஓடினான். நானும் இயந்திரத்தி லகப்பட்டவன்போல் அவனைத் தொடர்ந்தேன். ஜலக்கரையை அணுகினேன். ஏகக்கூட்டம். ஆடவரும் பெண்டிரும் கூர்ந்து எதையோ பார்த்துக் கொண்டிருந்தனர். நானும் சற்று நிதானித்துப் பார்த்தேன். ஐயோ! என்ன அலங்கோலம். அங்கு ஒரு ஸ்திரீயின் உடல் அலையால் அங்கு மிங்கும் அலைக்கப்பட்டுக் கொண்டு கிடந்தது. மேலெல்லாம் வெளுத்திருந்தது. முக்கால்பாகம் உடல் ஆடையற்று ஆபாசமாய்க் காணப்பட்டது. அப்பொழுதே ஆங்கு செந்தலை வீரர்களும் தோன்றினர். ஓர் வேலையாளை விட்டு அச்சவத்தைக் கரைமீது இழுத்துப் போட்டனர். இறந்துபோன அந்தஸ்திரீக்கு 40, 45 வயதிருக்கும். அவள் மீது நாற்றமோ சகிக்கக் கூடவில்லை. பாவம், இவள் யாரோ? எப்பொழுது எப்படி ஜலத்தில் விழுந்தாளோ?” என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டு நிற்க, தலைவிரி கோலமாய் ஒரு மனிதனும் ஒரு பால்ய வயதுடைய பெண்ணும், ஒரு சிறுவனும் அலறிக்கொண்டு வந்து சேர்ந்தனர். கூட்டத்திலுள்ளோர் சற்றே ஒதுங்கினர். புதிதாய் வந்த மூவரும் அப்பிணத்தின் மீது வந்து வீழ்ந்து கதறவாயினர். சங்கதி என்ன வென்று நான் விசாரிக்கவே, அந்த ஸ்திரீ 2 நாட்களாக வெளியில் சென்றவள் வீட்டிற்கு திரும்பியே வரவில்லையென்றும், அவளுக்கு வலிப்பு நோய் அடிக்கடி வருவதுண்டென்றும், அதனால் சமுத்திரக்கரையோரத்தில் வந்த பொழுது வலிப்புவந்து அலையால் அடித்துக்கொண்டு போகப்பட்டிருப்பாளென்றும், அங்கு வந்தவர்கள், இறந்தவளுடைய கணவனும் பிள்ளைகளுமென்று அறிந்தேன், “ஐயோ, தெய்வமே! இவள் முடிவு இவ்வாறாயதா?” என்று வருந்திய மனத்துடன் நின்றேன் சற்றுவடதிசை திரும்பினேன். பளிச்சென்று லயிட் ஹௌஸ் விளக்கு வெளிச்சம் என்கண்களில் வீழ்ந்தது. கைக்கடியாரத்தைப் பார்த்தேன். “மை காட்” (My god) $6\frac{1}{4}$ ஆய் விட்டதே; இன்னும் ஒருமணி நேரம்கூட இல்லையே என்று ஓட ஆரம்பித்தேன்.

நடை பாதை யோரத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் விதவிதமான மோட்டார்களையும் அவைகளில் வெகு ஒய்யாரமாய் நாகரீக உடையுடன் கூடி வீற்றிருக்கும் சுந்தரிகளையும், பாதை யோரத்தில் அச்சுந்தரிகளின் முகதரிசனத்திற்காக அங்கு மிங்கும் உலாவுவதுபோல் பாவனை செய்யும் வாலிபர்களையும் பார்த்து மகிழ்ந்து கொண்டே, “ரேடியோ”ஸ்தம்பத்தின் பக்கத்



தை அடைந்தேன். அங்கு ஆடவரும் பெண்டிரும் ஒரே கூட்டமாய் உட்கார்ந்து கொண்டிருந்தனர். நிற்கக்கூட இடமில்லை. அதுவே சற்றுத் தென்புறத்தில் விலகிப் போய்த் தனியாய் உட்கார்ந்து கொண்டேன். எங்கிருந்தோ நாக ராஜனும் வந்து சேர்ந்தான்.

ஆ ஹா! என்ன ஆனந்தம்! பிரம்மானந்தம்! நாகரத்தினம் கல்யாணி ராக ஆலாபனம் செய்கிறார். மணலில் அமர்ந்திருந்த வரெல்லாம் ஆண்களும் பெண்களும் ஆனந்த பரவசமாய்த் தத்தம் தலையை யந்திரப் பாவை போல் ஆட்டிக்கொண்டிருந்தனர். அவர்களில் நானுமொருவன், சில குழந்தைகள் மாத்திரம் கூட்டத்திற்கு வெளியே மணலில் விளையாடிக் கொண்டிருந்தன. நான் பாட்டில் லயித்து விட்டேன். “ராஜீ, அதோ பாரடா, சட்டென்று பாரடா’ என்று நாகராஜன் என்னைத்தட்டி வடபுறம் சுட்டிக் காட்டினான்.

சென்னைத் திருட்டு என்றால் மிகவும் பிரசித்தம். எல்லா ஊர்களிலும் திருடர்கள் பகலில் பார்த்து இரவில் கொள்ளை அடிப்பார்கள். சென்னையிலோ, பட்டப் பகலிலே. மணி $6\frac{1}{2}$ தான். வெய்யில் கால மானது பற்றி சூரியாஸ்தமனம் $6\frac{3}{4}$-மணி சுமாருக்குத்தான். ஆஹா, வெகு தந்திரமாய் ஒருவன் தன் முன்னே விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையின் கழுத்திலுள்ள சங்கிலியை இமைக்கும் நேரத்தில் கத்தரியால் துண்டித்து விட்டான் பேர்வழியைப் பார்த்தால் லக்ஷரூபாய்க்கு ஜாமீன் கொடுக்கலாம் போலிருக்கிறது. வைர டாலென்ன, மோதிரங்களென்ன, வில்க்ஷர்ட், மயில்கண் வேஷ்டி அதிலொன்றும்குறைவில்லை செய்யும் தொழில்தான் கெட்ட தொழில் இருந்தாலும் ஆசாமி கைதேர்ந்த புள்ளிதான். ஆனால் அவன் கெட்ட காலம் நாகராஜன் அவனைப் பார்த்துவிட்டான். அதை அவன் என்னிடம் கூறவே, நான் உடனே “திருடன், திருடன்” என்று கத்திக் கொண்டே அந்தக்குழந்தை இருந்த திசையை நோக்கி ஓடினேன். அனைவரும் சற்று பிரமித்து நாலா பக்கமும் திகைப்புடன் திரும்பிப்பார்த்தனர். பேர் வழியும் மெல்ல அப்புறம் சென்று நழுவப்பார்த்தான். “அவன் தானையா, பிடியுங்கள், திருட்டு ராஸ்கல்” என்று கூவிக்கொண்டே ஓடினேன்.

மறு நிமிடம் ஆயிரம் கைகள் அத்திருடன் மீது வீழ்ந்து விட்டன. திருவல்லிக்கேணியில் என்? சென்னையிலேயே—ஒருவன் தன்கால் தடுக்கிவிட்டதென்று குனிந்தாலே, ஆயிரம் பேர் கூடி விடுவார்கள். அன்று கேட்க வேண்டுமா? நாகரத்தினம் பாட்டு காற்றில் போய்க் கொண்டிருந்தது. இருந்தவர்களெல்லாம் திருடனிடம் வந்து கூடினர். “குழந்தை செயினைக் கத்தரித்து விட்டானையா திருடன்” என்று நான் கூக்குரலிடவே, எல்லோரும் அவன் பையைச் சோதிக்க ஆரம்பித்தனர். பையில் ஒன்றும் காணோம் அப்பேர்வழியும் ஒன்றும் தெரியாதவன்போல் விழிக்கிறான். பைத்தியம்போல் நடிக்கிறான். பார்ப்பவர்களெல்லாரும் சற்று யோசித்துக் கொண்டே நின்றனர்.” வையுங்களையா பூசை இன்னும் இரண்டு, அடி உதவுவதைப்போல் அண்ணன் தம்பி உதவான்’ என்று எல்லோரும் கத்தவே, யார்யார் பக்கத்தில் இருந்தார்களோ, அவரவர்கள் கையை திருடன் மேல் வைத்தார்கள் அதை கடைசியாகக் கூட்டத்திலிருந்த ஒரு யூகசாலி, திருடனின் கையை மெதுவாகத் தூக்கிப் பார்க்கவே அவன் கட்கத்தினின்றும் தங்கச் சங்கிலி பொத்தென்று மணலில் வீழ்ந்தது.

இதற்கிடையில் அக் குழந்தை, தாயின் பக்கத்தில் நகர்ந்து சென்று சுபாவமாய் விளையாடிக் கொண்டிருந்தது. குழந்தையின் தாய்க்கு எதற்காகக் கூட்டம் கூடி யிருக்கிற தென்பதேதெரியாது. குழந்தையின் தாய் தன்னைச் சேர்ந்த பெண்டுகளுடன் “அடியே, கமலா! அடியே சுந்தரி! யாரையோ, யாரோ அடிச்சுட்டானாண்டி, அதுக்கா இத்தனை கூட்டம். இந்த ஊரிலே கூட்டத்துக்குச் சொல்லணுமாடீ’ என்று நீட்டி நீட்டிப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான். கடைசியாக, ஒரு சிறுவன் “அம்மாமி, யாரோ ஒருவன் யாரோ ஒரு குழந்தை கழுத்திலுள்ள செயினைக் கத்தரித்து விட்டானும். ஐயோபாவம், எல்லாரும்

அவனை அடிச்ச கொல்ரு அம்மாமி'' என்று சொல்லிக் கொண்டே ஓடினான். அப்பொழுது தான் ஒவ்வொரு ஸ்திரீயும் தன்குழந்தையின் கழுத்தைப்பார்க்க ஆரம்பித்தாள், "ஐயையோ! என் குழந்தை செயின் தாண்டி காணோம்'' என்று உண்மையில் செயினைப் பறிகொடுத்த குழந்தையின்தாய் கத்தினாள். கூட்டத்திலுள்ளவர்களால் திருடனுக்கு வேண்டியவரை உதை, அடி நேவித்தியங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. பிறகு சற்றுக் கூட்டம் கலைய ஆரம்பித்தது, அப்பொழுது தான் போலீஸ்காரர்கள் கூட்டத்திடை தோன்றினர்கள். திருடனைக் கைது செய்து அவன் களவாடிய செயினைக் கையில் பெற்றுக் கொண்டு, அவர்கள் குழந்தையின் தகப்பனார் விலாசத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு மேல் நடந்தனர்.

"ராவுஜீ "டைம், ப்ளீஸ்'' (Tim, please) என்ருன் நாகராஜன் 10 மினிட்ஸ் டு செவன் (Ten minutes to seven) என்றேன் நான். உடனே ரேடியோவில் "மெட்ராஸ் ப்ராட் காஸ்டிங் ஸ்டேஷன் காலிங் "தி நெக்ஸ்ட் ஐடம் ஆப்தி ப்ரோக்ராம் இஸ் ராகமாலிகா'' (Madras Broad Casting station Calling The next item of the programme is Ragamalika) "சென்னை பேசுகிறது. அடுத்த படியாக ராகமாலிகை பாடப்படும்'' என்று கேட்டது. ஒரு புறமாக நானும் நாகராஜனும் சற்று அமைதியுடன் அமர்ந்தோம், "ஸ்ரீராம மந்த்ரம்'' என்ற ஸ்லோகத்தை நாகரத்தினம் வெகு அழகாய்ப் புலராகங்களில் பாடி முடித்தார். டிங், டங், டிங், டிங்,......டய், டய், டய்......என்று 7 மணி கார்ப்பொரேஷன் கட்டிடத்தில் அடிப்பது ரேடியாவில் கேட்டது, மங்களம் பாட ஆரம்பித்து விட்டார் மணலிலிருந்தவர்களும் எழுந்து புறப்படலாயினர்.

நாகராஜனை அழைத்துக் கொண்டு நானும் கிளம்பினேன். மணலைத்தாண்டி ரோட்டோரத்தை அடைந்தோம். புற்றிலிருந்து எறும்பு கிளம்புவது போல், வரிசை வரிசையாகக் காற்றினும் கடுகிச் செல்லும் கார்ய மணிகள் பறந்து சென்று கொண்டிருந்தன, தாய்மார்கள் தத்தம் குழந்தைகளைக் கையில் பிடித்துக் கொண்டு சமயம்பார்த்து ரஸ்தாவைக்'' கடந்து சென்று கொண்டிருந்தனர். ரஸ்தா நடுவே போலீஸ் வீரன் விழி பிதுங்க சரியான ட்ரில் (drill) பழகிக் கொண்டிருந்தான் நாங்களும் அப்புறம் போகப் புறப்பட்டோம். அப்பா! நினைக்கும் பொழுதே என் உரோமம் சிலிர்க்கின்றது. ஒரு வயோதிகர் தன் பேரன் பேத்தி முதலிய மூன்று பேர்களைக் கூட்டிக் கொண்டு மேற்திசையை நோக்கி நடந்தார். பேத்திகளில் மூத்தவள் சற்றுப் பெரியவள். ஒன்பது வயது அல்லது பத்து வயதிருக்கும், தன் தாத்தாவுக்கு பின் வந்தவள் தனக்கு வலப்பக்கத்தில் மோட்டார் வருவதைக்கண்டு பின்னால் நகரப் போனாள். ஐயோ பாவம்! மறு நிமிடம் மோட்டார் அடியில் வீழ்ந்தாள். டிரைவரும் தன் பலங் கொண்ட மட்டிலும் "பிரேக்''கை அமுக்கி நிறுத்தினான். இருந்தாலும் கீழேவிழுந்த அதிர்ச்சியில் அப்பெண் மூர்ச்சையாய் விட்டாள். அவள் வலது கையின் மீதும் மோட்டார் சக்கரம் ஏறி விட்டது. பீச்சிலிருந்து வீடு நோக்கித் திரும்பிச் செல்பவரெல்லாம் கொல்லெனக் காரைச் சூழ்ந்து விட்டனர். போலீஸ் சேவகனும் உதவி செய்ய வந்தான். அனைவரும் மெதுவாக அப்பெண்ணை வெளியில் எடுத்து அதே மோட்டாரில் ஏற்றி வைத்தார்கள். தாதா பரிதபிக்கிறார் பேரனும் மற்றொரு பேத்தியும் "அக்கா! அக்கா!! என்று அலறுகின்றனர். சோடா கொண்டுவா, ஜலம் கொண்டுவா'' என்ற சப்தங்கள் ஒருபக்கம், மோட்டார் நம்பரைக் குறி, போலீஸ் டிரைவரை சார்ஜ்செய் என்று வாலிபர்களின் உறுமல் ஒரு பக்கம், இவ்வாறாக ஏக அமளியாய் விட்டது, கொஞ்ச நேரத்திற் கெல்லாம் பெண்ணை மூர்ச்சை தெளிவித்து அதேகாரில் ஜெனரல் ஆஸ்புத்திரிக்கு கொண்டு சென்றனர்.

நாகராஜா, இன்று என்ன எல்லாம் விநோதம் நடந்தது பார்த்தனையா?'' என்று திருவல்லிக் கேணியில் ரேடியோ சங்கீதம் கேட்க வந்து நான் உட்கார்ந்தவரை நான் கண்டவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டு பஸ்கள் நிற்கு மிடத்



சுல்தானா தன்னி.



பேர்லினில் நாய் வேட்டை



திற்கு நானும் நாகராஜனும் சென்றடைந்தோம். 'பாசில் கார்னர்' போகும் மோட்டாரில் ஏறினோம். அதேகாரில் 15, 16 வயதான ஒரு பெண்ணும் ஏறினாள். தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்த மைனர் பேர்வழி யொருவன் வேகமாய்க் கார் புறப்படுகையில் வந்து அதில் ஏறிக்கொண்டான். நாங்களிருந்தது புதுமாடல் கார். நானும் நாகராஜனும் மத்திய ஸீட்டில் உட்கார்ந்தோம். அந்தப்பெண் ஓரத்து "ஸீட்"டில் அமர்ந்தாள். அம்மைனரும் அவள் பக்கத்தி லமர்ந்தான், பெண்ணைப் பார்த்தால் ஒரு தாசி யென்றும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. இருந்தாலும் "பார்ப்போமே" என்றிருந்தேன். கார் புறப்பட்டு விட்டது. மைனர் மெள்ள மெள்ளத் தன்மேல் வேஷ்டியை மேல் இழுப்பதும் கீழ் இழுப்பதும் தற்செயலாய்க் கைமேலே படுவதுபோல் அப்பெண்மீது கையைப் போடுவதுமாக இருந்தான் பெண்ணோ தலையைக் கம்பிக்கு வெளியே நீட்டிக்கொண்டு பாராதவள் போலிருந்தாள், மைனர் மெள்ள மெள்ள நெருங்க ஆரம்பித்தான், இதற்குள் திருவல்லிக் கேணி மூலையில் காரில் ஏறிய ஒருவன் "ஐயா! கொஞ்சம் நகருங்கள். 'ஸீட்டு'க்கு 5 பேர் ஐயா!" என்றான் மைனர்பாடு குஷியாய் விட்டது. நன்றாய் அந்தப் பெண்மீது உராய்ந்து கொண்டே உட்கார்ந்தான், சிறிது நேரத்தில் அவர்களது கால்களும் ஒன்றோடொன்று பேச ஆரம்பித்து விட்டன, "அடா கர்மமே! காரில் போகும் பொழுதும் இந்தக் கூத்தா!" என்று நான் வியந்து கொண்டிருந்தேன்.

கார் ரவுண்ட் டாணா (Round Tana) வைத் தாண்டி, கவர்ன்மெண்ட் ஹௌஸையும் கடந்து "பாடி கார்ட்ஸ் ரோடிலும் பறந்து சென்று, ஜெயில் பக்கத்திலுள்ள பாலத்திற்கு தென்புறத்தி லிருக்கும் வளைவில் போய்க் கொண்டிருந்தது. அப்பொழுது நாங்கள் இருந்த காரைத்தொடர்ந்து மற்றோர் வாடகைக்கார் வருவதை எங்கள் கார் டிரைவர் பார்த்துவிட்டான் உடனே வெகு துரிதமாய்க் காரை வளைவில் திருப்பினான் வந்தது மோசம்! எல்லாம் எங்கள் தலைக்கே வந்து முடிந்தது என்ன நேர்ந்தது என்று எண்ணிப் பார்க்குமுன் இமைக்கும் போழ்தில் கார் குடை சாய்ந்தது: காருக்குள் ஒருவர் மீதொருவர் உருண்டு வீழ்ந்தோம். பொறியிலகப்பட்ட எலிகளைப் போலானோம். வீழ்ந்த அதிர்ச்சியில் நான் பாதி மூர்ச்சையானேன். வெகு சிரமத்துடன் நாகராஜன் காருக்கு வெளியில் சென்றடைந்தான். என்னையும் ஒரு வகையாக வெளியே இழுத்துப் போட்டான் எனது தலையிலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. ஆகவே கைக்குட்டையால் காயம்பட்ட பாகத்தை இறுகக் கட்டினேன். சற்றுநேரம் நிதானித்த பிறகு நான் என் சுய நிலையை அடைந்தேன். ஆனால் உடம்பெங்கும் ஓர் வித வலி இருந்தது அதைப்பற்றிக்கூட எனக்கு அக்கரை அதிக மில்லை, என் ஞாபக முழுவதும் மைனர் பேரிலும் அம்மங்கையின் பேரிலும் தான். காருக்குள் எட்டிப் பார்த்தேன் மைனர் அலங்கோலமாய் மூர்ச்சையற்றுக் கிடந்தான். அவன்மேல் முக்கி முணகிக்கொண்டு கிடந்தாள் யௌவன மங்கை, "ஐயோ! இவர்கள் காதல் நாடகம் இவ்வாறு முடிய வேண்டும்" என நினைத்தேன் வெகு சீக்கிரத்தில் சென்னையின் இயற்கைப்படி, ஒரு பெருங்கூட்டம் கூடிவிட்டது. அவர்களெல்லாரும் கூடி காரைத்தூக்கி நிறுத்தினார்கள் மோட்டாருக்குள் அகப்பட்டுக் கொண்டவர்களை வெளியாக்கினர் அனேகருக்குப் பலத்த காயம் ஏற்பட்டிருந்த போதிலும் கடவுள் புண்ணியத்தால் ஒருவருக்கும் உயிர்ச்சேதமில்லை மைனர் செய்தியை அறிய ஆவல் கொண்ட நான் அவனையும் அப்பெண்ணையும் தனித்தனி ரிக்ஷாக்களில் ஏற்றிக்கொண்டு நானும் நாகராஜனும் மற்றொன்றில் ஏறிக்கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரியை அடைந்தோம் அங்கு அவர்களைச் சிகிச்சைக் குள்ளாக்கிவிட்டு எனது காயத்திற்கும் மருந்து போட்டுக் கொண்டு நண்பனுடன் என் வீட்டை அடைந்தேன், "அம்மாடி, இத்துடனே யாவது வீடடைந்தேனே" என்று படுக்கையில் சாய்ந்தேன்.

ஆமாம் மைனர் பெரிய மைனர்தான். அன்று

பெண் வெட்டையாடும் நோக்கத்துடனேதான் வீட்டை விட்டுப் புறப்பட்டதாக அவன் என்னிடம் ஒப்புக் கொண்டான். மங்கை பவளக்காரத் தெருவில் உள்ளவளாம். நல்ல கைகாரி தன் வலைக்குள் யாரேனும் வந்து விழார்களா என்று நினைத்தே ரேடியோ கோட்டைக்கான உடை உடுத்திக்கொண்டு வந்திருக்கிறாள். இருவரது மனோ பீஷ்டமும் நிறைவேறியது. மங்கை வலையில் மைனர் சரியானபடிதான் வீழ்ந்தான். ஆனாலும் பாவம்! கைக் கெட்டியது வாய்க்கு எட்டவில்லையே. இருவரது மனப்பான்மைக்கு ஒத்தபடி, இருவரும் இன்னும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் தானிருக்கிறார்கள். எனக்கும் நல்ல சினேகம் ஏற்பட்டது. நாகராஜன் இதை அடிக்கடி சொல்லிச் சொல்லிச் சிரிக்கிறான்.

"ஐயா, மோட்டாரில் ஏறியது, போதும்! போதும்!! போதும்!!! இனிமேல் எங்கு போனாலும் டிராமிலாவது இல்லாவிட்டால் நமது சொந்த 'ஆதாமின்காரி' (Adams car) லாவது போவேனே யொழிய இந்தப் பாழும்மோட்டார் எமன் மீது ஆரோகணித்துச் செல்லவே மாட்டேன்."

மாலை 6 மணியிருக்கும் நான் வெளியே சென்று உலாவிவிட்டு ரூமிற்குள் வந்து நுழைந்தேன். நாகராஜன் தனியே உட்கார்ந்து கொண்டு பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும் "ராவுஜீ, பெண் சௌக்கியமா யிருக்கிறாளா?" என்று சொல்லிச் சிரிக்க ஆரம்பித்தான். "போதுமடா, அந்த வியாபாரம்" என்றேன் நான். அடுத்த ஞாயிற்றுக் கிழமை நாகராஜரால் புனா ரேடியோ சங்கீதத்தில், அவசியம் போகப்போகிறேன்.

———


நீங்கள்

மலச்சிக்கல், தேக அசதி, நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை முதலிய வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே எங்கள்

**ஆதங்க நிக்ரஹ மாத்திரை**

களை உபயோகியுங்கள். 50 வருஷங்களாக புகழ் பெற்று வருகின்றன. 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1-0-0. 5 டப்பிகள் ரூ. 4-0-0.

விபரங்களுக்கு எங்கள்

**காம சாஸ்திரம்**

புஸ்தகத்தைப் பாருங்கள் தபாற்செலவின்றி இனாமாக அனுப்பப்படும்.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26, பிராட்வே, மதராஸ்.



**மூலம்**

மூன்றே நாட்களில் சோஸ்தம்

ரத்தம் வடிந்தாலும் அல்லது வடியாவிட்டாலும் நாள் பட்டதானாலும் அல்லது புதிதாக சம்பவித்திருந்தாலும் எவ்வளவு அபாய கரமானதாக விருந்தாலும் இம் மருந்தை உபயோகித்த மூன்றே நாட்களில் ஆச்சரியகரமானபடி சொஸ்தமாகின்றது. சொஸ்தமாகாவிடில் நான்கு பங்கு பணம் வாபீஸ். புட்டி விலை ரூபா 2.

**செவிடு**

நமது "பைரோடிப்பான்" தைலத்தை உபயோகித்து வந்தால் உங்கள் காதைப் பற்றிய சகல வியாதிகளும் பறந்து போகும். ஆயிரக்கணக்கானவர்களை சொஸ்தம் செய்துள்ளது. நமது மருந்து பிரயோஜன மில்லாவிடில் பணம் வாபீஸ்.

விலை ரூ. 2—0—0

"கடிதங்கள் யாவும் இங்கிலீஷிலேயே எழுத வேண்டும்."

SAKTI SUDHA KARYALAYAM
4th Kumbharwada, Bombay, No 4.





## விகடப்பேச்சு!

—:o:—

உனது புருஷனுக்கு வியாதி சம்பவித்து விட்டதால் நீ மிகவும் கஷ்டப்படுவதாக சொன்னாயே!

ராமி:—அந்த கஷ்டம் நிவர்த்தியாகி இன்று 10 நாளாகிறது.

சுப்பி:—எப்படி.

ராமி:—அவரைக் கொண்டுபோய் கொளுத்தி விட்டார்கள்.

◆ ◆ ◆

வீட்டுக்காரி:—இது என்னம்மா, பாலா? மோரா? இவ்வளவு தண்ணியாக யிருக்கிறதே.

தயிர்காரி:—பாலுமல்ல, மோருமல்ல, தயிர் அம்மா.

◆ ◆ ◆

எல்லாருடைய கடனையும் நேற்று பைசல் செய்து விட்டேனே நீர் ஏன் வரக்கூடாது?

கடன் கொடுத்தவர்:—எனக்குத் தெரியாது ஆகையினால் வரவில்லை. இப்பொழுது கொடுத்து விட்டால் மிகவும் நலம்.

வாங்கியவர்:—தயவு செய்து தங்கள் விலாசத்தை தெரிவித்துவிட்டு போனால், நாளைய தினம் அபிஷயல் அசைனி ஆபீஸி லிருந்தே நேராக தங்களுக்கு வந்து விடும்.

◆ ◆ ◆

உபாத்தியாயர்:—பால் எத்தனை வகைப்படும்.

பையன்:—இரண்டு.

உபாத்தியாயர்:—அவை என்ன?

பையன்:—ஜலம் கலந்தபால் (1) ஜலம் கலக்காத பால் (2).

◆ ◆ ◆

ஐயா! இந்த கடியாரம் என்ன விலைக்கு வாங்கினீர்கள்.

நண்பர் நான் வாங்கும் பொழுது கடையில் ஒருவரு மில்லை.

◆ ◆ ◆

நண்பர்:—முத்த மிடுவதால் கேடு உண்டு பண்ணும் என்று டாக்டர்கள் சொல்வதை நீயும் ஒப்புக் கொள்கிறாயா?

மற்றவன்:—ஆம்! அதில் என்ன சந்தேகம்!

நண்பர்:—எப்படி?

மற்றவன்:—விவாகம் செய்துக் கொள்ள வேண்டி யிருக்கிறது.

◆ ◆ ◆

ராமன்:—உனது நண்பன் கோவிந்தன் உன்னைப் பற்றி பொய் சொல்லி திரிகிறானே.

நண்பர்:—அதைப்பற்றி எனக்கு கவலையில்லை உண்மை மாத்திரம் சொல்லி விட்டானா! அப்பொழுதே அவன் தலையை உடைத்து விடுவேன்.

எஜமானன்:—உடம்பு அசௌகரியமென்று ரஜா கேட்டுக் கொண்டு, ஏன் குதிரைப் பந்தயத்துக்கு வந்தாய்?

குமஸ்தா:—வைத்தியரைத் தேடி வந்தேன்.

எஜமானன்:—வைத்தியர் இருக்குமிடம் இதுதானோ?

குமஸ்தா:— காணவில்லை அதனால் தான் திரும்பி போகிறேன்.

◆ ◆ ◆

வீட்டெஜமானி:—(சமயல் காரியைப் பார்த்து) கருப்பாயி! இன்று என்ன கறி!

கருப்பாயி:—மீன் கறி.

எஜமானி:—மீனை நன்றாய்க் கழுவினாயா!

கருப்பாயி:—இல்லேங்க! அதையேன் கழுவணும், எப்போதும் அது தண்ணியிலே தானே இருக்கிறது.

◆ ◆ ◆

ராஜகோபால்:—என்ன, சங்கரா! ஜலதோஷமா, மூக்கால் பேசுகிறாயே?

சஙகரன்:—இல்லை! பத்மனாபனுடன் கொஞ்ச நேரம் மலையாளம் பேசிக் கொண்டிருந்தேன். அந்த தோஷம்!

◆ ◆ ◆

கார்ப்பொரேஷன் காவலன்:— (லைசென்ஸில்லாத சைக்களில் வருபவனைப்பார்த்து) "ஹோல்டான்" (Hold on)

சைக்கிள் பேர்வழி:—(வேகமாய் சைக்கிளை ஓட்டிக்கொண்டு) பின்னாலே வருகிற தய்யா ட்ராமும், பெரம்பூர் பஸ்ஸும்! இது ஷெட்டுக்குப் போகிறதய்யா!

காவலன்:—இங்கே தானய்யா "ஷெட்"டிருக்கு இறங்கய்யா! உங்க வாகனத்திற்கு முத்திரையிட்டு அனுப்புவோம்.

◆ ◆ ◆

கணவன்:—அடியே! இனிமேல் ரொம்ப செட்டா யிருக்கவேண்டும் சம்பளத்திலே "கோடாலி" விழுந்து விட்டது.

மனைவி! ஆமாங்கரே! நானும் அதற்காகத் தான் இப்போ பணத்தைச் செலவழிக் காமே கடனுக்கே எல்லாம் வாங்கரேன்!

◆ ◆ ◆

வாத்தியார்:—சுந்தரம்! உன் கையெழுத்து ரொம்ப மோசமா யிருக்கிறது. முழங்கையால் எழுதி மூக்கா லழித்ததுபோ லிருக்கிறது. எழுத்து ரொம்ப திருந்த வேண்டும். தெரிந்ததா?

சுந்தரம்:—சார், தெரிந்தது, ஆனால் நான் சுத்தமாய் எழுதினால் எழுத்துப் பிழை தெரியுமே, 'அதற்கென்ன பண்ணுவது!

———


உலக பிரசித்தி பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,

# பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்.,

புகையிலை கமிஷன் ஏஜண்டுகள், & மூக்குத்தூள் வியாபாரிகள்,

2-21, பாரிஷ் வெங்கடாஜல ஐயர் தெரு,

தபால் பெட்டி நெ. 189, சென்னை.





———

(திரு. அ. சுப்பிரமணிய ஐயர், சேரமாதேவி எழுதியது.)

———:O:———

**என் அருமைச் சிறு தோழர்களே!**

இச்சிறந்த "தமிழகம்" வாசிக்கும் உங்களுக்கு, முந்தின இதழில் நீங்கள் கைக்கொள்ள வேண்டிய தயா, சத்தியம் என்னும் இரண்டு முக்கிய விஷயங்களைப் பற்றிப் பொதுப்படக் கூறி இருந்தேன். இப்பொழுது அவ்விரண்டு விஷயங்களையும் ஒவ்வொன்றாய்க் கொஞ்சம் விவரித்துக் கூற விரும்புகிறேன் ஆகையால் நீங்களும் அவைகளை முன்போலவே கவனித்து நோக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்னும் பெரியோர் வாக்கிற்கிணங்க அன்பும் சத்தியமும் முன்னறி தர்மம் என்னும் சொல்லத்தகும். அன்பு அன்னைக் கொப்பாகும் அப்பேர்ப்பட்ட அன்பைப்பற்றியே நாம் முதலில் கவனிப்போம் மேலும் அன்பானது நல்லொழுக்க மாகிற கட்டிடத்தைத் தாங்குவதற்கு ஏதுவாயிருக்கப்பட்டத் தூண்களுக்கு ஒப்பாகும். அன்பு என்னும் சொல்லும், தயவு, கருணை பிரேமை, இரக்கம் என்னும் சொற்களும் ஒரே அர்த்தத்தைக் கொடுக்கின்றனவேயாகும். அன்பைக் கொண்டே உலகமானது பிணைக்கப்பட்டிருக்கிறது இவ்வன்பைக் கொண்டே பரா சக்தியாகிற உலகமாதாவும் சகல அண்டங்களையும் சிருஷ்டிக்கிறாள். அதையே தன்ரூபமாகவும் கொண்டிருக்கிறாள். அதுபற்றியே 'அன்பும் சிவமும் ஒன்றென்பர் (தெய்வம்) அறிவிலார்' இரண்டென்பர் அன்பாகிற பாசத்தினாலேயே (கயற்றால்) புருஷனும் ஸ்திரீயும், பெற்றோரும் பிள்ளைகளும், உறவினருள் ஒருவருக்கொருவரும் நெருங்கப் பிணைக்கப் பட்டிருக்கின்றனர். கொலைத் தொழில் புரிந்தே ஜீவிக்க வேண்டிய மிருகங்களினிடத்தும் அன்பு இல்லாமலில்லை. அவ்வளவு இன்றேல் அம்மிருக வர்க்கங்கள் நாளது வரை தொடர்ந்து ஜீவித்திருக்க முடியாது, உயிரில்லாதனவாகக் காணப்படும் பொருள்களிடத்தும் இவ்வன்பு வேறு ரூபமாக மாறி ரசாயனச் சேர்க்கைச் சக்தி (Chemical Affinity) யாகக் காணப்படுகிறது. ஆகவே அன்பு இல்லாத வஸ்துவே உலகத்தில் கிடையாது. நெடுநாளாகப் பிரிந்திருந்த தம்பதிகள் இருவர் ஒரு காலத்தில் சந்திக்க நேர்ந்தால்

அப்பொழுது அவ்விருவருக்கும் உள்ளத்தில் உண்டாகும் அன்பின் அளவைச் சொல்லக்கூடுமா? அதை நாம் காதல் என்கிறோம். அப்படியே காணாமற் போன தன் குழந்தையை கண்ட உடன் தாயானவள் வாரி யெடுத்து மடிமீது வைத்து மார்போடணைத்தும் முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவும் அன்பை என்னென்று சொல்லாம், அதைப் பிரேமை, வாத்ஸல்யம் என்கிறோம். ஒருவருக் கொருவர் இடைபிரியாதுகூடி அளவளாவும் இரு சிநேகிதர்களின் அன்பை நாம் நேசம் அல்லது நட்பு என்கிறோம். யாதாம் ஓர் உயிர் பிராணி சகிக்க முடியாத வேதனையால் துள்ளித் துடிக்கும்போது நமது நெஞ்சம் தீயின் மெழுகென உருகி நமக்கு உண்டாகும் அன்பைக், கருணை இரக்கம், பச்சாதாபம் என்கிறோம், எள்ளுக்குள் எண்ணெய்போலும் கட்டையில் அக்கினிபோலும் எங்கும் எல்லா வஸ்துக்களிடத்திலும் நிறைந்தும் ஒளிந்தும் காணப்படும் ஆண்டவனுடைய அனந்த கல்யாண குணங்களை இயற்கையிலும் மூர்த்திகரித்த ரூபங்களிலும் நாம் காணும் போதும், அம்மகிமைகளைப் படிக்கும்போதும் அல்லது இனிய குரலாற் பாடக் கேட்கும் போதும் நமக்குண்டாகும் அன்பை நாம் பக்தி என்கிறோம், இப்படி அன்பானது சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு வேறு சொற்களால் அழைக்கப்படுகிறது.

இவ்வன்பு நம்மிடம் எவ்வளவுக் கெவ்வளவு குறைந்து காணப்படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நமக்கும் கிடைக்கும் நன்மைகளும் குறைந்தே தானிருக்கும், ஆனால் அன்பு பெருகிப் பெருகிக் கடைசியில் அதுபேரன்பாகி நம்மைப்பரத்தோடும் கொண்டு சேர்க்கும் அத்தனைச் சக்தி யுள்ளது. ஆகையால் அன்பினால் ஆகாதது ஒன்றுமில்லை, பெரியோர்கள் எல்லாரும் அன்பே உருவெடுத்து வந்தவர்களேயாவர் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் அவர்கள் அன்பு மறக்கப்படாத அவ்வளவு கீர்த்தியடைந்திருக்கிறது. இன்னும் ஆயிரக் கணக்கான மக்கள் அவர்கள் அன்பார்ந்த மொழிகளின் மூலம் இஜ்ஜன்மக்கடலினின்றும் கரையேறுகிறார்கள். இவ்வளவு சக்தி பொருந்திய அன்பை எல்லோரும் வளர்க்க வேண்டியது அவசிய மில்லையா? எப்படி அன்பைப் பெருக்குவது என்பது பற்றிக் கொஞ்சம் கவனிப்போம் மக்கள் ஒவ்வொருவருக்கும் தமக்குவேண்டியவர்களுள் தமக்கு மிக்கப் பிரியமான யாராவது ஒருவர் இருப்ப தென்பது திண்ணம் அப்பேர்ப்பட்டவர் சதா தன்னோடு இருக்க வேண்டு மென்று விரும்புவார் அவருக்கு ஏதாவது துன்பம் வந்தால் தனக்கு வந்தது போல நினைத்து வருந்துவார். அவர் எப்பொழுதும் சுகமாகவே வாழவேண்டு மென்று பிரார்த்தித்திருப்பார். இது யாருக்கும் அனுபவம் என்பதில் சந்தேகமில்லை. இவ்வன்பு ஒருவர்மேல்மட்டும் பற்றி கட்டுப்பட்டிருப்பதை விவேகத்தினால் கவனித்து ஒருவர்மேல் மட்டும் உள்ளத்தைப் பலபேரிடத்திலும் செல்லும்படிக் கொஞ்சங் கொஞ்சமாய் அப்பியாசம் செய்ய வேண்டும். முதலில் தன் வீட்டிலுள்ள எல்லாரிடமும், பின்பு அக்கம்பக்கத்தாரிடமும், பின்பு ஊரார், தேசத்தாரிடமும் அதன்மேல் மனிதவர்க்கத்தார் எல்லாரிடமும் கடைசியாக சகல சரா சரங்களிடத்திலேயும் தன்னன்பு பரவும்படிப் பழகவேண்டும் இதுவே பேரன்பு எனப்படும். இதுவே மனிதவாழ்வின் லக்ஷ்யமும் ஆகும் ஆனால் இப்படி ஏற்படவேண்டுமானால் அதை அடைய வேண்டுமென்ற ஆவல் முதலில் உண்டாக வேண்டும் இந்த ஆவல் இல்லாமற் போயின் ஒன்றும் நடவாது. அதோடு அன்பைச் சரியான வழியில் செலுத்த விவேகமும் வேண்டும். ஏனெனில் அன்பானது நீர் நிறைந்துள்ள ஒரு பெரிய ஏரியைப் போன்றது. அந்நீரைச் சரியான வழியில் உபயோகப் படுத்தினால் நன்மையுண்டாகும் இல்லாவிட்டால் பெரிய கெடுதலும் நேரிடலாம். அன்பு ஒன்றின்மேல் மட்டும் மிகுந்து வரும் சமயம் விவேகம் வந்து உதவாவிடில் அவ்வன்பு தனக்கு அன்னியமா யுள்ளதை வேறு படுத்தி அவற்றின்மேல் வெறுப்பை உண்டாக்குகிறது. இதனால் உண்டாகும் கொடுமைகள் கணக்கில்லை, இதற்கு உதாரணம் நம்தேசத்திலேயே வேண்டிய மட்டும் பார்க்கலாம். தற்போதுள்ள ஜாதிச்சண்டை, மதச்சண்டை, பாஷைச்சண்டை தேசச்சண்டை முதலிய சகல சச்சரவுகளும் விவேகமாகிற கண்களில்லாத குருட்டு அன்பினால் உண்டான கெடுதல்களே யல்லவா? இக்கெடுதல்களை நீக்கத் தற்கால மாந்தர் பல்வேறு வழிக்காகத்தேடி வகையறியாமல் தட்டுக் கெட்டு தடுமாறித் திரிகின்றனர் ஆனால் நீங்களே உங்கள் சிறுபிராயமுதல் கொண்டே இத்தெய்வீக அன்பைப் பெருக்கி சரியான வழியில் செலுத்த விவேகத்தையும் அப்பியசித்து வருவீர்களானால் தற்பொழுது துன்பம் நிறைந்து நரகம்போல் காணப்படும் இவ்வுலகமானது உங்கள் காலத்தில் இன்பம் நிறைந்து சுவர்க்கம் போல் காணப்படும். அப்படிச் செய்ய இஷ்ட முண்டாவென்று உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். உங்கள் மனதிலிருந்து உங்களுக்குக் கிடைக்கும்பதிலே உங்களைத் திருத்த வல்லது வெளியிலுள்ள வேறு யாராலும் முடியாது. வரும் காலத்தைச் செம்மைப் படுத்தக் கூடியவர்கள் நீங்கள் தான். ஆகையால் உங்களுக்கு இஷ்டமானால் ஹிந்து முஸ்லீம் பிரசனையில் யாதொரு கஷ்டமன்னியில் தீர்ந்து ஒருவரை ஒருவர் நேசிப்பீர்கள் ஆதித்திராவிடர் என்றும் பஞ்சமர் என்றும் சொல்லப்படும் தாழ்த்தப்பட்டோர் துன்பம் தீர்த்து சுகமாக வாழ்வீர்கள். முதலாளி தொழிலாளி துன்பமும் தீர்ந்துவிடும். சட்டதிட்டங்கள் மனிதரால் உண்டாக்கப்பட்டவை என்றும் மாறிக்கொண்டே யிருக்கும் ஆனால் அன்போ தெய்வீகமானது, அது சாஸ்வதமானது அதை மாற்ற முடியாது. ஆகையால் தோழர்களே விவேகத்தோடு கூடிய அன்பை அடைய பிரயத்தனம் செய்யுங்கள்.



---

உலகப் பிரசித்திப் பெற்ற மூக்குக் கண்ணாடி வியாபாரிகள்




விக்ஸன் அண்டு கம்பெனி;
மூக்குக் கண்ணாடி வியாபாரம்,
நெ. 165, பிறட்வே, சென்னை
கிளை:—(589, பைகிறாப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி.)




## கந்தகம் (Sulphur)

(வைத்திய பாஸ்கா பண்டிட் S. S. ஆனந்தம்.)

———:o:———

கந்தகம் நிலத்தில் மிகுதியாகக் கலந்துள்ள ஒரு பொருள். இது கல்வகையில் மிகுதியாகவும், பிராணி தாவரப் பொருள்களில் சிறிதாகவும் இருக்கிறது. பண்டைக் கால முதல், மக்கள் அறிந்த பொருள்களில் இதுவும் ஒன்றாகும்.

வழக்கத்திலுள்ள கெந்தி மஞ்சள் நிறமுள்ளது; கெட்டிப் பொருள்; நொறுங்கக் கூடியது. தீயில் வேகும்போதும், உரைஞ்சும்போதும் ஒருவகை மண முண்டாகும் தீயின் அளவுக்குத் தக்கபடி நிறமும் வேறுபடும். இது தண்ணீரில் கரையாது. ஆதலால் இதற்குச் சுவையில்லை. கெந்தி சாராயம், ஈதர், கொழுப்பு, மண்ணெண்ணெய் ஆகியவைகளில் சிறிது கரையும். கற்பூரத் தைலம் என்னும் டர்பன் டெயினிலும், வேறு சில எண்ணெய்களிலும்மிகுதியாய்க் கரையும்.

கந்தகம் எரிமலைகளுள்ள பகுதிகளில் எங்கும் வேறொரு பொருளோடு கலவாமல் தனியாயிருக்கும். தென் அமெரிக்காவில் சில இடங்களிலும், சிசிலியிலும் நிலத்திற்குள் படலங்களாகக் காணப்படும். கந்தகம் உலோகங்களுடன் சேர்ந்த கலவைகளாகிய அயசல்பிரம், ஈயசல்பிரம், துத்தசல்பிரம் முதலியவைகளில் மிகுதியாக உண்டு. சில விடங்களில் அயசல்பிரத்தைச் சுட்டுக் கந்தகம் எடுக்கிறார்கள்.

மருந்துகளுக்கும், மற்றத் தொழில்களுக்கும் கையாளும் கந்தகத்தில், மிகுதியானபாகம் சிசிலியிலும், இட்டாலியிலுள்ள எரிமலை நாடுகளிலு மிருந்துவரும். சிசிலியிலிருந்து ஆண்டுகள் தோறும் பதினைந்து கோடி இராத்தல் ஏற்றுமதியாகும். கந்தகத்தை நிலத்தில் கிண்டி எடுக்கு மிடத்தில் வியாபாரத்திற்கு வேண்டியபடி சுத்தமான பெருங்கட்டிகளாகச் செய்வார்கள்.

அமாசிலை கந்தகம், நெல்லிக்காய் கந்தகம் குழாய் கந்தகம் என்னும் வாண கந்தகம், பால் கந்தகம் என்னும் பல பெயருடைய கந்தகத்தை நமது நாட்டில் பல வைத்தியர்கள் உபயோகித்து வருகின்றார்கள். அவைகளைச் சுத்தி செய்யாமல் உள்ளுக்குக் கொடுக்கலாகாது. அவைகளில் நாகம்,



அயம், பாஷாணம், சுண்ணாம்பு முதலியவைகளின் சத்துக்கள் கலந்திருக்கின்றன. அக்காரணத்தினாலேயே அவைகளைச் சுத்தி செய்து உபயோகிக்கவேண்டியது மிக அவசியமாகும். அயசல்பிரம், செம்புசல்பிரம் என்ற கற்களைச்சுட்டு, அவற்றிலிருந்து ஆவியாய்க் கிளம்பும் கெந்தியை மறுபடியும் உருக்கித் திரண்ட குழாயில் வார்த்தெடுப்பார்கள். அதுவே குழாய்க் கந்தகம் எனப்படுவது. கந்தகத்தைச் சுட்டு ஆவியாக்கி அதை மாபோன்ற பொடியாகவும் செய்வார்கள்.

மக்கள் உடம்பிலும், பிராணிகளிலும், மரஞ் செடி கொடிகளாகிய தாவரப்பொருள்களிலும் கந்தகம் குறைந்த அளவில் சேர்ந்திருக்கின்றது. கோழி முட்டையின் வெள்ளைக்கருவில் கெந்தி சிறிதளவு இருப்பதால் அதில் படும் வெள்ளிக்கரண்டி கறுக்கும். மயிரிலும் சிறிது கந்தகம் இருக்கின்றது.

கந்தகம் காங்கையையும், மின்சார சக்தியையும், (எலக்டிரிக்சிடி) தன்னில் மிகுதியாய் செல்லவிடாது. கந்தகம் தீயில் நீலச் சுவாலைவிட்டு எரிந்து சல்பியூரிக்காசிட் புகையைக் கக்கும். இது லோகங்களோடு சேரும்போது வெளிச்சமும், காங்கையும் தோன்றிக் கட்டிகளாகும். இதைச் சோதனையில் பார்ப்பதற்கு ஒரு கண்ணாடிக் குப்பியினுள் சிறிது கந்தகத் துண்டுகளைப் போட்டு, அதற்குமேல் செப்புத் துண்டுகளைப் போட்டுச் சூடேற்ற, கந்தகப் புகை கிளம்பிச் செம்பில் பட்டு, அதனுடன் மின்னல் ஒளியோடு சேரும்.

கலவைக் கந்தகத் தீநீருக்கு அழுக்கெடுக்கும் தன்மையும், வெளுக்கும் தன்மையும் உண்டு. வெளுக்க வேண்டிய சாமான்களை நனைத்து, நன்றாய் அடைத்த சிறிய அறை, அல்லது பெட்டி, அல்லது பீப்பாய்க்குள் தூக்கி, கந்தகத்தைச் சட்டியின் அடியில் வைத்து எரிப்பதனால் பொருளில் இருக்கும் ஈரம் சல்பியூரிக் அமிலத்தை (கந்தக நீரை) உறிஞ்ச, அந்நீர் நிறப்பொருள்களோடு சேர்வதால் நிறம் கெடும். இந்நிறத்தை வேறு பொருள்களால் மறுபடியும் தோற்றுவிக்கலாமாதலால் குளோரத்தைப்போல் நிறப் பொருள்களைக் கூறுகளாகப் பிரித்து அழிக்கிறதில்லை யென்று விளங்குகிறது. இதற்குச் சோதனை--சிவந்த நிறமுடைய ஒரு பூவை எரிகிற கந்தகத்தின் புகையில் பிடித்தால் அது உடனே. வெள்ளையாகும். பிறகு அந்தப் பூவைக் கந்தகத் தீநீர் கலந்த நீரில் அலசினால் மறுபடியும் சிவப்பாகும்.

கந்தகத் தீநீர் (சல்பியூரிக்காஸிட்) ரசாயனசாலைகளில் மருந்து வேலைகளுக்கு மிக இன்றியமையாதது. மற்றத் தீநீர்கள் (ஆசிட்கள்) கந்தகத் தீநீரின் துணையால் செய்யப்படும். கந்தகம் ஓரளவும் ஆக்சிஜன் (பிராணவாயு) மூன்று பாகமும் சேர்வதால் உண்டாகும் சோடியம் காபனேட், நைட்ரிக் ஆஸிட், (வெடியுப்புத்தீநீர்),ஐட்ரோகுளோரிக் ஆசிட் (கரியுப்புத்தீநீர்), குலோரம், சீனக்காரம், துரிசு, பாஸ்வரம் முதலிய பல பொருள்களைச் செய்வதற்கும், சாயம் காய்ச்சுவதற்கும், உலோகங்களைப் புடமிடுவதற்கும் இது மிகச் செலவாகும். இங்கிலாந்தில் மட்டும் வருடத்துக்கு மூன்று கோடி இராத்தலுக்குமேல் செலவாகிறது. இப்போது வழங்கும் சேப்டி மாச், என்னும் தீப்பெட்டி வருவதற்குமுன் தீக்குச்சிகளின் முனையில் கந்தகத்தை நனைத்து அதன்மீது சிவந்த நிறமான தீப் பாஷாணம் நனைத்து உலர்த்திச் சுர சுரப்பான இடத்தில் அத்தீக் குச்சியைத் தேய்த்தால் தீவெளிப்பட்டு தீக்குச்சியின் முனையிலுள்ள கந்தியைப்பற்றி எரியும். எரியும்போது கந்தகப் புகையின் மணம் நன்றாகத் தெரியும்.

திருவிழா நாட்களில் இரவில் பல நிறமான மத்தாப்புக்கள் கொளுத்துவார்கள். இம் மத்தாப்புக்களில் கந்தியிருப்பதால் அவற்றின் புகையில் கந்தக மணத்தை அறியலாம். கந்தகப்புகையின் வாடை பட்டால் தொண்டைப் புகைச்சல், இருமல், மூச்சடைப்பு முதலிய வருத்தங்கள் உண்டாகும்.

கந்தகத்தைத் தோலைப்பற்றிய நோய்களுக்கு உள்ளுக்கும் வெளிக்கும் உபயோகிக்கலாம். நாள்பட்ட கீல்வாதம், சுவாசகாசம், மாரடைப்பு, நாள்பட்ட கக்கிருமல், நாள்பட்ட இருமல், கண்டமாலை முதலியவைகளுக்குக் கொடுக்கலாம். மூலவியாதி, நாள் பட்ட சீதபேதி ஆகிய இவைகளுக்கு மலம் இளகக் கொடுக்க இது தகுந்த மருந்து.

**கந்தகப்புகை:**—கோழிக் கூடுபோல் மூங்கிற்பத்தைகளால் ஒரு கூடு செய்து தலை நுழையும்படி மேற் புறத்தில் ஒரு துவாரம் வைத்து மெழுகுத் துணியால் அந்தக் கூட்டை மூடி அதனுள் தலைவெளியிலிருக்கும்படி உட்கார வைத்துப் புகை வெளிப்படாமல் கழுத்து இருக்கிற இடத்தில் துணியாலடைத்துக் கந்தகத்தை நெருப்பில் போட்டுக் கூட்டுக்குள் வைத்தால் கந்தகம் புகைந்து உடலெங்கும் படும். 15 நிமிஷம் வைத்திருந்து நோயாளருக்கும், கீல்வாத நோயாளருக்கும் இது சிறந்த பரிகாரம்.

**கந்தகச் சூரணம்:**—கந்தகப் பதங்கம் ஒன்றரைடிராம், சர்க்கரை, திராக்ஷை உப்பு வகைக்கு இரண்டு டிராம் ஒன்றுசேர்த்து சூரணமாக்கி நாள்தோறும் இரண்டு வேளை சிரங்கு முதலிய தோலைப்பற்றிய நோய்களுக்குக் கொடுக்கலாம்.

**கந்தக லேக்கியம்:**—பதங்கித்த கந்தகம் 2 அவுன்சு, திராட்சை உப்பு 1 அவுன்சு, தெளியவைத்த தேன் 1 அவுன்சு, சுக்குப்பாகு, குங்குமப்பூ ரசாயனம் வகைக்கு அரை அவுன்சு இவைகளைக் கலுவத்திலிட்டு, மைபோல் அரைத்துக் கொள்ளவும். இதைக் காலையில் 2 முதல் 4 டிராம்வரை கொடுத்தால் மலம் தாராளமாகப் போகும்.

**கந்தகக்களிம்பு:**--அரைப்பவுன் கந்தகத்தை ஒரு பவுன் பன்றி நெய்யுடன் சேர்த்து நன்றாகக் கலந்து சிரங்கு முதலிய தோலைப் பற்றிய நோய்களுக்குத் தேய்க்கலாம்.

**கந்தக எண்ணெய்:**—கந்தகம் 3 அவுன்சில் வேப்பெண்ணெய் அரைபுட்டிவிட்டு அரைத்து நாள்பட்ட கீல்வாத ரோகத்துக்குக் காலை மாலை இரண்டுவேளையும் நோயுள்ளவிடத்தில் தடவித் தேய்த்தால் நோய் நீங்கும்.


மதன

மஞ்சரி மாத்திரை

உங்களுடைய நபுஞ்சகத் தன்மையைப் போக்கி யௌவனர்களாக்குவதில் சிறந்தது.

இந்த பலயீனத்தை போக்க

**20 நாள்**

மாத்திரை விலை ரூபா 1.

தபால்செலவு வேறு.

உழைப்பு இனாம்

நமது பிரசித்தி பெற்ற டாக்டர்

**வைத்தியா?**

புஸ்தகத்துக்கு இன்றே எழுதுங்கள்.

மதன மஞ்சரி பார்மஸி,

1/94, சைனா பஜார்,

சென்னை.


# தாய் மொழிப் பயிற்சி.

(தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபால் பிள்ளையவர்கள் எழுதியது.)

—:O:—

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

வீடும் பள்ளிக் கூடங்களுந்தான் இவ்வாறிருக்கின்றனவே! கற்றோர் பலர் கூடும் பொதுக் கூட்டங்களிலாவது தமிழ் ஆட்சி யுண்டோ வென்பதைப்பற்றி ஆராய்வோம்: எக்கூட்டத்திற்குச் சென்றாலும் அக்கூட்டத்திற்கு அவைத்தலைவராக அமைபவர் ஆங்கில முணர்ந்த தமிழராகவோ, பிறராகவோ தான் அமைகின்றார். அவர் தமிழ் பேசத் தெரிந்தவராயினும், அங்ஙனஞ் செய்தல் தம் நிலைக்கு இழிவென்று கருதி, ஆங்கிலத்திலேயே பேசுகின்றார். தமிழ் மொழிச்சார்பில் கூடும் கழகக் கூட்டங்களிலும் ஆங்கில முணர்ந்த தமிழறியார் தாமோ அவைத் தலைமை ஏற்கவேண்டும்? என்னே தமிழ் மொழியின் நிலை! தமிழறிவு சிறிதும் பெறாதார் தமிழ்க் கூட்டங்களில் அவைத் தலைமை ஏற்றுப் பெருமை பெறுவதுட னமையாது சிற்சில வேளைகளில் தமிழைப் பெரிதும் இழித்துப்பேசவு மன்றோ முற்படுகின்றனர்! அவையிற் குழுமி அவைத்தலைவரும் உரையாளரும் பேசவிருக்கும் பொருண்மொழி கேட்க ஆவலுற்றிருக்கும் மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறுபேர் ஆங்கில முணராதவராயிருப்ப, அவைத்தலைவரும் உரையாளரும் தாம் பேசக்கருதியதை வழுவுற ஆங்கிலத்திலேயே பேசி முடிப்பதால் அத்தொண்ணூற்றுவரும் பெற்ற பயனென்னை? அன்னோர் மனமழுங்கி வீடுசெல்ல வேண்டியவர் தாமே? அங்ஙனம் செல்வோர் பின்னொருபோது பிறிதோரிடத்தில் நடைபெறும் தமிழ்க் கூட்டத்திற்குத் தம் மனமொப்பி யெவ்வாறு செல்வர்? ஆதலின், தமிழர் ஆங்கிலம் கற்று வல்லுநராக விளங்குவாராயின், ஆங்கில மொழியிலுள்ள அருமைப்பாடுகளை விளக்க முற அம்மொழி யறியாதார் பலர்க்கும் எடுத்துப் புகட்டவேண்டும். அங்ஙனம் புரிதற்குத் தமிழறிவு இன்றியமையாததன்றோ? ஆந்திரர்களும் வங்காளிகளும் இந்நிலையில் எவ்வளவு சிறந்து விளங்குகின்றனர் என்பதை நோக்கி என்னுள்ளம் உவகைக் கடலில் ஆழ்கின்றது. இது நிற்க.

ஆங்கிலங்கற்ற தமிழரிற் சிலர் தமிழில் சிறிதளவே பயிற்சி பெற்று, அதன் துணைகொண்டு தமிழில் நூலெழுதத் தொடங்கி விடுகின்றனர். அன்னோர் எழுதும் நூற்கள் இலக்கண வழுக்கள் நிரம்பியனவாக இருத்தலின் மொழியமைதியை யிழந்து, படிப்போர்க்கு இன்னல் விளைக்கின்றன. தமிழ் கற்றோர்க்கு அந்நூற் பொருள் இனிது விளங்குவதில்லை. அந்நூலாசிரியர்கள், 'யாம் எழுதும் நூற்கள் ஆங்கில முறைபற்றி எழுதப் படுவன வாதலின், தமிழொன்றே கற்றவர்க்கு அவற்றின் பொருளறியும் ஆற்றலில்லை,' என்று கூறி விடுகின்றார்கள். மிக நன்று! அந்நூற்கள் அவ்வாசிரியர்களின் அளவு ஆங்கிலமும் தமிழும் கற்றவர்களுக்கும் பயன்படுவதில்லை; ஆங்கில மொன்றுமே கற்றோர்க்கும் அவற்றால் தினைத்துணையும் பயனில்லை. அங்ஙனமாயின், அவர்கள் நூலெழுதுவது எதற்கோ, அறியேன்! ஆங்கிலமும் தமிழும் முறைப்படி ஓதி யுணர்ந்த பெருமக்கள் எழுதும் நூற்கள் பெரும் பயனளிக்கவில்லையா? காலஞ் சென்ற தமிழ்ப் பெருமக்களாகிய திருவாளர்கள் சுந்தரம் பிள்ளை அவர்கள், திருமணம் செல்வக் கேசவராய முதலியாரவர்கள், திருக்கோணமலை கனக

சுந்தரம் பிள்ளையவர்கள் போன்ற பெருமக்கள் இருமொழியிலும் புலமை பெற்றவர்களல்லவா? இஞ்ஞான்று மறைத்திருவாளர் மறைமலையடிகளும் பிறரும் இருமொழிப் பெரும் புலமை பெற்றெழுதும் நூற்கள் தமிழுலகிற்குப் பெரும் பயனளித்து வருவதை நாம் மறுக்கக் கூடுமா? ஆதலின், தமிழராவார் தம் தாய்மொழியிற் சிறப்புறப் பயின்று, பின்னுஞ் சில மொழிகளில் புலமை பெற்று, நாட்டுக்கு நற்றொண்டு புரிதல் வேண்டும் என்பதே என் விருப்பம். அங்ஙன மல்லாது ஒரு மொழியில் மாத்திரம் ஓரளவு கற்று, அம்மொழி யறியாதாரிடையில் நின்று, ஊமையன் தன் கைகால்களை யியக்கித் தான் கருதிய பொருளைப் பிறர்க்கு அறிவுறுத்த அவாவுவதைப் போல, வாய்வந்தன கழறுதிருப்பது நலமாம்.

இனித் தமிழ் நாளிதழ்களும் வார இதழ்களும் திங்கட்சுவடிகளும் ஆண்டாண்டுத்தோன்றித் தமிழ் என்று சொல்ல இயலாதபடி பற்பல மொழிகளின் சொற்களையும் கொண்டு எழுதிய கட்டுரைகளுடன் வெளிவந்துலவித் தமிழ் எனும் நம் தாய்மொழிக்கு விளைக்கின்ற இழிவைக்கண்டு தமிழறிஞர் மனமழியாதிருக்க வியலுமோ? தமிழ் வெளியீடுகளில் கட்டுரை எழுதுவோரும் அவ்வெளியீடுகளைப் பதிப்பவரும் தமிழுணர்ச்சி பெறுதல் இன்றியமையாததன்றே?

தாய் மொழிப்பயிற்சி யில்லாதார் தம் நாட்டுக்கென ஏற்பட்டுள்ள நாகரீகத்தை எவ்வாறு அறிந்தொழுக வல்லார்? தாய் மொழியில் தம் முன்னோர் தமக்குக் கருந்தனமாகப் பலகால் முயன்று எழுதிவைத்துச் சென்ற நூற்களால் தாம் எவ்வாறு பயன் பெற வியலும்? அன்னார்க்குத் தம் நாட்டின்மீது பற்று ஏற்படுவதெப்படி? தம்முன்னோரிடம் பற்று ஏற்படுவதெப்படி? தமக்கென ஏற்பட்டுள்ள தனியொழுகலாறுகளை அன்னார் எங்ஙன மறிய வல்லாராவர்? தம்மொழியெனத் தனி மொழியொன்றுண்டென்று அன்னார் எங்ஙனங் கூற வியலும்? தாய் தந்தையரை யறியாத மக்களைப் போல அவர்கள் பிறரால் இகழப் படுவார்களல்லவா? ஆகையால், தாய் மொழியை ஒவ்வொருவரும் போற்றிப் பயில வேண்டுவது இன்றியமையாக் கடனாகும்.

இனித் தாய் மொழி சிறப்படைதற்கான வழிகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்:

இளைஞர்களின் பெற்றோர் தத்தம் வீடுகளில் இளைஞர்களை ஒரு நாளைக்கு அரை மணி நேரமாவது தமிழ் நூற்களை அவரவர்கள் நிலைக்குத் தகுந்தபடி, படிக்கச் செய்தல்வேண்டும்; அவர்களுடன் தாம் பேசும்போது இனிய தமிழிலேயே பிழையறப் பேசி வருதல் வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலுமுள்ள சிறுவர்களைத் தமிழ் மொழியில் விருப்புள்ளவர்களாகச் செய்வதற்குச் சிறந்த தமிழ்ப் புலவர்களால் சிறுவர்களின் ஆண்டுக்கும் அறிவுக்கும் தகுந்த முறையில் இலக்கண வழுவில்லாத நடையில் எழுதப்பட்ட நூற்கள் சிலவற்றை வாங்கி அவர்களுக்குக் கொடுத்துப்படிக்கச் செய்து வரவேண்டும். வறியவர்களும் எளிதில் இம்முறையைக் கையாள வியலும். எங்ஙன மெனில், திங்களொன்றுக்கு ஒவ்வொரு நூலாக வாங்கிச் சேர்ப்பது வறியார்களும் செய்யக் கூடியதன்றோ? வீணான வழிகளிற் செலவாகும் பொருளில் ஒரு சிறு தொகையைத் தம் மக்களின் அறிவு வளர்ச்சிக்காகச் செலவழித்தல் எவர்க்கும் இயலாத செயலென்று சொல்லுதற்கில்லை. இந்நற் பழக்கம் நம் தமிழ் நாட்டிற் சில திங்கள் கையாளப்படுமாயின், பின்னர் இதனால் விளையும் நலங்கள் வியக்கத் தக்கனவாம்.

தமிழ் மக்களுக்கு இம்முறையிற் பழக்கமேற்படுமாயின், எண்ணற்ற தமிழ் நூற்கள் செலவாதற்கும் வழி யுண்டாம். அதனால், நூலெழுதும் ஆற்றல் வாய்ந்த புலவர்களுக்கும் பேரூக்கம் பிறக்கும். அவர்கள் பல துறைகளிலும் உரை நடையிலும் செய்யுள் நடையிலும் நூலெழுத முயல்வார்கள். இந்நாள், 'அச்சிடும் நூற்கள் விலையாக வில்லையே! என் செய்வோம்!' என்று ஏங்கி நிற்கும் பதிப்பாளர்களும் புதிய ஊக்கங் கொண்டு, அழகிய முறையில் குறைந்த விலையில் நூற்களை அச்சிடுவித்து



விலைப்படுத்த முந்துவார்கள். செந்தமிழ் மொழியாகிய நந்தாய்மொழி பற்பல புதிய நூல்களைக் கொண்டு சிறப்புற்று மிளிரும்.

பள்ளிக் கூடங்களில் தாய்மொழிப் பயிற்சிக்கு நன்மை யுண்டாகும் வகையில் தலைமையாசிரியர்களும் பிறரும் உழைக்க முன் வர வேண்டும். தமிழாசிரியர்களுக்குப் பள்ளிக் கூடங்களில் அவரவர்களுடைய கல்வி யறிவிற்குத் தகுந்தபடி மதிப்பும் ஊதியமும் அளிக்கப்படல் வேண்டும். மாணவர்களுக்குப் பயன் படத்தகுந்த நூற்களடங்கிய நூல் நிலையமொன்று ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் நிறுவப்படல் வேண்டும். பள்ளிக்கூடத்தில் நடைபெறுந் தொழிலை ஆண்டுக் கொருமுறை ஆயவரும் ஆய்வாளர்களில் ஒருவர் தாய்மொழியில் தகுந்த பயிற்சியும் பற்றுமுடையவராக இருத்தல் வேண்டும். இது நிற்க.

தமிழ் மக்கள் தம் இனத்தவருடன் உரையாடும்போதும் அன்னார்க்குக் கடிதமெழுதும் போதும் தாய் மொழியாகிய தமிழிலேயே உரையாடவும் எழுதவும் பழகவேண்டும். இத்துறையில் வங்காளிகளும் ஆங்கிலேயர் முதலிய அயல் நாட்டவர்களும் எவ்வளவு சிறந்து விளங்குகின்றார்கள் என்பதை அறிஞர்கள் நன்கு உணர்வார்கள்.

பெரும்பாலுந் தமிழர்கள் வாழ்கின்ற சிற்றூர்களிலெல்லாம் ஒவ்வொரு தமிழ் நூல் நிலையம் ஏற்படுத்தப்படல் வேண்டும். அந்நூல் நிலையத்திற்கு ஏற்படும் செலவுகளுக்காக அவ்வச் சிற்றூரில் வாழும் குடிகள் ஆண்டுக்கொரு முறையேனும் தங்களாலியன்ற பொருளுதவி செய்தல் வேண்டும். ஓய்வு நேரங்களில் மக்கள் அந்நூல் நிலையத்திற்குச் சென்று, தமக்கு விருப்பமான நூலைப் பெற்றுப் படித்தலைத் தம் கடமைகளுள் ஒன்றாகக் கொள்ளுதல் வேண்டும்.

நம் தாய் மொழியாகிய உயர்தனிச் செம்மொழியில் நம் முன்னோர் நமக்கு எய்ப்பினில் வைப்பெனப் பெரிதும் முயன்றியற்றி வைத்துள்ள நூற்களைச் செல்வத்திற் சிறந்த பதிப்பாளர்கள் அழகிய முறையிற் குறைந்த விலையில் தகுந்த புலவர்களைக் கொண்டு சிக்கறுத்துப் பதிப்பித்துப் பலர்க்கும் பயன்படச் செய்தல் வேண்டும்.



ஒவ்வொரு சிற்றூரிலும் பேரூரிலும் பொது நிலைக் கழகங்களை ஏற்படுத்தி அவற்றைக் கல்வியில் விருப்புடைய மக்கள் ஆதரித்துப் போற்றி வரல் வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறையோ, பல முறையோ, செவ்வி வாய்க்கும்போதெல்லாம், கல்வியில் வல்ல புலவர்களை வரவழைத்துச் சிறந்த பொருள்களைப்பற்றிச் சொற்பொழிவுகள் நடைபெறச் செய்தல் வேண்டும்.

அன்பர்களே, யான் என்னறிவிற் கெட்டிய வரையில் நம் தாய் மொழிப் பயிற்சியின் இன்றியமையாமையைப் பற்றியும், அதனைப் போற்றி வளர்த்தற்கான முறைகளைப் பற்றியும் ஒருவாறு கூறினேன். எனினும், முற்ற எடுத்துக் கூறினேன் என மொழியத் துணியேன். அறிஞர்கள் தாய்மொழிப்பயிற்சிக்கு ஆவன என எவற்றைக் குறிப்பிடுகின்றார்களோ, அம்முறைகளையெல்லாம் பின்பற்றி நடந்து உண்மைத் தமிழர்களாக விளங்கி, அனைவரும் நம்மைப் போற்றும்படி வாழ்தல் வேண்டும் என்னும் பெருவிருப்புடன் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை இத்துறையில் தமிழராகிய நம்மை உடனின்று ஊக்குமாறு என் மன மொழிமெய்களால் எண்ணி ஏத்தி இறைஞ்சி நிற்கின்றேன்.

---

விடுபட்ட கைதி:--பத்திரிகையிலுள்ள விளம்பரங்களை வாசிக்கும் நபரைப் பார்த்து ஐயா! அவைகளை யெல்லாம் வாசிக்காதீர்கள்!

வாசிப்பவர்:—ஏன்?

கைதி:—அதை வாசித்து விட்டுதான் நான் 10 வருஷம் கவர்ன்மெண்டு பள்ளிக்கூடத்திலிருந்து வந்தேன்.

வாசிப்பவர்:—ஆச்சரியத்துடன், அது என்னையா?

கைதி:—நான் ஒரு விளம்பரத்தைப் பார்த்தேன் அதிலே "வீட்டிலிருந்து பணம் சம்பாதி" என்றிருந்தது. அப்படியே செய்தேனையா!




## உலகிலே மிகவும் பருத்த மனிதன்.

:o:

வெகு கனமும் பருத்த மனிதன் ஜெர்மனி தேசத்திலிருந்தான். அவன் பெயர் சொல்ல வேண்டுமென்றாலோ பல்லுடைந்து போகும் 'ராபர்ட் ருக்கன்ட்ராப்" என்பதே அப் பெயர். 540 பவுண்ட் கனமுள்ள தேகத்தைக் கொண்ட ராபர்ட், தன்னை அனைவருக்கும் வேடிக்கை காட்டிக் கொண்டு அதிலிருந்து கிடைக்கும் பணத்தால் காலங் கழித்து வந்தான். உடம்பிருக்கும் உருவத்திற்கு, அவன் ரயிலில் பிரயாணம் செய்ய வேண்டுமானால் சாமான் ஏற்றும் வண்டியில் தான் செல்லவேண்டும். ஆனாலும் வண்டியின் வாயிற்கதவிற்குள் அவன் நுழைவதென்றால் அசாத்தியமே. ஆகையால் கால் டன் கனமுடன் கூடி, நடக்கும் மலை போலத் தோன்றும். அந்த அற்புதமனிதனை எங்கு வேண்டுமானாலும் சுமந்து செல்ல ஓர் மோட்டார் வண்டியே உபயோகப் பட்டது. அத்தகைய மனிதன் வாசம் செய்யும் வீட்டைப் பற்றிக் கேட்க வேண்டுமா? வீட்டின் வாசல் படியின் அகலம் மற்ற வீடுகளிலுள்ளதைப் போல் இருமடங்கு தான் அதிகமிருந்தது. அதற்கு மேலில்லை. பாவம்! மங்கள விக்ரகமான ராபர்ட் இப்பொழுது மாண்டுவிட்டானும். ராபர்ட்டைப்போல் ஆங்கிலேயர்களுள்ளும் எட்வர்ட் ப்ரைட் என்னும் ஒரு "குண்டன்" இருந்தான். அவன் சாகும் பொழுது அவனது கனம் 620 பவுண்டு. அவன் மார்பைச் சுற்றி அளந்தபோது 5½ அடியும், இடுப்பைச்சுற்றி அளந்தபோது சுமார் 7 அடியும், கையின் நடுவே 2½ அடியும் இருந்ததாம். எட்வர்ட் தன்னைச் சர்க்கஸ் மிருகம்போல் அனைவருக்கும் காண்பித்துப் பணம் சம்பாதிக்கவில்லை. ஆனால் ஏதோ சிறு வியாபாரம் செய்து கொண்டிருந்தான். உடம்பு வரவர உப்பி கடைசியில் எட்வர்ட் பாடு எருமையுடன் போட்டி போட்ட தவளை கதையைப் போலாயிற்று. முடிவில் பருமன் ஜாஸ்தியாகவே எட்வர்ட் மாண்டான். அவன் மாண்டதும் ஓர் விசித்திரம் நடந்தது. அவனது மார்புச்சட்டையில் 21 வயதான ஐந்து இளைஞர்களைக் கட்டித்தொங்க விட முடியும் என்று அறிக்கை வெளியிடப் பட்டது. அதைப் பரிசோதிக்கக் கருதிச் சில இளைஞர்கள் முன்வந்தார்கள். ஆ ஹா! ஐந்திற்கு ஏழுபேர் எட்வர்டின் சட்டையில் மாட்டிக்கொண்டு கஷ்டமின்றித் தொங்க முடிந்தது. எட்வர்டுக்கு ஐந்து குழந்தைகள். அவன் எப்பொழுது பார்த்தாலும் குஷியாகத்தானிருந்து வந்தான். சாதாரணமாக ஒரு மனிதன் உட்கொள்ளும் உணவை



யே உண்டுவந்தான். நல்ல மனுஷன் தான். ஒரு நாளைக்கு ஒரு காலன் பீர் மாத்திரம் மரக்கலம் போன்ற அவன் வயிற்றுக்குள் போய்ச்சேரும். எட்வர்ட் இறந்ததும் பிரம்மாண்டமான அவனது சவத்தை வீட்டை விட்டு வெளியே கொண்டு வர வெகு கஷ்டமாய்விட்டது. அவ்வளவு பெரிய உடலுக்கு எவ்வளவு பெரிய அடக்கம் செய்யும் பெட்டி ஆக்கப்பட்டிருக்க வேணுமென்பதை வாசகர்களே யூகித்துப்பாருங்கள். அந்தப் பெட்டியை வெளியே கொண்டுவர வீட்டின் சுவரை இடித்து, மாடிப்படியைத் தூக்கவேண்டியதாய் விட்டது.

ஆனால், மேலே கூறிய இவ்விருவருக்கும் மூத்த அண்ணா ஒருவரிருந்தார். லாம்பர்ட் எனும் அவரும் ஒரு ஆங்கிலேயர்தான். அவரை ஒரு மாமிசமலை யென்றே கூறி விடலாம். அவர் இறப்பதற்குச் சில நாட்களுக்கு முன் 740 பவுண்டு கனமிருந்தாராம். அவர் உடலைச்சுற்றி ஒன்பதரை அடி அளவு இருந்ததாம். காலினளவு மூன்றடிக்குக்கொஞ்சம் அதிகம். இம்மாதிரியான மனிதருக்கு உடுப்புத் தைக்கக் கூலியாக தையற்காரன் 20 பவுன் அடைவது வழக்கமாம். அவருக்கு 5 உடுப்பு தைக்கவேண்டுமானால் தையற்காரன் தாலி அறுந்து விடுமென்பது திண்ணம்.

லாம்பர்ட் உருவத்தில் மட்டும் பூதமாயில்லை. உடல் வலிமையிலும் மிக்கவரே. வெகு அலக்ஷியமாக 600 பவுண்டுள்ள சாமான்களைச் சுமந்து செல்வார். பால்யத்திலே அவர் நீந்துவதில் வெகு சமர்த்தராம். அந்தப் பிரபு ஜலத்தில் திடீரென விழுந்தால் கேட்கவே வேண்டாம். ஒரு ஆள் உயரத்திற்கு அலை கிளம்பும் முதுகைப்பார்த்தால் கட்டுமரம் மாதிரி இருக்கும். அவர் நீந்தும் போது இருவர் தாராளமாக அவர் முதுகின்மீது சவாரிசெய்யலாம். லாம்பர்டின் உடம்பும், பலமும் மிகுந்திருந்ததென்றால், குணமும் குறைந்ததாயில்லை. அவரது தந்தையார் மற்ற மனிதர்களைப்போல் சாதாரணமான சரீரக்கட்டு உடையவர்தான். லெஸ்டர் ஜெயிலில் காவலாளியாயிருந்தார். அவர் பென்ஷன் வாங்கிக் கொண்டதும், தகப்பனின் வேலைக்குத் தனயன் வந்தான். மற்றக்காவலாளர்களைப் போல் கடுகடென வில்லாமல் கைதிகளையெல்லாம் வெகு பிரியத்துடன் மேல் பார்வை யிட்டுவந்தான். போகட்டும்! அவ்வளவாவது புளி மூட்டை போன்ற உருவத்திற்கு நல்ல குணமிருந்ததே! ஆகவே அவர் வேலையிலிருந்தும் விலகியதும் ஆயுள் கால முழுவதும் பென்ஷன் கிடைக்கும்படி அரசாங்கத்தாரால் சிபார்சு செய்யப்பட்டார்.

ஆயினும், அவருக்கு மற்றோர் வகையில் பணவரும்படி அதிகமாயிற்று. அவரது யானைக்குட்டி உருவத்தைக்காண அவர் எங்கு சென்றிடினும் ஏகக் கும்பல் கூடுவதைக்கண்டவுடனே ஓர் யோசனை தோன்றிற்று. லண்டனில் இப்போது ஸ்ரீமதி சரோஜனி தேவியார் தங்கியிருக்கும்படியான செல்வவான்களே அதிகமாக வசிக்கும் பிக்கேடிலியில் இருந்து கொண்டு செல்வாக்குள்ள மனிதர்கள் கூடியிருக்கும் சபைகளில் தன்னைத் தானே காட்டி அதிலிருந்து கிடைத்த பெரும் பணத்தைப் பெற்று மகிழ்ந்திருந்தார். சாகும் வரை அம்மாதிரியாகவே இருந்தார். கடைசியாக வின்கோவன்ஷையரில் ஓரிடத்தில், மறுநாள் நடக்கப் போகும் காக்ஷியைப்பற்றிப் பிரசுரங்களை அச்சடிக்கக் கொடுத்திருந்தார். பாவம்! மறுநாள் காலை ஒன்பது மணிக்குள் லாம்பர்ட் மண்ணுலக வாழ்க்கையை விட்டுச் சென்றார்.

மேற்கூறிய மூன்று மலைக்குட்டிகளையும் பார்க்கும்போது ஓர் முக்கிய விஷயம்

வெள்ளிடை மலையென அனைவருக்கும் விளங்கும். அதாவது லாம்பர்ட் சாகும் போது அவனுக்கு வயது 40, பிரைட் 30 வயதிலேயே இறந்து விட்டான். ராபர்ட் 47 வருடமே உயிருடனிருந்தான். அவர்களது அகால மரணத்திற்கு அவர்கள் பருத்த உடலே காரணமெனத் தெரிகிறது. அவர்களைப்போல் பருத்த உடலுடன் பணம் சம்பாதிப்பதைக் காட்டிலும் மனதிற்கு அருவருப்பில்லாத மெல்லிய திரேகத்துடன் இருப்பதேமேல் என்றும் தோன்றுகிறது. அவர்கள் சேர்க்கும் பணத்தை எந்த வகையில், எப்போது செலவழிக்க முடியும். அம்மாதிரி மனிதர்கள் நாட்டில் மலியாமலிருக்க வேண்டுமென்பதே எமது விருப்பம். ஏனென்றால், ரயில் வண்டிகளிலெல்லாம் சீட்டுக்கு 2 ஜனங்கள் என்று போட்டிருக்கும்போதே சங்கடம் ஜாஸ்தியாயிருக்கிறது. அவர்கள் மாதிரி மகான்கள் வந்து விட்டால் இரண்டு "சீட்டு"க்கு ஒருவர் என்று போட வேண்டி வரும். ஜட்கா, ட்ராம், பஸ் எல்லாம் ஸ்பெஷலாய்ச் செய்ய வேண்டியதுதான்.

---




# பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும், தங்க மெடல்களும் நற்சாட்சி பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூபா 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூபா 5. 1 வருஷ பலன் எழுத ரூபா 5, எதிர் காலத்தைப் பற்றிய 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை).

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாசாச்சாரியார்,
"ஸரஸ்வதி" 4, எல்டாம்ஸ் ரோட்,
தேனாம்பேட்டை P.O., மதறாஸ்.

இந்தியா வெங்கும் ஜெயத்துடன் விளங்கும்

# ராஜன் பட்டணம் பொடி




காரம், மணம், குணம், நிறம் முதலிய எல்லாவற்றிலும் நிகறற்றது.

ஒரு முறை தருவித்து உண்மை அறியவும். விலை விவரங்களுக்கும், மற்றவைகளுக்கும் எழுதுக.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
ஆர். எஸ். சுகந்த மூக்குத்தூள் பாக்டரி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெருவு, மதறாஸ்.

தந்தி விலாஸம்:—" நஸ்யம் " மதறாஸ்.




வயதிற்கு தகுந்த வேலை



குழந்தைக்கு எண்ணெ ஸ்நானம்



சென்னையில் ஸ்ரீ தியாகராஜரது சிலையை கவர்னர் திறந்து வைத்த காக்ஷி.

# விஞ்ஞான விசித்திரங்கள்.

(T. ஸ்ரீனிவாஸ ராவ். பி.ஏ.,)

(காபிரைட்.)

—:o:—

**கடுதாசிப் பெட்டியில் காபிப்பானம்:**—கடுதாசியாவது? பெட்டியாவது? காபிப் பானமாவது? என்ன ஐயா, தாக்கக் கலகத்தில் ஏதாவது இப்படி ஒன்றிற்கொன்று எழுதி விட்டீரா என அனேகர் கேட்கலாம். அதற்கு இல்லை என்ற பதிலை ஓங்கி ஒருதரம் கூறிவிட்டு, கடுதாசிப் பெட்டியிலும் காபிப்பானம் தயார் செய்யலாம் என்றே உரைப்போம். ஆனால், அவ்வாறு கடுதாசிப்பெட்டியில் காபி தயாரிப்ப தென்றால் காபி ஹோட்டல்களில் நடப்பதைப் போன்று பெரியதோர் பாத்திரத்தில் (இங்கு கடுதாசியாலாகிய பாத்திரம்) தண்ணீரை ஊற்றித் தடதடவென எரி நெருப்பை அதனடியில் ஏறத் தள்ளிவிட்டு மற்ற வேலைகளைக் கவனிப்பதென்பதில்லை. கடுதாசியாலாகியதோர் சிறு பெட்டியில் கொஞ்சம் ஜலத்தைக் கொதிக்க வைக்க முடியும் என்ற உண்மை நிரூபிக்கவே யன்றி வேறு அம்மாதிரியான பெட்டியொன்றை நிரந்தரமாக வைத்துக் கொண்டு அதில் தான் காபிப் பானம் தயார் செய்து சாப்பிடுவ தென்பது வீண் எண்ணமே. அது சரி! வீட்டிலுள்ள பவர்லைட் கண்ணாடியைச் சுற்றிலும் ஓர் துண்டுப் பேபரைச் சுற்றி வைத்து விட்டு அந்த விளக்கை ஏற்றிவிட்டால் சிறிது நேரம் கழிவதற்குள் பேபரில் உஷ்ணம் ஏறிப் பின் அது கருகிப் போகிறதே! கடுதாசிப் பெட்டியில் காபிப் பானம் தயாரிப்பதெப்படி?

வெகு மெல்லியதாயில்லாமல், நடுத்தரமான கனமுடையதோர் பேபரை எடுத்துக்கொண்டு ஒரு கிண்ணம் போலவோ அல்லது பள்ளிச் சிறுவர் செய்யும் மைக்கூடு போலவோ ஒருசிறு பாத்திரம் செய்து கொள்ள வேண்டும். அப்பாத்திரம் ஒழுகாததாய் இருத்தலவசியம். அதற்குத் தீப்பெட்டியிலுள்ள தட்டு உபயோகப் படுத்தப்படலாம். அதனுள் ஒரு சிறிது ஜலத்தை ஊற்றி மெல்லியதாக எரியும் விளக்கின் மீது வைத்துச் சூடாக்கலாம். சிறிது நேரம் கழித்து அப்பாத்திரத்திலுள்ள ஜலம் நன்றாய்க் கொதிக்க ஆரம்பித்துவிடும், காபிப்பானம் தயார் செய்வதற்கான சூட்டை அது அடைந்து விடுமானதால் "சாம்பிள்" (Sample) பானம் தயாரிக்கலாம். இப்படிப் பானம் தயாரிப்பதில் ஓர் பௌதிக சாஸ்திர உண்மை பொதிந்து கிடக்கின்றது. அதைக் கிண்டிப் பார்க்க வேண்டும். மெல்லியதாக எரியும் விளக்கின் உதவியால் முதலில் பெட்டியின் அடிப் பாகம் உஷ்ணத்தை அடைகிறது. ஆனால், அந்த உஷ்ணம் உடனே உள்ளிருக்கும் ஜலத்திற்குக் கொடுக்கப்படுகிறது. இவ்வாறாகக் கொஞ்சம் கொஞ்சமாய் ஏறும் சூடனைத்தும் உள்ளிருக்கும் ஜலத்திற்கேபோவதாலும் ஜலமும் பரிமாணத்தில் ரொம்ப குறைந்திருப்பதாலும் கடுதாசிப்பாத்திரம் நன்றாய்ச் சூடாவதற்குள் ஜலம் கொதித்து விடுகிறது. கேவலம் ஒரு கடுதாசிக்கு இவ்வளவு தாராள நோக்கம் இருப்பது வியக்கத் தக்கதே. தனக்குக் கிடைக்கும் உஷ்ணத்தில் தானம் கொஞ்சம் செய்து விட்டுப் பிறகே எஞ்சியதைத் தானடைகிறது. உலகத்தீரே! உலகத்தீரே! நீங்கள் என்ன செய்கிறீர்கள்?

---

**சூரியனைப் பார்த்து விட்டு மறுபுறம் திரும்பினால் கருப்பு வட்டங்கள் பல தோன்றுவதேன்:**—சூரியனைச் சற்றுநேரம் பார்த்துக்

கொண்டிருந்து விட்டு சற்று மறுபுறம் திரும்புவீர்களானால் நீங்கள் வெட்ட வெளியை நோக்கினாலும் சரி, வேறெதைப் பார்த்தாலும் சரி, வட்ட வடிவமாய்க் கருப்பு வட்டங்கள் பல எங்கும் தோற்றும்? இதுவரை யாரேனும் இதை அனுபவித்துப் பார்த்திராவிடில் இனியாவது ஒரு தடவை அப்படிப் பார்த்து நாம் கூறுவது உண்மை தானா என்று ஐயந்தீர்த்துக் கொள்ள விரும்புகிறோம். அவ்வாறு கருவட்டங்கள் தோன்றக் காரணமென்ன?

நமது கண்களை ஓர் சாயல் படம் பிடிக்கும் கருவிக்கு ஒப்பிடலாம். அக்கருவியினுள் படம் பிடிப்பவன் ரசாயன வஸ்து தடவிய கண்ணாடியை (Sensitive Negative Plate) உள்ளே நுழைத்து அக்கருவியின் முன்னிருக்கும் வஸ்துகளின் சாயல்களை அக்கண்ணாடியில் பதிய வைக்கிறான். அக்கண்ணாடியின் மீது பூசப்பட்டிருக்கும் ரசாயன வஸ்துவின் தன்மையாதெனில் அதன் மீது வெளிச்சம் விழும் பொழுது, வெளிச்சம் விழும் அப்பாகம் தாக்கப்படுகின்றது. பிறகு, அக்கண்ணாடியால் உபயோகமே கிடையாது. நமது கண்களிலும் அக்கண்ணாடியைப் போலவே ஓர் வித அபூர்வ அமைப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது, கண்ணுக் குள்ளிருக்கும் 'ரெடினா' (Retnia) என்பதே அந்த அமைப்பாகும். அதில் எவ்வளவு வஸ்துக்களின் சாயல் வீழ்ந்தபோதிலும் அது கெட்டுப் போவதே இல்லை. அது நிரந்தரமாக விருக்கும் விசித்திரத் திரை போலாகிறது. அது கண்ணாடி போலல்லாது உயிருள்ள திரை அது பற்றியே ஒரு உருவத்தின் சாயல் வீழ்ந்த உடன் அதைத் தெரிந்து கொண்டு மற்றோர் உருவம் தன் மீதில் விழத் தயாராகின்றது. உயிருள்ள திரையாயினும் ஒளி மிக்க வெளிச்சத்தைக் காணுகையில் அது ஒரு சிறிது கெடத்தான் செய்கிறது. ஆகவே சூரியனை நாம் பார்க்கும்போது அத்திரையில் சில பாகம் பாழாகின்றது. அப்படி யிருக்கையில் உடனே வேறு வஸ்துக்களைத் திரும்பிப்பார்த்தால், அவ்வஸ்துக்களின் சாயல் 'செடினா' வில் பாழ் பட்ட பாகத்தில் வீழ்ந்தும் பிரயோஜனமில்லாது போகிறது. மற்றப் பாகங்களில் விழும் உருவங்களின் சாயல் தெரியும்போது, மத்தியிலுள்ள குறிப்பிட்ட சில பாகங்களில் வீழ்பவை மட்டும் தெரியாது போகவே, வானத்தில் கருப்பு வட்டங்கள் பல காணப் படுகின்றன. இதெல்லாம் ஓரிரண்டு வினாடிப் பொழுதே நிலைத்து நிற்கும். ஏனெனில் அவ்வினாடி நேரத்திற்குள் "ரெடினாவின்" பாழ்பட்ட பாகம் செப்பனிடப் படுகிறது. கரிய வட்டங்கள் கடிதில் மறைகின்றன, வாசகர்களே! மேலேகூறிய படி கண்ணுள்ளிருக்கும் ரெடினாவின் பாழ்பட்ட பாகங்களுக்குப் புத்துயிர் தானே ஏற்படாதிருந்து விடுமாயின் உலகில் ஜீவ ராசிகளுள் எத்தகைய மாறுதலேற்படுமென்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள் 'அம்மம்மா' அதை நினைத்தாலும் தலை சுற்றும்.

---


## ஹெர்பல் க்ளிசரைன்.

இது மூளையின் உஷ்ணத்தை தணிக்கும் மயக்கத்தைப் போக்கி கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். கூந்தல் உதிர் தலை நிறுத்தி மயிரைக் கருப்பாக்கி வளர்க்கும்.




தலைமயிரைப் பட்டு போல் பளபளப்பாகச் செய்யும். சுண்டு, சொரி, சொட்டை இவைகளைப் போக்கி இள நரைப்பு இல்லாமல் காப்பாற்றும். நரம்புகளுக்கு வலுவைத் தரும்.

ஒரு தடவை உபயோகித்துப் பார்த்தால் இதன் குணம் பிரத்தியட்சமாய் காணலாம்.

4, 6, 8, அவுன்ஸ் புட்டி
ஒன்றுக்கு விலை அணா. 8, 11, 14.
ஏஜெண்டுகள் தேவை.

விலாசம்:—

**எம். எஸ். மெடிகல் ஹால்,**
**159, பிராட்வே, மதராஸ்.**
தபால் பெட்டி 132.




# நிர்வாண இயக்கம்.

நாகரீகம் நாட்டில் முதிர முதிர, என்னென்ன புதுமையெல்லாம் தோன்றுகின்றன என்பதைச் சற்று நினைத்துப் பார்த்தால் அது விபோதத்தைத் தவிர வேறொன்றையும் தாராது என்பதைத் திடமாகக் கூறலாம். உலகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வோர் நவீன இயக்கம் இருந்து வருகிறது. அவைகளில் வெகு விசித்திரமான தொன்று 1900ம் வருடத்திலே ஜெர்மனி தேசத்தில் கிளம்பிற்று. அதற்கு நிர்வாண இயக்கமென்பது பெயர். ஆரம்பத்தில் அவ்வியக்கத்திற்கு அதிகாரிகளின் தொல்லை அளவு கடந்திருந்தது. ஆனால், இப்பொழுதென்றால் அதில் அறுபதினாயிரம் அங்கத்தினர் இருக்கின்றனர். ஆடவரும் பெண்டிரும் சேர்ந்தே அறுபதினாயிரம். அவர்களெல்லாம் ஒன்று கூடி உல்லாசமாய், முற்றும் நிர்வாணமாய் நீரில் நீந்துவதும், உடம்பின் மீது ஆடையென்னும் நாமதேயமேயின்றி மல்யுத்தம், தேகாப்பியாசம் முதலியவைகளைச் செய்வதும் வழக்கம். மற்றும், "ஆகாயமே வான் வெளி" என்னும் வெட்ட வெளியில் பொதுக் கூட்டங்களைக் கூட்டிக் கொள்வதும் வழக்கம், இது போன்ற இயக்கம் இன்று பிரான்சு, இங்கிலாந்து, ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்டிரியா, போலந்து, ரஷ்யா போன்ற தேசங்களில் வெகு வேகத்துடன் விருத்தியடைந்து வருகின்றது. மிஸ். மேயோ இப்பொழுது ஐரோப்பாவில் ஒரு சுற்றுப் பிரயாணம் செய்ய மனம் கொண்டால் "ஐரோப்பிய தாய்" என்னும் பெரியதோர் புஸ்தகம் எழுதி பணம் பல பெறலாமே!

நிர்வாண இயக்கத்தைப் பின்பற்றும் பக்தர்களின் சர்வதேசக்கூட்டம் ஒன்று தலை நகராகிய பெர்லினில் நடந்தது. அதற்கு மேற்கூறிய நாடுகளிலிருந்து அனேக பிரதிநிதிகள் ஆடவரும் பெண்டிருமாக சென்றிருந்தனர். ஸோவியத் ரஷ்யாவிலிருந்து உத்யோக தோரணை யிலோர் பிரதிநிதி அனுப்பப் பட்டாராம். யௌவன கோர்ட்டுகள், இளைஞர் இயக்கங்கள், தேகாப்பியாச சங்கங்கள், இயற்கை யன்னையின் தோழர் சபை, இவைபோன்ற பல ஸ்தாபனங்களிலிருந்தும் பிரதிநிதிகள் சென்றிருந்தனர், அக்கூட்டத்தில் பிரசங்கம் செய்தவர்கள் ஜெர்மன் தேசத்தைச் சேர்ந்த இரு அழகிய ஸ்திரீ அங்கத்தினர்களே! அவர்கள் நிர்வாண இயக்கத்தைப் பெரிதும் போற்றிப் பேசினர்.

நிர்வாண இயக்கத்தை நடத்திவரும் ஒவ்வொரு சபையிலும் அங்கத்தினரா யிருப்பதற்கு வேண்டி வெவ்வேறு நிபந்தனைகளை விதித்திருந்தது, சில சபைகளில் வெகு கடுமையான விதிகளிருந்தன. அவைகளின் படி அங்கத்தினர்கள் தம்முடைய சொந்த வாழ்க்கையைப் பற்றியும், தம் தேகாரோக்யம், பழக்க வழக்கங்கள் முதலியவைகளைப்

பற்றி ஒளியாது கூறி விட வேண்டும். மற்றும் மற்றைய அங்கத்தினர்களைப் பற்றி ஒருவருக்கும் தெரிவிக்காது இருக்கிறேனெனச் சத்தியம் செய்து தரவேண்டும். ஒரு புருஷன் அதில் அங்கத்தினனாக விரும்பின் அவனது மனைவியும் சேரப்போகிறாளா என்னும் கேள்வியும் கேட்கப்படுமாம். அதே மாதிரி ஒரு ஸ்திரீயிடமும் கேட்கப்படுமாம். அப்படி ஒருவர் சேர்ந்து மற்றொருவர் சேராவிட்டால் அதற்குக் காரணமுரைக்க வேண்டும். கணவன் மனைவி யருள் விவாக சம்பந்தவிலக்கேற்பட்டுப்பிறகு அவர்களுள் எந்த அங்கத்தினராயினும் சரி, விவாக விலக்கேற்பட்ட காரணம் கூறவேண்டும். மது விலக்கை வெறுப்பவனா, மரக்கறி உண்பவனா, சுருட்டு, சிகரெட் குடியா திருப்பவனா என்னும் கேள்விகளும் கேட்கப்படும். நிர்வாணசபை பணக்காரன் முதல் ஏழை வரை உள்ள ஒவ்வொரு வகை ஜாதியாருள்ளும் உண்டு.

பிரான்சு தேசத்தில் பாரிஸிலிருந்து 20 மைலுக்கப்பாலுள்ள தோர் தீவே, நிர்வாண இயக்கத்திற்கு அத்தேசத் தலைமை இடம். அங்குள்ள அங்கத்தினர் பிறந்தமேனியராய் இருக்க வேணுமெனும் கட்டாயமில்லை வெகு மெல்லியதும், சிறியதுமானதோர் ஸ்நான உடுப்பை வேண்டுபவர் அணிந்து கொள்ளலாம். ஆனால், அதிலும் ஒரு கட்டுப்பாடு உண்டு. ஆடைகள் வெகு சொற்பமாயு மிருக்கவேண்டும். குறைந்த உடையாயு மிருக்க வேண்டும். புதிய அங்கத்தினராக விரும்புவர்களின் யோக்கியதா பத்திரம் நன்றாய்ச் சோதிக்கப்படும்.

பிரான்சில் ரிவியரா பலேப்பிர தேசத்தின் உச்சியில் ஓர் குடியேற்ற நாடு டாக்டர். கோல்டு பர்க் என்ற ஜர்மனியரால் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அங்கு உடலை மறைக்கும் ஆடையை விலக்குவதன்றி, பணம் உபயோகிப்பதை ஒழித்து, சொத்து, விவாகச் சட்டங்கள், அபேதம், தேசியத் தன்மை முதலியவைகளைத் தள்ளி விடவும் உத்தேசித்தே அக்குடியேற்றப்பிரதேசம் ஸ்தாபிக்கப்பட்டதின் கருத்து.

சென்ற வருடம் குளிர்காலத்தின் போது ஹங்கேரி நாட்டில் முதல் முதலாக நிர்வாண இயக்கம் ஸ்தாபிக்கப்பட்டது. புதபெஸ்ட் எனு மிடத்திற்கு வெளியே மரமடர்ந்த நாட்டில் அது நடைபெற்று வருகின்றது. அந்நாட்டுக் கவர்ன்மெண்டார் அதுபோன்று டானியூப் நதிக்கரையிலும், பலாடன் ஏரிக்கரையிலும் இரண்டு இயக்கங்களை ஆரம்பிக்க உத்தரவு தந்திருக்கிறார்களாம்.

இவ்வியக்கங்களுக் கெல்லாம் ஓர் பொதுப் போரறை இருக்க வேண்டுமல்லவா? நிர்வாணமாயிருந்து களங்கமற்ற பரிசுத்தமான மனதை அடைந்து, அதிலிருந்து ஆடவரும் பெண்டிரும் இன்னும் உயர்ந்த சன்மார்க்கமான திட்டத்தைப் பெற்றுப் பின், ஆரோக்யமான வாழ்வுடனும் மிகுந்த மனச் சந்தோஷத்துடனும் இருக்க வேண்டியது என்பதே இப்பொழுது வெகு மும்முரமாய் வளர்ந்து வரும் சர்வதேச நிர்வாண சங்கத்தின் பல்லவி.

இந்தியாவிற்கு இந்த வாடை தட்டி விடக்கூடா தென்பது எம் அந்தரங்க விருப்பம்.

# காதலின் கதி.

(T. V. சொக்கப்பா. B. A. Hons.)

:o:

## 1

"என்னை விட பாக்கியவான் யாராவது உண்டா? கண்ணையுங் கருத்தையும் ஒரு மிக்கக் கவரும் கரிய விழியாளின் போன்பைப் பெற்ற பிறகு எனக்கு இவ் வுலகில் வேறு யாது வேண்டும்? அவள் பொன்வாயின் தேன் மொழிகளைக் கேட்டு ஆனந்திப்பதிலும் வேறு ஆனந்தம் உளதோ? கருணை ததும்புங் கண்களைக் கண்டு களிப்பதில் உண்டாகும் இன்பந்தான் என்னே! ஆகா! நம் தெய்வத் தந்தையின் படைப்பின் பெருமையை என்னென்று புகழ்வது! கரிய விழியும் தேன் மொழியும் ஒருங்கே அமையப் பெற்ற அணங்குகள் இல்லையேல் இவ்வுலகம் ஒரு பெரும் பாலைவனமன்றோ? இவ்வுலகமே எது? முயற்சிதானுண்டா? முயற்சியாலேற்படும் வினைகளை பெரு மகிழ்ச்சியுடன் அனுபவிப்பாரும் உளரோ? சாரலாதேவி என்னிடங் காட்டும் அன்பைக் கண்டு, அதனால் நான் அனுபவிக்கும் இன்பத்தைப்பார்த்து யார்தான் பெருமூச்செறியார்? "சாரலா! நீதான் நான் தினந் தரிசிக்கும் பிரத்தியக்ஷ பூலோக தெய்வம்! நீயே என் ஹிருதயத்தில் வீற்றிருக்கும்; என் இன்ப ரசம், என்கண்முன் சற்றேனும் விலகாது சதா காட்சி தந்தருளும் உருவமும் நீயே" என்று இவ்வாறு எண்ணமிட்டு இறுமாந்து இறும்பூதெய்திருந்தான் சுந்தரன் என்னும் இளைஞன்.

சுந்தரம் இருபதாட்டைப் பிராயத்தினன். வனப்பு அதிகமாய் வாய்க்கப் பெறுவிடினும், அவனைக் குரூபி என்று யாரும் சொல்லார். அவன் தேக அமைப்பு செவ்வனே அமைந்திருந்தது. அவன் முகம் ஒருவித பொலிவுடனே விளங்கிற்று. அவனை ஒரு முறை பார்த்தவர்கள் மறுமுறை பார்க்க விழையா விடினும் வெறுக்கார். ஸரஸ்வதி கடாக்ஷம் பூரணப் பெற்றிருந்தும், இலக்ஷ்மி சற்று பாரபக்ஷமாயிருந்ததால், திரவியம் தேடும் பொருட்டு சுந்தரம் கல்கத்தா நகரஞ் சென்றான். சிறிய அறை யொன்று வாடகைக்கு அமர்த்திக் கொண்டு தன் காரியத்தில் கண்ணா யிருந்தான். வழக்கம் போல் நன்றாய் இருட்டின பிறகு வருவதற்குப் பதிலாக ஒரு நாள் மாலை சுமார் ஐந்து மணிக்கே தன் அறைக்கு வந்தான். நாற்காலியில் அமர்ந்து ஏதோ யோஜனையில் ஆழ்ந்தான். சிறிது நேரத்தில் அவன் கண்கள் பலகணியின் வழியாகச் சென்று எதிர் வீட்டின் மாடியில் அமர்ந்துள்ள ஒரு பெண்மணியைக் கண்டன. கண்டதும் கண்கள் மலர்ந்தன, ஆனந்தம் அவனை அறியாமலே அவன் முகத்தில் தவழ்ந்தது. சற்று முன்னே அவன் மனதில் தோன்றின எண்ணங்களெல்லாம் எங்கேயோ ஓடி மறைந்தன. என்று மில்லாத ஒரு புத்துணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று. அந் நாரீமணி அவ்விடத்தை விட்டு அகன்ற பிறகே இவன் கண்களும் வேறு பொருளை நோக்கின.

## 2

தினந்தோறும் மாலை வேளைகளில் சுந்தரன் தன் மனதிற் கினியந்த மாதரசியைக் கண்டு களித்து வந்தான். ஒரு நாள் பார்க்கா விடில் அன்று அவன் கண்கள் தூக்கம் என்பதைச் சற்றேனும் அறியா, உணவின்றி படுக்கையில்

புரண்ட வண்ணமே இரவைக் கழிப்பான். இவ்வாறே நாட்கள் பல வாயின. வாரங்கள் சில சென்றன. ஒரு நாள் காலை உத்தியோக சாலைக்குப் போகும் போது தன்னை யாரோ கூப்பிடுங் குரல் கேட்டு, சுந்தரன் பிரமித்து நின்று விட்டான். அது கனவோ, நினைவோ என்று அவனுக்குப் புலப்படவில்லை. ஒருக்கால், தான் காதலிக்கும் பெண் மணியைச் சந்திப்பது போலவும் அவளுடன் சம்பாஷிப்பது போலவும் அடிக்கடி பகற்கனவு கண்டு கொண்டிருப்பதால், இன்று யாரோ அவ்வீட்டிலிருந்து அழைப்பது போல் தோன்றுகிறதோ என்று எண்ணமிடலானான். மறுபடியும் உரத்த குரலில் தன் பெயரை யாரோ உச்சரிப்பதைக் கண்டு தொனி வரும் பக்கமாய்த் திரும்பினான். உடனே எதிர் வீட்டிலிருந்து தன்னை அழைப்பது கனவன்று உண்மையே என்று கண்டான். கலாசாலையில் இரண்டு வருடங்களுக்கு முன் தன்னோடு கல்வி பயின்ற சிநேகிதனைக் கண்டதும் சுந்தரம் பெருமகிழ்ச்சி யடைந்தான். இவ்வளவு அருகிலிருந்தும் ஒருவரை யொருவர் பார்க்காமலிருந்ததில் அவர்கள் ஆச்சரியமும் விசனமும் அடைந்தனர். அன்று முதல் கோபாலன் தன் நண்பனை அடிக்கடி தன் வீட்டிற்கு வரும்படி வேண்டினான். எப்படியாவது தான் காதலிக்கும் கண்மணியைக்காண்போம், சந்தித்து வார்த்தையாடுவோம் என்று ஏங்கியிருந்த சுந்தரத்திற்கு, அவ்வனிதா ரத்தினம் கோபாலன் தங்கையானது இவனுக்கு எதிர்பாராத இன்பத்தைத் தந்தது. சாரலாவை அடிக்கடி சந்திக்கவும் சுந்தரத்திற்குச் சந்தர்ப்பங் கிடைத்தது.

## 3

சாரலாவின் செவ்வரி படர்ந்த கண்களும் பவள வாயும், அழகிய முகமும், மாந்தளிர் மேனியும் சுந்தரத்தை அவளுக்கு அடிமை யாக்கிக் கொண்டன. இவள் தனக்கு மனைவியாய் வாய்க்கப் பெறின் மணம்புரிவது; இல்லையேல் மணமே வேண்டியதில்லை என்ற ஒருமுடிவுக்கு சுந்தரன் வந்து விட்டான் என்று சொல்லவும் வேண்டுமோ? கண்டதுங் காதல் என்பதின் உண்மை நம் சுந்தரத்தினிடமே மெய்யாயிற்று.

காதல் நோயால் வாலிபன் பீடிக்கப்பட்டான். காதல் நோயின் கடுமை! அம் மம்ம!! சொல்லுந்தரமன்று. காதலால் இன்பமும் துன்பமும் கலந்தே வரும். ஆண்பெண் இரு பாலார்க்கும் காதல் பொது. பெண்கள் ஆண்களைப் போல் தங்கள் மனவெழுச்சியை எளிதில் வெளியில் காட்டிவிட மாட்டார்கள். இதனால் ஆண்களைப் போன்று பெண்கள் காதல் கொள்ளார் என்றாவது காதலித்தாலும் அவர்கள் அவ்வளவாக மனச்சஞ்சலம் அடையார் என்றாவது நினைத்து விடலாகாது. ஆனால், காதல் நோய் எவ்வளவு அதிகரித்தாலும் அவ்வளவையும் மனதில் அடக்கிக் கொள்ளுஞ் சக்தி ஆண்களை விட பெண்களுக்கு அதிகமுண்டு. வாலிபர்கள் தங்கள் காதலை வாய்விட்டு அரற்றுவர். பிறரிடமும் பிதற்றுவர். யுவதிகளோ மனதில் அடக்கிக் கொள்வதால் காதல் இன்னும் கொழுந்து விட்டெரியும். ஐயோ! பெண்கள் தங்கள் பேரன்பைக் காதலர்களுக்குத் தெரிவிக்காததால் எத்தனை வாலிபர்கள் தங்களைக் காதலிக்கவில்லையென்று எண்ணி மனமுடைந்து விடுகின்றனர். சிற்சிலர் தற்கொலையும் புரிந்து கொள்கின்றனர். என்னே காதலின் அபாரசக்தி! ஒருவனைக் காதல் சுலபமாய் இன்பக் கடலிலாயினும் துன்பக்கடலிலாயினும் ஆழ்த்தி விடும். காதல் ஒருவனை செயலற்றிருக்கவும் செய்யும்; பெரும் பணி யாற்றவும் ஊகிக்கும். காதல் கசடனைக் கல்விமானாக்கும்; உலோபியை ஒரு நொடியில் திருத்தி விடும்; மூர்க்கனைக் குணவானாக்கும். சாதாரணமானவர்களும் காதலின் சக்தியால் தூண்டப்பட்டு நூலாசிரியர்களாகவும் நவீன கர்த்தாக்களாகவும் திகழ்கிறார்கள்.

சுந்தரனது அகராதியில் மணமென்பது காதலர் இருவர் கருத் தொருமித்து பரஸ்பர அன்பால் பிணைக்கப்பட்டு நடாத்தும் இல்வாழ்க்கையே யாகும். முகவழகுடன் அகவழகும், நாகரீகம், அறிவு முதலியனவும் ஒருங்கே உருவெடுத்தாற் போல் திகழும் சாரலாவை மணப்பதற்குத் தான் சிறிதும் தகுதியற்றவன் என்று சுந்தரன் உணராமலில்லை. இருந்தாலும் காதல் பின்னாலிருந்து பிடர் பிடித்துத் தள்ள அதன் மாயவலையில்



அகப்பட்டு தன் அன்பின் பெருக்கால் அவளுக்கேற்றவனாகி விடலாம் என்ற எண்ணம் அவன் மனதில் ஸ்திரமாய்ப் பதிந்து விட்டது. தன்னை சாரலா வெகுவாய் நேசிப்பதாக இவன் கருதினான். அதற்குத் தக்க காரணங்களும் இல்லாமலில்லை. சாரலாவும் இவனை அடிக்கடி சந்திக்கவும் சம்பாஷிக்கவும் விரும்பினாள். என்னதான் மறைத்தாலும் காதலர்களின் கூரிய விழிக்கும் புலப்படாது போய்விடுமா? சுந்தரமும் சாரலாவும் ஒருவரை யொருவர் காணுந்தோறும் முகமலர்ந்தும் அகமகிழ்ந்தும் காணப்பட்டனர்.

## 4

நம் பாழும் ஹிந்து சமூகத்தில் காதற் பயிர் வளர இடமே யில்லை. ஒரு ஆடவன் ஸ்திரீயைத் தனிமையில் சந்திக்கலாகாது என்ற மூடபழக்கமும், தாய் தந்தையரே தங்கள் மக்களின் மணத்தை முடிக்க அருகர்கள், மணமக்களுக்குத் தங்கள் மணங்களில் யாதொரு சுயேச்சையான அதிகாரமும் கிடையாதென்ற அநியாயத்தடையும், காதல் மணங்களின் வளர்ச்சியைத் தடைப்படுத்துவ தல்லாமல் அவைகளின் வித்தையும் அழித்து விடுகின்றன. தெய்வீகம் பொருந்திய காதல் செழித்து வளராவிடில் மனமொத்த மணங்களும், இன்பவாழ்க்கையும் கிடையா; அன்பு நிறைந்த கணவன் மனைவியரும் அத்திப் பூவையே ஒப்பர்.

குறித்த நேரத்தில் சுந்தரன் பலகணியினருகில் அமர்ந்து சாரலாவின் அழகை அப்படியே பருகிவிடுவான்போன்று, அவளைக் கண்டு மகிழ்ந்தும் உள்ளங்களித்தும் வருவானாயினான். பல தினங்களாயினும் தன்மனதையும், அதன் போக்கையும் தனக்கு அவள் பாலிருக்கும் அன்பின் பெருக்கையும் அவளுக்கு அப்படியே திறந்து காட்ட சந்தர்ப்பம் வாய்க்கவில்லையே என்று வருந்தினான். சிற்சில சமயங்களில் தான் அவளைக் காதலிப்பது போல் தன்னை அவள் காதலிக்கிறாளோ இல்லையோ என்ற சந்தேகமும் அவனுக்கு அடிக்கடி தோன்றும். அவள் தன்னிடம் காட்டும் அன்பு உண்மை தானோ அல்லது இவன் தன் மனதால் தினம் தோற்றுவிக்கும் தோற்றங்களில் அல்லது காணும் பகற் கனவுகளில் ஒன்றோ? காதலி பேரன்பு காட்டுகிறாள் என்று காதலன் எண்ணி ஏமாந்து விடுவது முண்டு. இவ்வித சந்தேகங்களும் மனஸ்தாபங்களும் உண்டாவதற்குக் காரணங்கள் காதலர்கள் இடையூறின்றிச் சந்தித்து தங்கள் உள்ளக் கிடக்கையை ஒளிக்காமல் உரையாட சந்தர்ப்பம் இல்லாமையும், மனோ தைரியம் வாய்க்காமையும், மன வலிவிருந்தாலும், முதலில் தன் காதலை ஒப்புக் கொள்ள இஷ்டமில்லாமையுமே. எப்போதும் ஆண்களே தங்கள் காதலைத் தைரியமாய் தெரியப்படுத்துவார்கள். பெண்கள் தங்கள் அன்பை வாயால் வெளிப்படுத்தாவிடினும் குறிப்பாலாவது உணர்த்த வேண்டும்.

ஒரு பெண் தன் சகோதரன் சிநேகிதனிடம் எத்தகைய அன்பு காட்டலாமோ அத்தகைய அன்பையே சாரலாவிடஞ் சுந்தரம் முதலில் பெற்றது. சுந்தரம் வரும்போதெல்லாம் அன்பு நிறைந்த வார்த்தைகளால் உபசரிப்பாள். இந்த சிநேக பான்மை நாளடைவில் பெருகி அன்பாய் மாறிற்று. ஆனால் தன்னை மணப்பானோ என்ற சந்தேகத்தால் அது காதலாகவில்லை. மேலும், அவர்கள் மணமொத்த மணத்திற்குக் குறுக்கே பெருந்தடையாய் நின்றது ஜாதி வேற்றுமையே. சில வேளைகளில் அவனை மணம்புரிய ஆவல் மேலிட்ட போதிலும், இயற்கையாகவே பெண்கள் விசேஷமாய்ப் பெற்றுள்ள சிறந்த அடக்கத்தால், சாரலா தன் மனவெழுச்சியை அடக்கியே வந்தாள். இவள் சுந்தரன் மனப்பாங்கைச் சிறிதாவது அறிவாளாகில் அவனைக் காதலித்திருப்பாள். ஒருவர் கருத்தை மற்றவர் அறியாமையே அவர்கள் மனச் சஞ்சலத்திற்கு அடிப்படையாயிற்று. சுந்தரன் எப்படி தன் உள்ளக் கருத்தை வெளியிட நினைத்தானோ அவ்வாறே தானும் தன் உள்ளக் கிளர்ச்சியை உணர்த்த பலமுறை முயன்றாள். ஆனால் சுந்தரனே வாளாயிருக்கும் போது தான் எவ்வாறு தன் காதலை அவனுக்கு அறிவிப்பது? மேலும் இவர்கள் அடிக்கடி சந்தித்தாலும் தங்கள் பரஸ்பர அன்பை வெளியிட சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை; ஒருவர் மனமும் இடந்தர

வில்லை. இருவருடைய காதலையும் இவர்கள் அறியவில்லையே ஒழிய மற்றவர்கள் இவர்கள் மனோவேதனையும், காதல் நோயையும் அறியாம லில்லை. இவர்களுடைய செய்கை ஒவ்வொன் றிலும், பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும், அடிக்கடி தோன்றும் முகவேறு பாட்டிலும் சில வேளை இவர்கள் செயலற்றிருப்பதிலும் காதல் பிணி நன்கு வெளிப்பட்டது.

சுந்தரன் சாரலாவன்றி தன் வாழ்க்கை பய னுறாது, முற்றும் பெறாது என்று கருதினான். சாரலா, சுந்தரனைத் தவிர வேறு புருஷனுடன் தன் வாழ் நாளை அவ்வளவு குதூகலமாய்க் கழிக்க வியலாது என்ற முடிவுக்கு வந்தாள். சுந்தரனுடன் பேசாத விநாடிகளெல்லாம் வீணா யின்றனவே என்று எண்ணி ஏங்கினாள் சாரலா. ஒவ்வொரு வேளை சாரலா நாற்காலியி லமர்ந்து படிக்கும்போது தன் அருகில் சுந்தரன் அமர்ந்து தன் தேகத்தை அவனுடைய மிருதுவான கை களால் தடவுவது போலவும், தன் அழகிய செவ் விய இதழ்களில் அவன் காதல் முத்திரைகளா கிய முத்தங்கள் அளிப்பது போலவும், எண்ணி மகிழ்வாள். மறு நிமிடமே இது உண்மை யல்லவோ, கனவல்லவோ என்ற எண்ணம் மேலிட மனம் வருந்துவாள்.

சுந்தரனோ தூங்கும்போது கனவிலும், விழித் திருக்கும் போது தன் மனக் கண்ணிலுமிருந்து சாரலாவை சற்றேனும் பிரிந்தறியான். சாரலா என்னும் நாமத்தை தன் வாயால் உச்சரிப்பதி லேயே பெரு மகிழ்ச்சி அடைவான். தனித் திருக்கும் போது அவள் பெயரை பன்முறைப் பலவிதமாக உச்சரித்து உளமகிழ்வான். 'பார்த் தாலும், நினைத்தாலும், படித்தாலும், படிக்க படிக்கநின்று கேட்டாலும், பரிந் துணர்ந்தாலும், ஈர்த்தாலும், பிடித்தாலும், கட்டி யணைத்தாலும் இத்தனைக்கும் தித்திக்கும், இனித்த சுவைக் கரும்பே' என்ற அருட்பா, அவனுக்குச் சாரலா வை நினைக்குந் தோறும் ஞாபகத்திற்கு வரும். தன் காதலைத் தெரிவித்தால் அவள் தன்னை ஏற் றுக் கொள்ளாவிடில் என் செய்வது? தான் காட்டும் சிநேக பான்மையை அற்பன் காதல் என்று கருதிவிட்டாளே என்று நினைத்து விடு வாளானால் யாது புரிவது என்ற சந்தேகமே காதலை உணர்த்தத் தடையாயிருந்தது. சாரலா தன் உள்ளக் கருத்தை அநேக முறை குறிப்பா லுணர்த்தியும், சுந்தரன் அவைகளை யெல்லாம் தன்னுடைய காதல் பைத்தியத்தால் தோன்றும் தோற்றங்களாகவே முடிவு செய்து கொண் டான்.

## 5

காலச் சக்கரம் சுழன்று கொண்டே இருக் கிறது. அது ஒருவருக்காகவும் நில்லாது. காத லர்களுக்காகவும் இரங்காது. இவ்வாறு இர ண்டு மூன்றாண்டுகள் சென்றன. சுந்தரன் கல் கத்தாவை விட்டு போக வேண்டியதாயிற்று. முன் போல் சாரலாவைச் சந்திக்கவும் சந்தர்ப்ப மில்லை. சாரலாவின் பொறுமைக்கும் ஓர் அள வுண்டல்லவா? பல நாட்களாகக் காத்திருந்தும் சுந்தரன் தன் காதலை அறிவிக்க வில்லை. சார லாவை, மனதாரக் காதலித்த மங்கையை, மன திற் கியைந்த மாதரசியை, பேரின்ப பெருவெள் ளத்தைப் பிரிய வேண்டிய நாள் குறுகக் குறுக சுந்தரன் சரியாய்ச் சாப்பிடுவது மில்லை. அறை யில் தன் காலத்தைக் கண்ணீரும் கம்பலையு மாய்க் கழித்தான். சுந்தரம் சிறு பிள்ளையைப் போல் தேம்பித் தேம்பி அழும்போதும் அவன் கண்ணீர்த் துளிகளிலும் சாரலா தோன்றித் தோன்றி மறைந்தாள். படிக்கும் புஸ்தகத்தின் ஏடுகளும், படுக்கும் பஞ்சணையும், அவன் சார லாவை நினைத்து வருந்தி அழுங் கண்ணீரால் நனைந்தன. தேக வியாதியினும், மனோவேத னையே மனிதனை அதிகமாய் வருத்துகிறது. சுந்தரனுக்கு நாளடைவில் தேகம் மெலிவுற் றது. தற்கொலை செய்து கொள்வோமென்று யோசித்தான். ஆனால் அது பேடிகள் செய்கை யென்று விடுத்தான். உயிருடனிருந்து மண மின்றி ஆயுள் பரியந்தம் ஒருவித இன்பமும் அனு பவியாமல், அவள் தனக்கு மனைவியாக அமையா விடினும், சந்தோஷத்துடன் சீரும் சிறப்புமாய் தன் கணவனுடன் வாழவேண்டுமென்று ஆண் டவனை வழுத்திய வண்ணமே, இப்பயனற்ற வாழ்க்கையை வெறுத்தான். உயிருடனிருந் தும் உயிரற்ற நடைப் பிணமானான். ஒரு பைத்தியம் போன்றே அவன் இவ்வுலகில் உலவி வருவானாயினான். சாரலாவின் பிற்கால வாழ்வு என்னவாயிற்று என்று அறிய வெகுவாய் முயன் றும் முடியவில்லை. ஆனால், இன்னும் சுந்தரம் சாரலாவை மறந்தவனல்ல.

---

போலீஸ்காரன்:—ஏ! தண்ணீரை விட்டு வெளியே வா, ஐயா! இங்கே குளிக்கக் கூடாது முனிஸிபாலிடி உத்தரவு.

தண்ணீருக் குள்ளிருக்கும் கௌரவமான மனிதன்:—நான் குளிக்கவா செய்கிறேன் நான் ஸ்நானம் செய்கிறேனய்யா!




# ஸரோஜனி

---

### ஓர் இனிய தமிழ் நாடகம்.

---

ஸ்ரீமான். கீழ்வீதி பிரயாகை சேஷாத்திரி ஐயங்கார் எழுதியது.

(உரிமை ஆசிரியருக்கே சொந்தம்.)

———:o———

முதல் அங்கம்: நான்காம் களம்:

இடம்:—மாளவ நாட்டு ஆஸ்தான மண்டபம்

காலம்:—நண்பகல்

(காஞ்சேயன், சிம்மாசனத்தில் அமர்ந்த வண்ணம் பாலநேசன், பிரதாபன், மகபதி, விசித்திரன் பிரவேசம்)

காஞ்:—உஜ்ஜனீகாவல வருக! இவ்வாஸனத்தில் அமர்க! எம்மால் உம்மை எவ்வளவு திருப்தி செய்ய இயலுமோ அவ்வளவும் செய்கின்றோம், ஏனையோர் யாவரும் அவரவர் ஆஸனத்தில் அமரட்டும். இது தருணம் தூதுவனாக வந்திருக்கும் ஆதித்தருக் குத் தகுந்த மரியாதை செய்து, தக்க ஆஸனமளித்துக் கௌரவப்படுத்துங்கள். என் னருங் கண்மணி ஸரோஜனியும் இவ்வவையில் வரட்டும், வம்மின், ஆதித்தரே!

ஒருபுறம் ஆதித்தனும், ஸுரேந்திரனும்; மற்றொரு புறம் ஸரோஜனியும் லலிதாவும் பிரவேசம் வம்மின்! வீற்றிரும் இவ்வாஸனத்தில், ஆதித்தரே! யாது விசே ஷம் நீர் தூதுவராகவா உட்கார்ந்த வண்ணம் ஓர் ஆஸனத்தைச் சுட்டிக்காட்டல்.

ஆதி:—மன்னாதி மன்னா! விதர்ப்ப நாட்டிறைவர், ராஜமார்த்தண்ட, வீரதீர, பராக்கிரம ஜெய சிங்க, ராஜேந்திர வர்மர், என்னை இம்மாளவ நாட்டுப்பதியாய ஜெயப் பிரதாப வீரசிம்ம காஞ்சேய வர்மராகிய உம்மிடம் ஓர் அவசர நிமித்தம் தூதாக அனுப்பி யிருக்கின்றார் என் மூலமாய் அவர் உமக்கு வந்தனம் புரிகின்றார் அவரிடும் கட்டளையை ஒத்துக் கொள்ளல் உமக்கு நீதி ஒவ்வாவிடில், விகற்பமாயும், மனஸ்தாபத்திற் கிடமாயும் விஷயம் போய் முடியும். சாதாரண மனிதர்கட்குப் பேராசையும் பொறாமையும் இருந் தால் பாவமாம். நராதிபர்களுக்கு அந்த அசூயை முதலியனவே பிரதானமாம்.

**காந்:**—என்ன ஆதித்தரே! என்னென்னமோ பேசுகின்றீர் வீண் வார்த்தை எதுக்கு, வில்லும் மனத்திலிருப்பதை சொல்லும். இது ராஜ சபை என்பதை தள்ளும் வீண் வார்த்தைகளை பகரும் சீக்கிரம் விஷயத்தை.

**ஆதி:**—ராஜ ஸ்ரேஷ்டரே! முனியாதிரும் என் மீது பகருவேன் என்னுள்ளத்திலிருப்பதை உமது திவ்விய சுந்தரவதன வினிதா சிரோமணியான ஸரோஜனியின் எழிலைக்கேட்டு எம்மிறைவர் ராஜேந்திரர் அப்பொன் நங்கையையே மணக்க எண்ணங் கொண்டுள்ளார் அம்மங்கையர்க் கரசியைத் தம்முயிரினும் மேலானதாகக் கொண்டு, இவ்வவனியில் அவளைவிட அவருக்கு அடைய வேறு ஒன்றும் இல்லையென மனங் கொண்டிருக்கின்றார். ஸரோஜனியையே சதா சர்வகாலமும் ஸ்துதிசெய்து வருகின்றார். அவளையே தன் நாயகியாக அடையத்தீர்மானித்திருக்கின்றார்.

**காந்:**—அவர் கேட்பதை மறுதளிக்காது ஒத்துக் கொண்டாலோ.

**மக:**—அல்லது மறுத்து உத்தரமளித்தால் வருவது என்னோ பின்.

**ஆதி:**—அமாத்ய சிரேஷ்டரோ! மும்முரமான யுத்தமே பின் வருவது ஜெயித்தவன் அபஜெய மடைந்தவனை என்னவேண்டுமானாலும் செய்யலாமல்லவா?

**மக:**—ராஜாதிராஜா! இப்பிரசனத்திற்கு நான் உத்தரமளிக்கின்றேன். ஆதித்தரே! என்னதான் கொஞ்சம் படைகளின் பலம் இருந்தால் என்ன? ஜெயம் உமது அரசரது என்பதை எவ்விதம் திடமாகக் கொள்ளலாம். எதற்கும் ஸ்ரீராமசந்திர மூர்த்தியினது துணை அவசியம் அல்லவா? அதர்ம யுத்தத்திற்கும் பகவான் சகாயம் புரிவாரோ? பெண்ணின் நிமித்தம் அழிந்தோர் பலர் அவர்களில் ஒருவராக இவரும் ஆகப் போகின்றனர் போலும்.

**பிரத:**—(எழுந்து) தூத! என்னைவிட உன் அரசன் பலவானா! தீரனா? அல்லது சண்டையில் தேர்ந்தவனா? என்தேகத்தில் ஓடும் ரத்தத்தைப் போலவே அவனது சரீரத்தில் பிரவாகிக்கும் உதிரமும் இருக்கின்றது எனது கட்சமும் ராஜேந்திரனது வாள்போன்று கூருடன் இருக்கின்றது. என்னிதயம் நின்மன்னனின் இருதயத்தைவிட மாசின்றி மாட்சிமையுடன் விளங்கு கின்றது நானும் உனது அரசனுடன் யுத்தம் செய்யத் தைர்யமாகவே இருக்கின்றேன். என்மனம் தூண்டுகின்றது இதுவே சமயம் தோள்களும் சலித்துக்கிடக்கின்றன. கைகளும் ஓய்ந்து இருக்கின்றன. பார்ப்போம் நின் அரசன் சாமார்த்தியத்தை நான் அஞ்சாத வெஞ்சின முடையவனாகவே இருக்கின்றேன் (உட்காருகிறான்).

**விசி:**—நானும் அப்படியே சண்டைக்குத் தயாராய் இருக்கிறேன்.

**பால:**—என்னமோ யாவரினும் மேம்பாடுற்றிருப்பதாக நீரும் உமது அரசரும் மட எண்ணங் கொண்டு மனப்பால் குடித்திருக்கின்றீர்கள். தர்மம் என்னும் நங்கூரத்தை நடுக்கடலில் பாய்ச்சி, ராஜ்யபாரம் என்னும் கப்பலிற்கு அதையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறோம் நாங்கள் யுத்தம் என்னும் பெரும் புயல் கர்ஜித்து அடித்த காலத்தும், அந்த தர்ம ஆதாரத்தைக் கைவிடோம். அதுவே எங்களுக்குப் பெரும் துணை அதைக்



கடைப்பிடிப்பதில் எத்துணைய கஷ்டங்கள் நேர்ந்தகாலத்தும் கடைசியில் தர்மமே ஜெயமடையும் அதர்மமே அடியோடு அழிவுறும் ஆதித்தரே! இது நிச்சயம்.

**காந்:**—ஆதித்தரே! இதுவரை இவர்கள் சொன்னவைகளைக் கேட்ட நீர் நான் விளம்புவதையும் சற்றுக் கேளும் என்னை வாட்டும் விஷயங்கள் இரண்டே என் தாய் நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமையும், என தரும புத்திரியின் வாத்ஸல்யமுமே. முதல் கடமையை நிறை வேற்றாமல் போனால், வேற்றரசர் யாவரும் என்னை நிந்திக்கவும், அந்நிந்தனைகளுக்கு நான் பாத்திரனாகவும், மனிதரில் நான் கடையவன் எனப் பெயர் வகிக்கவும் என்மனம் இசைய வில்லை. நான் தந்தை என்பதை மறந்து பயப்பட்டோ அல்லது லாபத்தைக் கருதியோ, கண்டவனுக்கு என்னரும் மகளைக் கொடுத்து, அவளது வாணாளை வீணாக்க என் மனம் பூரணமாக ஆட்சேபிக்கின்றது ஆதித்தரே! அவள் ஒருவளே எனக்குச் சந்ததி. புத்திர பாக்யம் இல்லாமற் போயினும் புத்திரியையாவது எனக்குப் பகவான் கிருபை கூர்ந்து அளித்தாரே. அதுவும் பூர்வ ஜென்மத்தில் நான் செய்த மாதவப்பயனே. இதுவே பண்டைக் காலமா யிருப்பின் மங்கையர்களினிமித்தம் வேந்தர்கள் பலர் முன் வந்த யுத்தம் புரிவர். அவளது எழிலைக் காக்க இது தருணம் கட்கங்களும் வீரர்களும் தேவையாக இருக்கின்றன.

(காட்சி முடிகிறது.)

---


## ஜோதிட நிபுணர்.

அஷ்ட மங்கள பிரசன வல்லபர்.

சுமார் ஒரு வருஷத்திற்கு மேல் மிஸ்டர். வி. சுப்பிரமணிய சாஸ்திரிகளைத் தெரியும். அவருடைய ஜோதிடத்தை அநேக தடவைகளில் பரிக்ஷித்தேன். அவர் சொன்னதில் ஒரு தரமாவது தவறாயிருந்தது மிகவும் மெச்சத்தகுந்தது. எப்பொழுதும் எனக்கு நம்பிக்கையுண்டு.

பி. பி. ஸ்ரீ அரிராவ்,
*I. G. of Registration,*
மதறாஸ். 5-5-'31

ஒரு ஜாதக பலன் நேரில் கேட்க ரூ. 5, ஒரு வருஷ பலன் எழுத ரூ. 3, 3-வருஷ பலன் ரூ. 7, ஒரு ஜாதகம் குறிக்க ரூ. 3, நான்கு கேள்விகளுக்குப் பதில் ரூ. 1, வி. பி. சார்ஜ் தனி. முழு ஜாதக பலன் எழுத ரூ. 25. ஜாதகமாவது பிறந்த வருஷம், மாதம, தேதி, நாழிகையாவது வேண்டும். எதிர் காலத்தை உள்ளபடி உரைப்பவர் என்று பாரிஸ்டர் வி. கே. ஜானும், ரிடையர்டு போலீஸ் சூப்பரின்டெண்டு எ. சுப்பாராவும், ரிஜிஸ்டிரேஷன் இன்ஸ்பெக்டர் ஜெனரல், ராவ்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் அவர்களும் கூறுகின்றனர்.

வித்வான் கே: வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,
302, லிங்கச்செட்டி தெரு, மதறாஸ்.

USE ALWAYS - - -

- - - BEST MISKY

GANDHI ASSAFOETIDA



உயர்ந்த மிஸ்கி

காந்தி பெருங்காயம்

GOPALJI CHAMPSHI & CO.,
21, GOVINDAPPA NAICK STREET
G.T. MADRAS.

கோபால்ஜி சாம்பஷி அண்டு கோ.,

21, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவு,

ஜி. டி. மதருஸ்.



## விஜய ரக்ஷித கவசம்.

நீங்கள் என் கவலைப் படுகிறீர்கள்? நீங்கள் நற் கியாதியுடனும், தனசமர்த்தியுடனும் இருக்க விரும்புகிறீர்களா? புத்திர சந்தானத்தை விரும்புகிறீர்களா? கிரக தோஷங்களிலிருந்து விடுபட்டு, ஆரோக்யம் ஐஸ்வர்யத்தை விரும்புகிறீர்களா? தரும நியாயமான எக்காரியத்திலும் ஜெயத்தை விரும்புகிறீர்களா? தங்கள் தொழிலில் மேன்மையடைய எண்ணுகிறீர்களா? குடும்ப வாழ்க்கையில் ஒற்றுமை வேண்டுமென்கிறீர்களா? அப்படியாயின் ஓர் அபூர்வ மூலிகையினலும், ஜப, தப, ஹோமாதிகளாலும் தயாரிக்கப்படும் விஜய ரக்ஷித கவசத்தை அணியுங்கள்.

வெள்ளி ரூ. 5. தங்கம். ரூ. 15.

விலாசம்:-பிரபசர். கா· கோவிந்தாச்சாரியார்,
"சரஸ்வதி" 4, எல்டாம்ஸ் ரோட், தேனம்பேட்டை போஸ்ட், மதருஸ்.








## கணித ஜோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும், விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் 2. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் 1. விவாக விஷயம் ரூபாய் 1. விவாக விஷயத்தைப் பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக ஜோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப் பலன்களாயிராமல், விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது, கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

விலாசம்:—தே. ஆறுமுக செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

**சாதன ஔஷதாலயம்,** டெக்கா, (பெங்கால்.)

— ஆதக்யர் —

கோகல் சந்திரபோஸ், M.A.F.C.S., (London.)

பாகல்பூர் காலேஜ் மாஜி பிரபொஸர்.

ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி செய்த பிரசித்தி பெற்ற மருந்துகள். கேட்லாக் இனும்.

**மகரத்துவஜா** (ஸ்வர்ண செந்தூரம்.)

அசல் தங்கம் கலந்த செந்தூரம், தோலா 1-க்கு விலை ரூபா 4

எல்லாவித பல வீனங்களுக்கும் சிறந்தது.

சாராபாடி சரசா.

வெள்ளை, வெட்டை, முதலிய மேக வியாதிகளுக்கு சிறந்தது.

விலை சேர் 1-க்கு ரூபா 3.

சுகர சஞ்சீபன்.

நரம்பு தளர்ச்சிக்கும், தாது புஷ்டிக்கும் சிறந்தது. சேர் 1-க்கு விலை ரூபா 1-6-0.

**வீனஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.**

**தலைமை ஆபீஸ்: டெல்லி.**

(ஸ்தாபனம் 1920.)

கவர்ன் மெண்டாரிடம் ஜாமீன் கட்டப்பட்ட தொகை ரூ.2,00,000.

பாலிஸிதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமைத் தொகை ரூ. 5,00,000க்குமேல்.

இன்ஷ்யூரன்ஸ் சட்ட திட்டங்களுக்குக் கொஞ்சமும் மாறாத விதிகளுடைய கீழ்கண்ட புது ஏற்பாடுகளை நாம் இப்பொழுது தொடங்கி யிருக்கிறோ மென்பதை பொது ஜனங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்:—

1. மாஸ் இன்ஷ்யூரன்ஸ் (Mass Insurance.)
2. கோ-ஆப்ரேட்டிவ் பெனிபிட் ஸ்கீம் (Co-operative Benefit Scheme.)

மேற்கண்ட இரண்டு திட்டங்களும், எமது பிரக்யாதிபெற்ற கணக்குப் பரிசோதகரான ஜி. எஸ். மாரத்தே, எம். ஏ. (Bom) ஏ.ஐ.ஏ.(Lon) பூனா, என்பவரால் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

முழு விபரங்களுக்கும் கீழ்கண்ட கிளை ஆபீஸ்களிலொன்றுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்:—

22, செக்கன்ட் லைன் பீச், மதராஸ். | 37, எம்பெரர் தெரு, தூத்துக்குடி.

சுதேசியமே சுயராஜ்யத்திற்குவழி.

**கிருஸ்துமஸ், புது வருஷ, பொங்கல் பண்டிகைகள் வந்து விட்டன.**

உங்களுக்குத் தேவையுள்ள ஆடைகள், வெகுமதிச் சாமான்களுக்கு எங்கள் ஷோரூமை முதலில் பார்வையிடுங்கள். புதிய ரகம், குறைந்த விலை. நாகரீகம், ரம்மியம் வாய்ந்தது.

**எங்கள் கடையே ஸ்வதேசி சர்ட்டிபிகேட் பெற்றது.**

எங்களிடம் சுதேசி கைக்குட்டை, சர்ட்டிங், கோட்டிங், சூட்டிங் சாராக பெண்களுக்குத் தேவையான சுவதேசி பூனாபாட்டரன் சேலைகள், வாயில் புடவைகள், பங்களூர் பாட்டர்ன் புடவைகள், ரவிக்கை ஜாக்கட், பிராக் முதலியவைகளுக்குத் தேவையான பியான்ஸித் துணி ரகங்கள் ஏராளமாக ஸ்டாக்கில் உண்டு.

இதுவே தக்க தருணம் வந்து பாருங்கள், திருப்தி யடைந்தால் எங்களிடமே வாங்குங்கள்.

**தி. ஜெனரல் ஸ்வதேசி லிமிடெட்.**

368, எஸ்பிளனேட் சென்னை.

**P. KOTHANDARAM PILLAY**



SON OF LATE

**P. S. PONNUSAMY PILLAY**

உயர்ந்த மர சாமான் வியாபாரிகள்;

நம்பிக்கையான இடம்.

நேர்த்தியான கட்டில், நாற்காலி, மேஜை, பீரோ மற்றும் பல மரசாமான்கள் உடனுக்குடனே செய்து கொடுக்கிறோம்.

**பி. கோதண்டராம் பிள்ளை,**

பி. எஸ். பொன்னுசாமி பிள்ளை கட்டிடம்.

39, எஸ்பிளனேட் (மேற்கு) மதராஸ்.

166421

## குணத்திலும், மணத்திலும் சிறப்புற்றோங்குவது

# ஜே. எஸ். டௌக்ளஸ்
# ஓடிகோலோன் சோப்.




விலை உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிப்பதினால் திரேகத்திற்கு ஆரோக்கியத்தையும், நல்ல தேஜஸுடன் சர்மத்தை பாதுகாக்கின்றது.

மணத்திலும் குணத்திலும் இதற்கிணை கிடையாதென்பதை சென்ற 100 வருஷங்களாக ருஜுப்பிக்கப் பெற்றுள்ளது.

**உங்கள் மனதுக்கு திருப்தியளிக்கக் கூடியது இது ஒன்றே.**

**இன்று முதல் டௌக்ளஸ் சோப்புகளையே உபயோகித்துப் பாருங்கள்.**

*Sole Agents:*

**LUCKMAN & CO.,**

Soap & Perfumery Merchants,
302, LINGI CHETTY STREET, MADRAS.

# வைரங்கள்.



ஆண்ட்வெர்ப், ஆம்ஸ்டர்டாம் முதலிய இடங்களிலிருந்து நேராக ரொக்கக் கொள் முதலுக்கு வைரங்கள் வரவழைப்பதால் நாங்கள் கொடுக்கும், சகாய விலைக்கு யாரும் கொடுக்க முடியாது. சிறு ஆர்டர் செய்து பார்த்தால் உண்மை விளங்கும்.

**THE DIAMOND IMPORT CO.,**

247, CHINA BAZAAR ROAD,
*Upstair, opposite to Flower Bazaar Police Station,*
MADRAS

ரஸாயனங்களுக்கு ராணி

லோத்ரா




கேசரி குடீரம்,

ஆயுர்வேத ஔஷத சாலை

எழும்பூர் :: :: மதராஸ்

*Lodhra Press, Colour Printers, Egmore, Madras*